# உதயன்

சுடர்: 29 கதிர்: 291 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 28, சனி 13.09.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

24 பக்கங்கள்

யாழ். - 20/=
வன்னி - 20/=




இன்று ஆரம்பமாகிறது சம்பியன் லீக் ரி - 20

பக்கம் 18

தெளிவான வானிலை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# தமிழ் மக்கள் மீதான காழ்ப்புணர்வை சிங்களவரிடையே வளர்க்கிறார் கோத்தா

## பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டுகின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்



யாழ்ப்பாணம், செப். 13
"நாட்டின் சுமுக நிலைக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலும், தமிழ் மக்கள் மீதான காழ்ப்புணர்வை சிங்கள மக்கள் மத்தியில் தூண்டும் வகையிலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அரசியல் ரீதியான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார். அதனால் ஏதாவது நடைபெறுமானால் அதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரே பொறுப்பேற்க வேண்டும்"- இவ்வாறு பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஃ.ஏ. சுமந்திரன்.
"பிளவுபடாத நாட்டுக்குள் அரசியல் தீர்வை நாங்கள் கோருகின்றோம் என்று தெளிவாக தமிழரசுக் கட்சித் தீர்மானத்தில் நாங்கள் கூறியுள்ளோம். ஆனாலும் பாதுகாப்பு

22 ஆம் பக்கம் பார்க்க

## மஹிந்த நாட்டைப் பிரிப்பதாக கோத்தாவே குற்றஞ்சாட்டுகிறார்

யாழ்ப்பாணம், செப். 13
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டைப் பிரிக்கப் பார்க்கின்றார் என்று அவரது தம்பியும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.
தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் வரவேற்பு நிகழ்வில் நேற்றுக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"தமிழரசுக் கட்சியின் தீர்மானங்களில் அதிகூடிய அதிகாரப் பரவலாக்கம் பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். இந்த நாட்டில் அதிகூடிய அதிகாரப் பகிர்வு மூலமாக தீர்வு கிடைக்க வேண்டும் என்று சொன்னதை, நாட்டின் ஒற்றுமைக்குப் பாதகமானது என்று பரதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறுகின்றார்.
இந்த அதிகூடிய அதிகாரப் பகிர்வு என்ற சொல்லை முதலில் உபயோகித்தது அவ

22 ஆம் பக்கம் பார்க்க

## மாவைக்கு அமோக வரவேற்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகப் பதவியேற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவை வரவேற்கும் நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் வெகு விமரிசையாக நடைபெற்றன.

(விரிவான தகவல் 13 ஆம் பக்கத்தில்)



தமிழரசுக் கட்சி தலைமை அலுவலகத்தில் மாவை சேனாதிராசா

## 65 ஆண்டுகளுக்கு முந்திய விகாரையை தேடுகிறாராம் பௌத்த பிக்கு

யாழ்ப்பாணம், செப். 13
தையிட்டியில் 1950 ஆம் ஆண்டுக்கு முன்னர் விகாரை இருந்தது எனத் தெரிவித்து, அங்கே மீளவும் விகாரை அமைப்பதற்கு விகாரைக் காணியை உறுதிப்படுத்தித் தருமாறு வலி.வடக்குப் பிரதேச சபையிடம், களுத்துறையிலுள்ள விகாரையின் பிக்கு ஒருவர் கோரியுள்ளார்.
தையிட்டியில் 1950 ஆம் ஆண்டுக்கு முன்னர் திஸ்ஸ விகாரை அமைந்திருந்தது என்றும், அதன் பின்னர் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக, அதன் தலைமை பிக்கு மற்றும் ஏனையோர் விகாரையைக் கைவிட்டு வெளியேற நேர்ந்தது என்றும் களுத்துறை விகாரையின் பிக்கு பத்திரட விமராத தேரோ பிரதேச சபைக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.
விகாரைக்குரிய காணியின் உறுதி இருக்கின்றது என்றும், அதனை உறுதிப்படுத்தித் தருமாறும் அவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## சுண்ணக்கற்கள் அகழ்வோர் மீது விரைவில் நடவடிக்கை

### வலி.கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.13
வலி.கிழக்கு பிரதேச சபையில் அனுமதி இன்றி சுண்ணாம்புகல் அகழ்வோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் சபையின் தவிசாளர் கே.துரைசிங்கம்.
"குறித்த பிரதேசத்தின் அனேகமான பகுதிகளில் வியாபார நோக்கத்துக்காக கல் அகழ்ப்படுவது அதிகரித்து வருகின்றது. இவ்வாறு கல் அகழ்ப்படுவதால் சம்பந்தப்பட்ட

22 ஆம் பக்கம் பார்க்க

## மண்கும்பானில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 13
ஊர்காவற்றுறை மண்கும்பானில் உருக்குலைந்த நிலையில் பச்சை குத்தப்பட்ட அடையாளத்துடன் சடலம் ஒன்றை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

22 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச பங்கேற்புடன் பேசுவதற்கு நாம் தயார்

### தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் திட்டவட்டமாகத் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 13
"நாம் சட்ட - ஒழுங்கை நடைமுறைப்படுத்தக் கூடிய அதிகாரங்களையே கேட்கின்றோம். படையணிக்குரிய அதிகாரத்தைக் கோரவில்லை. சர்வதேச பங்கேற்புடன் - வரையறுக்கப்பட்ட காலத்தினுள் நடைபெறும் பேச்சுக்கு நாம் தயார்"- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்

22 ஆம் பக்கம் பார்க்க

## மோடி தலைமையிலான இந்திய அரசு புதிய கொள்கைகளுடன் செயற்படும்

### தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் மாவை சேனாதிராசா எம்.பி. நம்பிக்கை

யாழ்ப்பாணம், செப். 13
"இந்தியாவின் முன்னைய மத்திய அரசில் சில குறைபாடுகள் இருந்தன. அந்த அரசின் கட்சித் தலைவியான சோனியா காந்தி தனது கணவர் கொல்லப்பட்டமை தொடர்பில் கொண்டிருந்த அபிப்பிராயங்களாலேயே அந்தக் குறைகள் காணப்பட்டன. ஆயினும் தற்போதைய மோடி தலைமையிலான அரசு புதிய கொள்கைகளுடன் செயற்படும் என்ற நம்பிக்கை இருக்கின்றது" - இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகப் பதவியேற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா.
தமிழரசுக் கட்சியின் 15ஆவது தேசிய மாநாட்டில் அந்தக் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டிருந்தார் மாவை சேனாதிராசா. அவர் நேற்று யாழ்.பொதுநூலகத்துக்கு அருகே அமைக்கப்பட்டிருக்கும் தந்தை செல்வா நினைவுத் தூபிக்குச் சென்று மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்திய பின்னர், யாழ்ப்பாணம், மார்ட்டீன் வீதியிலுள்ள உள்ள தமிழரசுக் கட்சியின் தலைமை அலு

22 ஆம் பக்கம் பார்க்க

## முதலமைச்சர் ஏன் எமக்கு கூறவில்லை?

### கேள்வி கேட்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், செப். 13
தன்னைப் புகைப்படம் பிடிக்கிறார்கள் என்று கூறும் வடமாகாண முதலமைச்சர் தனக்குப் பாதுகாப்புப் பிரச்சினை இருந்தால் அது தொடர்பில் பொலிஸாருக்கு ஏன் அறிவிக்கவில்லை- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் யாழ்.பிராந்

22 ஆம் பக்கம் பார்க்க

# தேர்தல் சட்டங்களைக் காப்பதில் தடையாக இருப்பது ஜனாதிபதியே

## குற்றஞ்சாட்டுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, செப்.13

"தேர்தல் சட்டங்களைப் பாது காப்பதில் முதன்மையான தடையாக இருப்பது ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவே" - என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க.

"பாடசாலை கட்டடங்களை திறப்பதையும் ஜனாதிபதி தனது தேர்தல் பரப்புரையாக பயன்படுத்தி வருகிறார். ஜனா திபதி தனக்கு வழங்கப்பட் டுள்ள அதிகாரங்களை முறை கேடாக பயன்படுத்துகிறார். நாட்டின் முதல் குடிமகன் என்ற வகையில் சட்டத்தை காப்பது தொடர்பில் அவர் முன்னுதார ணமாக இருக்கவேண்டும்."- என்றும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.



"நியாயமான, சுதந்திரமான தேர்தலை நடத்த அவரே தலையிட வேண்டும். எனி னும் பட்டப்பகலில் ஜனாதிபதி தேர்தல் சட்டங்களை மீறி வருகிறார். ஜனாதிபதியே இப் படி செயற்படும் போது சஷீந் திர ராஜபக்ஷ, அமைச்சர் விஜித முனி சொய்சாவின் மகன் போன்றோர் எப்படி செயற்படு வார்கள்?. ஊவா மாகாண சபைத் தேர்தலை தனிமைப் படுத்தப்பட்ட தேர்தலாக கருதி விட முடியாது. ஜனாதிபதி ராஜபக்ஷ தனது அடுத்த அதி காரத் திட்டத்தின் ஒரு பகுதி யாக இந்த தேர்தலை மாற் றியுள்ளார்."- என்றும் அவர் சாடியுள்ளார்.

"2017 ஆம் ஆண்டு நடத்தப் பட வேண்டிய ஜனாதிபதித் தேர்தலை 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதமோ அல்லது மார்ச் மாதமோ நடத்த ஜனாதி பதி திட்டமிட்டுள்ளார். அத னைப் பரீட்சித்து பார்ப்பதற்கா கவே ஊவா மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுகிறது. வெற்றி தோல்வியை கணிக் கும் தேர்தலாக அவர் இதனை கருதுகிறார். அதனாலேயே இது வரை நடத்தப்பட்ட தேர்தல் களை விட இந்த மாகாண சபைத் தேர்தல் ராஜபக்ஷவி னருக்கு முக்கியமானதாக மாறியுள்ளது."- என்றும் அனுர குமார சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஏனைய மாகாண சபைகளு டன் எடுத்துக் கொண்டால், இந்த மாகாணத்தின் முதல மைச்சர் வேட்பாளர் ஜனாதி பதியின் குடும்ப உறுப்பினர் என்பது முக்கியமானது. அத னால், இந்த தேர்தல் ராஜ பக்ஷ ஆட்சிக்கும் அவரது குடும் பத்தினருக்கும் எதிராக நாட் டில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பை காட்டும் தேர்தலாக இருக்கும் என்று அரசு அறிந்துள்ளது. குறைந்த வசதிகளை கொண்ட கஷ்ட பிரதேசமாக இந்த மாகாணம் இருப்பதும் அரசு எதிர்கொள்ளும் மற்று மொரு சவாலாகும்"- என்றும் அவர் ஊடகவியலாளர் சந்திப் பில் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# 16,000 ஆண்டுகளுக்கு முன்னைய மனித எலும்பு

## இலங்கையில் கண்டுபிடிப்பு

கொழும்பு, செப்.13

இரத்தினபுரி மாவட்டம் பலாங்கொட குருகல காட்டுப்பகுதி யில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராச்சியின் போது, கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புகள் 16 ஆயிரம் ஆண்டு களுக்கு முன்னர் வாழ்ந்த மனிதனுடையவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

விஞ்ஞான ரீதியான கால நிர்ணயத்துக்கு அமைய இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை தொல் பொருள் திணைக்களத்தின் முன்னாள் பிரதிப் பணிப் பாளர் கலாநிதி நிமல் பெரேரா தெரிவித்துள்ளார். இங் கிலாந்தின் கேம்பிரிஜ் மற்றும் ஒக்ஸ்பேர்ட் பல்கலைக் கழகங்களில் மேற்கொள்ளப்பட்ட 'பீடா' எனலடிக் என்ற கால நிர்ணய ஆய்வு முறையின் அடிப்படையில் இது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு மே மாதம் மேற்கொள்ளப்பட்ட அகழ் வாராச்சியின் போது இந்த மனித எலும்புகள் கண்டு பிடிக்கப்பட்டன. வறண்ட மற்றும் ஈரவலயப் பகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதியில் இருக்கும் குருகல பிரதேசத்துக்கு அருகில் பெல்லான்பெதிபெலஸ்ஸ என்ற பகுதியில் ஏற் கனவே பண்டைய கால மனிதனின் எலும்புகள் கிடைத் திருந்தன. அவை 13 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னை யவையாகும். (ற)

# இலங்கைப் படைகளை இணைத்தது எவ்வாறு?

## ஐ.நாவிடம் கேள்வி எழுப்புகிறது இன்னர் சிட்டி பிரஸ்

நியூயோர்க், செப்.13

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படையில் இலங்கைப் படையினர் இணைக்கப்பட் டுள்ளமை தொடர்பில் இன் னர் சிட்டிபிரஸ் இணையத் தளம் கேள்வி எழுப்பியுள் ளது. நேற்றுமுன்தினம் ஐக் கிய நாடுகள் சபையில் வைத்து இன்னர் சிட்டிபிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

2009ஆம் ஆண்டு பல்லா யிரக்கணக்கான பொதுமக் களைக் கொன்று குவித்து போர்க் குற்றத்தில் ஈடுபட்டமை தொடர் பில் இலங்கை இராணுவத் தினருக்கு எதிராக போர்க் குற்ற விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. ஆயி னும் ஐ.நாவின் அமைதிகாக் கும் படையில் இலங்கை இரா ணுவத்தினர் இணைக்கப்பட் டுள்ளதுடன், மத்திய கிழக்கு ஆபிரிக்காவில் அவசர ஹெலிக் கொப்டர் சேவையை நடத்தும் முக்கிய பொறுப்பும் அந்தப் படையினரிடம் வழங்கப்பட் டுள்ளது.



இப்படியான பின்னணியில் அவர்களை ஐக்கிய நாடுக ளின் அமைதி காக்கும் படை யில் எவ்வாறு இணைத்துக் கொள்ள முடியும் என்று கேள்வி எழுப்பப்பட்டது. ஆயினும் மத் திய ஆபிரிக்க நாடுகளில் உள்ள அமைதி காக்கும் படையின் தலைவர் ஹார்வ்லட்சோ இதற்கு பதில் வழங்க மறுத்து விட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 9ஆம் திகதி இலங்கை விமானப் படைக்கு சொந்த மான ஹெலிகொப்டருடன் 120பேர் கொண்ட குழு, ஐ.நா. அமைதிகாக்கும் படையுடன் இணைந்து கடமையாற்றுவ தற்காக மத்திய ஆபிரிக்க குடி யரசுக்கு புறப்பட்டுச் சென்றுள் ளது. (ற)

# கனேவத்தை சிறுமி மீட்கப்பட்டார்

கொழும்பு, செப்.13

கனேவத்தை, அம்பகொல வெவ பிரதேசத்தில் கடந்த 9ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கடத்தப்பட்ட நான்கு வயது சிறுமி மீட்கப்பட்டுள் ளார் என்று பொலிஸார் தெரி வித்தனர். ஆயினும் அது குறித்த மேலதிக தகவல்கள் வெளியிடப் படவில்லை. (முன்னர் வந்த செய்தி 9 ஆம் பக்கத்தில்)

# சேவை நலன் பாராட்டு விழா

கரணவாய், செப்.13

அல்வாய் பாரதிதாசன் சன சமூக நிலையத்தின் பொன் விழா மலர் வெளியீடும் சேவை நலன் பாராட்டு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நூலக மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் சி.நடராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடக்கு மாகா ணக் கல்வி பண்பாட்டலுவல் கள் அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும், கௌரவ விருந்தினர்களாக பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் திருமதி ஜெயராணி பரமோதயன், கரவெட்டி பிரதேச சபைத் தவி சாளர் பொ.வியாகேசு ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் நூலின் வெளி யீட்டுரையை கரவெட்டிப் பிரதேச செயலர் ச.சிவசிறி யும், நூலின் நயப்புரையை பருத்தித்துறை பிரதேச செய லர் த.ஜெயசீலனும் ஏற்பு ரையை இதழாசிரியர் ற.தே வராசாவும் நிகழ்த்தவுள்ளனர்.

அதில் வைத்திய சிரோன் மணி சி.வேலும்மயிலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட வுள்ளதுடன் திருமதி ஜெய பாரதி கௌசிகனின் கர்நாடக இசைக் கச்சேரியும் இடம்பெற வுள்ளது. (ற-108)

# ஜனாதிபதிக்கு பச்சைமிளகாய் சவால்

## பாலித தெவரப்பெரும எம்.பி. விடுத்தார்

கொழும்பு, செப்.13

சிறுநீரக நோயாளிகளுக்கு நிதி சேகரிப்பதற்காக ஆரம் பிக்கப்பட்டுள்ள பச்சைமிள காய் சவாலை ஐக்கிய தேசி யக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும எதிர்நோக்கி னார். சவாலுக்கு அமைய மூன்று பச்சைமிளகாய் களை மூன்று நிமிடங்க ளுக்கு சாப்பிட வேண்டும் என்ற போதிலும் அவர் ஆறு பச்சை மிளகாய்களை சாப் பிட்டார். அதன்பின்னர் அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பச்சை மிள காயை சாப்பிடுமாறு சவால் விடுத்தார்.

இதுகுறித்து அவர் கூறும் போது, "நாட்டின் ஜனாதி பதிக்கு நான் இந்த சவாலை விடுகின்றேன். ஜனாதிப தியே சிறுநீரக நோயாளி கள் தொடர்பான பொறுப்பை ஏற்க வேண்டும். ஆயி னும் சுகாதாரத் துறைக்கு தேவையான நிதியை ஜனா திபதியே ஒதுக்காமல் இருக் கின்றார். பெரும் தொகையை தனக்காக ஒதுக்கி கொள் ளும் ஜனாதிபதி, சிறுநீரக நோயாளிகளுக்காக சிறு தொகையையே ஒதுக்கி உள்ளார். அதனால் மூன்று பச்சை மிளகாய்களை சாப்பிட்டு வாயின் வலியை உணர வேண்டும் என்றே ஜனாதிபதிக்கு சவால் விடுக் கின்றேன்"- என்று தெரிவித் துள்ளார். (ற)



பாலித தெவரப்பெரும

**சவாலின் விதிகளின்படி, சவால் விடுக்கப்படும் நபர் அந்த சவாலை ஏற்றுக்கொண்டால் 100 ரூபா நிதி உதவி அளிக்க வேண்டும். பச்சைமிள காய் சவாலை ஏற்காவிடின் 1,000 ரூபா வழங்க வேண்டும். சவாலை எதிர்நோக்கும் நபர்கள் ஐவருக்கு சவால் விடுக்க வேண்டும்.**

# மங்கள சமரவீர ஒரு சூழ்நிலைக் கைதியே

## சஜித் பிரேமதாஸ கூறுகின்றார்

கொழும்பு, செப்.13

"பிரேமதாஸக்களும் ஐக்கிய தேசியக் கட்சியும் இலங் கைக்கு என்ன செய்தது என் பதை மங்கள சமரவீர அறிந் திருக்கவில்லை. இது அவரின் கண்மூடிய அரசியலையே காட்டுகிறது"- என்று தெரிவித் துள்ளார் நாடாளுமன்ற உறுப் பினர் சஜித் பிரேமதாஸ.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது மங்கள சமரவீர," சஜித் பிரேமதாஸ பிரதித்தலைவராகி அவரின் பணிகளை காட்டவேண்டும்" என்று தெரிவித்திருந்தார். அதற் குப் பதிலளிக்கும் வகையி லேயே சஜித் பிரேமதாஸ மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"ஐக்கிய தேசியக்கட்சி ஆட் சிக்கு எதிராக மங்கள சமர வீரவே பெருமளவு பரப்பு ரைகளை முன்னெடுத்துள் ளார். ஒரு காலத்தில் ஒட்டப் பட்ட ரணில் விக்கிரமசிங் கவை மிஸ்டர் பீன் என்றும் ரணில்ட பே (ரணிலுக்கு முடியாது) என்ற சுவரொட் டிகளுக்கு மங்கள சமரவீரவே சொந்தக்காரர். மங்கள சமர வீர தற்போது ஒரு அரசியல் அகதி"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)



# மதிலை உடைத்து பிளந்துகொண்டு பாடசாலைக்குள் நுழைந்தது பிக்கப்



முள்ளியவளை, செப்.12

'பிக்கப்' ரக வாகனத்தின் முன் பக்க சில்லுகளில் ஒன்று காற் றுப் போனதை அடுத்து கட் டுப்பாட்டை இழந்த 'பிக்கப்' முள்ளியவளை கலைமகள் வித்தியாலய மதிலை உடைத் தவாறு உள்நுழைந்தது. இந் தச் சம்பவம் நேற்றுப் பிற் பகல் 2.40 மணியளவில் நடந் துள்ளது. முல்லைத்தீவில் இருந்து ஒட்டுசுட்டான் நோக்கி அந்தப் பிக்கப் ரக வாகனம் பயணித்தது என்று கூறப்படு கின்றது. இந்தச் சம்பவத்தில் எவருக்கும் உயிராபத்து ஏற் படவில்லை என்றும் தெரி விக்கப்படுகின்றது. (ற-433)

உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 28 சனி (13.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 291

# போரில் கொல்லப்பட்டார் பொட்டு அம்மான்

## அவர் ஹொங்கொங்கில் கைதானார் என்பது பொய் என்கின்றார் இராணுவப் பேச்சாளர்



யாழ்ப்பாணம், செப். 13

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் போரில் இறந்து விட்டார். ஆனால் அவரது உடலைத்தான் எம்மால் மீட்க முடியவில்லை என்று இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொட்டு அம்மான் கைது செய்யப்பட்டுள்ளதாக இணையத் தளங்களில் வெளியாகியுள்ள செய்தியையும் அவர் முற்றாக மறுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், ஹொங் கொங் நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சில இணையத்தள ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டது.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவிக்கையில்: விடுதலைப் புலிகளுடனான இறுதிப் போரின் போது புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் கொல்லப்பட்டுவிட்டார். (19ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரசுக் கட்சியின் தீர்மானங்கள் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தும்

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய காட்டம்

கொழும்பு, செப்ரெம்பர் 13

**வவுனியாவில் அண்மையில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள பெரும்பாலான தீர்மானங்கள் புதிய அரசியல் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்களைக் கொண்டிருப்பதால் அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கருத்து வெளியிட்டுள்ளார்.**

வடக்கு மாகாண சபையின் அதிகாரத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதிக்கம் செலுத்தும் ஒரு சக்தியாக விளங்குகின்றது. வவுனியாவில் இடம்பெற்ற இந்தக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாட்டில் 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராசா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரா.சம்பந்தனுக்குப் பதிலாகவே மாவை சேனாதிராசா தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட் (22ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் 5 பேர் பொலிஸாரினால் கைது

பெரும் திருட்டு, கொள்ளைகளுடன் தொடர்புடையவர்கள்

கிளிநொச்சி, செப் 13

கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் திருட்டு மற்றும் கொள்ளையுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் ஐந்து பேர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து முச்சக்கரவண்டி மற்றும் மூன்று மோட்டார் சைக்கிள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்டவர்கள் இதுவரையில் 50 லட்சம் ரூபா பெறுமதியான திருட்டு மற்றும் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் என்கின்றனர் பொலிஸார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## துஷ்பிரயோகத்தின் பின் சிறுமி கொலை; கண்டித்து காத்தான்குடியில் போராட்டம்



காத்தான்குடி, செப். 13

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஞ்சந்தொடுவாய் பிரதேசத்தில் சிறுமி ஒருவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும், சந்தேகநபருக்கு எதிராகச் சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகக் கூடாது என்று கோரியும் நேற்று வெள்ளிக்கிழமை காத்தான்குடியில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப் (19ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிகளுடன் இரண்டு பேர் கைது

யாழ்ப்பாணம், செப். 13

மாங்குளம் பொலிஸ் பிரிவில் உள்ளூர் துப்பாக்கிகளை வைத்திருந்த 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கனகராயன்குளம் பகுதி (19ஆம் பக்கம் பார்க்க)

## கர்ப்பிணியை நள்ளிரவு மயானத்தில் ஆடை களைந்து தாக்கினார் கணவன்

தென்மராட்சி,செப்.13

கர்ப்பிணிப் பெண்ணை நள்ளிரவு வேளை மயானத்துக்கு அழைத்துச் சென்று ஆடைகளைக் களைந்து தாக்கிக் காயப்படுத்தி அங்கேயே விட்டுச் சென்றுள்ளார் படுபாதகக் கணவர்.

ஆடைகள் இல்லாத நிலையில் விடியும் வரை மயானத்தில் தனியே இருந்து புலரும் பொழுதில் ஆடைகளைத் தேடி எடுத்து அணிந்து கொண்டு மருத்துவமனைக்கு வந்து சேர்ந்துள்ளார் 19 வயதுக் கர்ப்பிணிப் பெண்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழன் இரவு தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்றது.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் வலிகாமம் கிழக்கைச் சேர்ந்த யுவதியை (22ஆம் பக்கம் பார்க்க)

## மோ. சைக்கிள்கள் மோதி விபத்து; கர்ப்பிணி உட்பட ஐவர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 13

கோண்டாவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்கள் விபத்தில் கர்ப்பிணி ஒருவர் உட்பட 5 பேர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து கோண்டாவில் டிப்போவை அண்மித்து நேற்று மதியம் இடம்பெற்றது.

விபத்தில் உரும்பிராயைச் சேர்ந்த 35 வயதுடைய 7 மாதக் கர்ப்பிணியும் அவரை ஏற்றிச் சென்ற அவரது கணவரும், கோண்டாவிலைச் சேர்ந்த வாய்பேச முடியாத சுமார் 37 (19ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண விவசாய அமைச்சின் இணைப்பு அலுவலகம் திறப்பு

வன்னி மக்களின் வசதி கருதி மாங்குளத்தில்



யாழ்ப்பாணம்.செப்.13

வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் இணைப்பு அலுவலகம் மாங்குளத்தில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

மாங்குளத்தில் கண்டி வீதியில் முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் இயங்கிவரும் கட்டடத் தொகுதியில் இந்த இணைப்பு அலுவலகம் கடந்த 9 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சுக்களின் தலைமை அலுவலகங்கள் யாழ்ப்பாணத் (22ஆம் பக்கம் பார்க்க)

## வழிபாட்டைத் தடுத்தது நாங்களா? குற்றச்சாட்டுக்குப் பொலிஸ் மறுப்பு

யாழ்ப்பாணம், செப். 13

மீள்குடியேற்றத்தை வலியுறுத்திச் சபாபதிப்பிள்ளை முகாமில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்ட பிரார்த்தனையை தடுத்து நிறுத்தியது பொலிஸ் தான் என்று கூறப்பட்டபோதும் அந்தக் குற்றச்சாட்டை அவர்கள் மறுத்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை குறித்த முகாமுக்குச் சிவில் உடையில் வந்த பொலிஸார் தான் பிரார்த்தனையைத் தடுத்தனர் என்று ஏற்பாட்டுக் குழுவினர் ஏற்கனவே குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

இந்த நிலையில் அங்கு என்ன நடக்கிறது என்று பார்த்து வருமாறு பொலிஸ்காரரை அனுப்பினோம் என்பதை யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால் அதனைத் தடுத்து நிறுத்தவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் (19ஆம் பக்கம் பார்க்க)

## அருண் செல்வராஜன் குறித்து விசாரிப்பதற்கு வருகிறது குழு

கொழும்பு, செப். 13

இலங்கை அதிகாரிகளுடன் அவசர சந்திப்புக்காக இந்திய தேசியப் புலனாய்வுப் பணியக அதிகாரிகள் இலங்கைக்கு வரவுள்ளனர்.

பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. அமைப்புக்காக வேவு பார்த்தார் என்ற சந்தேகத்தில் இலங்கைத் தமிழரான அருண் செல்வராஜன் கைதுசெய்யப்பட்டார். இதைத் தொடர்ந்தே இந்த அவசர சந்திப்பு இடம்பெறவுள்ளது.

(22ஆம் பக்கம் பார்க்க)

# புறப்பட்ட சிறிது நேரத்திலேயே பழுதடைந்த பயணிகள் படகு

## அரச படகின் உதவியால் காப்பாற்றப்பட்ட பயணிகள்


யாழ்ப்பாணம், செப்.13

நெடுந்தீவில் இருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை பி.ப.2.30 மணிக்கு பயணிகளுடன் குறிகாட்டுவானுக்குப் புறப்பட்ட தனியார் படகு புறப்பட்ட சிறிது நேரத்தில் கடலில் பழுதடைந்ததை அடுத்து விசேட சேவையில் ஈடுபட்டிருந்த அரச படகான குமுதினி குறித்த படகின் அருகில் சென்று அதில் இருந்த பயணிகளை ஏற்றிக்கொண்டு குறிகாட்டுவானைச் சென்றடைந்தது.

பயணிகளுடன் வந்து கொண்டிருந்த தனியார் படகின் வேகம் குறைவதை அவதானித்த குமுதினி படகின் படகோட்டி உடனடியாகத் தனியார் படகு ஊழியர்களுடன் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு எரிபொருள் தடை காரணமாக இயங்க முடியாத நிலையில் இயந்திரம் உள்ளதைத் தெரிந்து கொண்டு உடனடியாகவே பயணிகள் படகை நோக்கி தமது படகைச் செலுத்திச் சென்று அந்தப் படகில் பயணித்த நூற்றுக்கும் அதிகமான பயணிகளையும் குமுதினியில் ஏற்றிக் கொண்டார்.

கடல், கொந்தளிப்பின்றி அமைதியாகக் காணப்பட்ட தால் பயணிகள் சுலபமாக குமுதினிக்கு மாறிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. தனியார் படகில் பயணிகளுடன் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும், மாகாண சபை உறுப்பினர் கே.விந்தன் கனகரத்தினமும் பயணித்திருந்தனர்.

குமுதினி படகில் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்டீன் உட்பட துறைமுகம் புனரமைப்பு தொடர்பாக நெடுந்தீவுக்கு வருகை தந்த அதிகாரிகள் குழுவினர் இருந்தனர். நேற்று முன்தினம் இடம்பெற்ற துறைமுக அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் நெடுந்தீவு படகுச் சேவையின் பின்னடைவுநிலைமைகள் குறித்து எடுத்துக் கூறப்பட்டது. இடம்பெற்ற சம்பவம் மூலம் அதிகாரிகள் அதனை நேரில் கண்டுணரக்கூடிய வாய்ப்பு கிடைத்ததாக பொதுமக்கள் தெரி வித்தனர். (வ-7)



கொழும்புத்துறை புங்கன்குளம் வீதிப் புனரமைப்புக்காக கற்கள் பறிக்கப்பட்டு தவம் கிடக்கின்றது. அதற்கான பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. வீதி சேதப்பட்டு போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் உள்ளதாலும், புனரமைப்புக்கெனப் பறிக்கப்பட்ட கற்கள் நாலாபக்கமும் சிதறிக் காணப்படுவதாலும் சிரமத்தின் மத்தியில் மக்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர். (வ-17)

# கும்பாபிஷேகம்

வடமராட்சி, செப்.13

துன்னாலை புளியங்கியான் சிதம்பர விநாயகர் கோயில் மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.46 மணிக்கு சுப வேளையில் நடைபெறவுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும்.

மறுநாள் திங்கட்கிழமை காலை 4 மணிமுதல் கிரியைகள்நடைபெற்று 9.20மணிக்கு தூபிகள் அபிஷேகமும் தொடர்ந்து 9.46 மணிக்கு விநாயகருக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளான நாக தம்பிரான், முருகன், நவக்கிரகங்கள், வைரவர், சண்டேஸ்வரர் ஆகியவற்றுக்கும் மகா கும்பாபிஷேகம் இடம் பெறும்.

துன்னாலை வல்லியானந்தம் ஸ்ரீ சாரதா பீட குரு முதல்வர், சோதிட பூசணம் பிரம்மஸ்ரீ ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து இந்தக் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். (வ-173)

# ஆயிரமாவது வீட்டுக்கான அடிக்கல் நடப்பட்டது

கொழும்புத்துறை,செப்.13

கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அமைத்து வழங்கப்பட்டு வரும் நிரந்தர வீட்டுத் திட்டத்தின் ஆயிரமாவது (1000) வீட்டுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு முள்ளிவாய்க்காலில் அண்மையில் நடைபெற்றது.

வன்னிப் பகுதிக்கு பயணம் செய்த திருத்தந்தையின் இலங்கைப் பிரதிநிதியின் செயலர் அருட்திரு றெனாட்டோ அடிகள் அடிக்கல்லை நட்டு வைத்தார்.

அதேவேளை முல்லைத்தீவு சிலாவத்தை வித்தியாலயத்தில் சிறுவர்களுக்கான நூலகத்துக்கு அடிக்கல்லை நட்டதுடன் தீர்த்தக் கரை பிரதேசத்தில் பொதுநோக்கு மண்டபத்தையும் திறந்து வைத்தார். (வ-135)

**நயினாதீவு மலையின் ஐயனார் அருள்மிகு சபரீச ஐயப்பன் ஆலய மஹாகும்பாபிஷேகம் 15.09.2014 (திங்கட்கிழமை)**

நயினாதீவின் தென்பால் அமைந்துள்ள ஸ்ரீ மலையின் ஐயனார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சபரீச ஐயப்பன் ஆலய மஹாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் (15.09.2014) திங்கட்கிழமை நடைபெற இருக்கிறது என்பதனை அடியவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

| கர்மாரம்பம் | எண்ணெய்க்காப்பு | கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 07.09.2014 | 13.09.2014 | 15.09.2014 |

நயினாதீவு ஐயனார் ஆலய அறங்காவலர் சபையினர்.

# பட்டிக்குடியிருப்பு ஆலயங்களின் பாமாலை இசைத்தட்டு வெளியீடு

கிளிநொச்சி, செப். 13

வவுனியா வடக்கு, நெடுங்கேணி பட்டிக்குடியிருப்புப் பகுதி ஆலயங்களின் பக்திப் பாமாலை இசைத் தட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு வீரபத்திரன் ஆலய வருடாந்த பொங்கல் தினத்தை முன்னிட்டு நெடுங்கேணி பட்டிக்குடியிருப்புப் பகுதி ஆலயங்களின் பக்திப்பாமாலை இன்னிசை இசைத்தட்டு வெளியீட்டு விழா கடந்த 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணிக்கு பட்டிக்குடியிருப்பு வீர பத் திரன் ஆலயத்தில் ஓய்வு பெற்ற கிராம அலுவலர் செ.அருளானந்தம் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி பட்டிக்குடியிருப்புப் பகுதி ஆலயங்களின் பக்திப் பாமாலை இன்னிசைத் தட்டை வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேச செயலர் க.பரந்தாமன் வெளியிட்டு வைக்க வவுனியா வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் மு.பாலசுப்பிரமணியம் பெற்றுக் கொண்டார்.

வெளியீட்டு விழா வைத் தொடர்ந்து பட்டிக்குடி யிருப்பு கதிர் இசைக் குழுவினரின் இன்னிசை கானங்கள் இசை நிகழ் வுகளும் இடம் பெற்றன. (வ-426)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கச்சேரிக்கு அண்மையாக கச்சேரி-நல்லூர் வீதியில் 1 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (45149)(3.6.4)

தொடர்பு: 077 614 6434

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கண்டுக்குளி பாடசாலைக்கு அண்மையாக ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு

தொடர்பு S.S.நாதன், இல.16/3, விநாயகர் வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். 077 614 6434 (49996)(4.3.6)

**விற்பனைக்கு**

புறொயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

(52143)(12.3.6) தொடர்பு: 077 318 8016

**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**
**The Jaffna Education Centre**

ஆசிறி ஆய்வுகூடத்திற்குப் பக்கத்தில் வலது பக்கம் (செல்லா தியேட்டருக்கு முன்) Spoken English with Grammar, Short hand Typing

"சிங்களம்"

ESOL, IELTS ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன. புதிய பிரிவு ஆரம்பம் 13.09.2014

ஆசிரியை - இ.லோகநாயகி

TP.No:076 669 8953 (52142)(12.3.6)

பாடமுடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**விற்பனைக்குண்டு**

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் மூன்று பரப்புக் காணிக்கு மேல் உள்ள வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய மூன்று மாடிக் கட்டடம் விற்பனைக்குண்டு.

(ஜ16569)(12.3.6) தொடர்பு: 077 072 6210

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

பூநகரி மட்டுவில் நாடு-சங்குப்பிட்டி பிரதான வீதியில் வாடியடி சந்திக்கு மிக அண்மையில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசினர் வைத்திய சாலைக்கு நேர் எதிராக வீடு, கிணற்றுடன் அமைந்துள்ள 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 124 7425, 077 677 1048, 021 227 0410 (47268)(7.6)

**அறைகள் நாள் வாடகைக்கு**

ஒருவருக்கு 600/=, இருவர் 1,500/= நால்வர் 2,500/=
(Attached Bathroom)
Hotal Villa City
422, Galle Road, Wellawatte.
T.P: 072 255 2222 (F/15793)(4.6.3)

**வீடு வாடகைக்கு** TP : 0112581260 / 0723564109

சுண்டுக்குளி - கச்சேரி, St.Johns,Girls College,Bosco அண்மையில் மூன்று படுக்கையறை,Attached B/R சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. அரச/தனியார் உத்தியோகத்தர் விரும்பத்தக்கது.

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)



Platinum 10.30am, 2.30pm, 6.30pm

Silver 10.15am, 2.15pm, 6.15pm

Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

**200 ஆவது ஞானச்சுடர் மலர் வெளியீடும் கட்டுரையாளரைக் கௌரவித்தலும்**

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்
செல்வச்சந்நிதி தொண்டைமானாறு

காலம்: நாளை (14.09.2014)
ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணி

2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஞானச்சுடர் மலரில் இடம்பெற்ற ஆக்கங்களை வழங்கியோரைக் கௌரவித்தல்.

குறிப்பு:
ஞானச்சுடர் மலரைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளும் அன்பர்கள் ஆவணி மாத ஞானச் சுடர் மலரை நேரில் வந்து பெற்றுக் கொள் ளவும்.

சந்நிதியான் ஆச்சிரமம்,
பேரவையினர். (F/16205)(4.6.3)

**இலவச அழகுக் கலைப்பயிற்சி**

நிபந்தனைகளுக்குட்பட்டது

நிவித்ரா அழகுக்கலை நிலையத்தின்
புதிய இலவச அழகுக்கலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.



- Personal Grooming
- Advance Beauty Therapy
- Diploma

எனும் 3 பிரிவுகளாக வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சியில் இணைய விரும்புவோர் 13/09 - 20/09 ஆம் திகதிக்கு முன்னராகப் பதிவுகளை மேற்கொண்டு ரூபா 5000/= வரை கட்டணச் சலுகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

✱ பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

Nivithra Beauty Parlour & Training Academy
340, K.K.S ROAD, JAFFNA
Tel: 077 771 2604/076 691 9277
(52119)(4.3.6)

(இந்த அழகுக் கலைப்பயிற்சிகள் Ori Flame யாழ்.கிளை நிறுவனத்தின் முன்னாள் முகாமையாளர் திருமதி வித்யா நிரஞ்சனால் நடத்தப்பட்டு வருகின்றன.
✱ பழைய மாணவர்கள் Diploma படிக்க விரும்புவோருக்கு விசேட சலுகைகள் உண்டு)

## பாரதிதாசன் சனசமூக நிலைய பொன்விழா

வடமராட்சி, செப்.13
அல்வாய், பாரதிதாசன் சனசமூக நிலைய பொன்விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாரதிதாசன் நூலக மண்டபத்தில் நிலையத் தலைவர் கி.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் மலர் வெளியீடு, சேவைநலன் பாராட்டு, விளையாட்டு நிகழ்வு, பரிசளிப்பு என்பன இடம் பெறவுள்ளன. நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி ஜெயராணி பரமோதயன், கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் பொ.வியாகேசு ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

நூல் வெளியீட்டுரையை கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ நிகழ்த்த, ரயில்வேத் திணைக்கள ஓய்வு நிலை ஊழியர் ச.சற்குணராசா முதல் பிரதியைப் பெற்றுக் கொள்வார். நயப்புரையை பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் நிகழ்த்துவார்.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி வாழ்த்துரை வழங்குவார். வைத்திய சிரோன்மணி மருத்துவர் சி.வேலும் மயிலும் நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

கர்நாடக இசைக் கச்சேரியும் விழாவில் இறுதி நிகழ்வாக இடம்பெறும். (வ-173)

## வரணி மருத்துவமனை வளாகம் சிரமதானம் மூலம் துப்புரவு



வரணி, செப்.13
டெங்கு நோய் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை வரணி பிரதேச மருத்துவமனை வளாகம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

வைத்தியப் பொறுப்பதிகாரி மருத்துவர் வீ.கமலநாதன் தலைமையில் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது. ஆரம்பத்தில் சிரமதானத்தில் பங்கு கொண்டோருக்கு டெங்கு நோய் தொடர்பான விளக்கம் மருத்துவர் கமலநாதனால் வழங்கப்பட்டது. இதன் பின்பு வைத்திய அதிகாரி தலைமையில் வைத்தியசாலை சுற்றாடல் வளாகம் துப்புரவு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் பொது சுகாதார பரிசோதகர், கொடிகாமம் பொலிஸார், பிரதேச கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு படைத் தரப்பினர் மற்றும் வைத்தியசாலைப் பணியாளர்கள், நோயாளர் நலன்புரி சங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அதேவேளை கொடிகாமம் மத்திய பஸ் நிலையம், பொதுச் சந்தைப் பகுதி என்பனவும் நேற்று முன்தினம் பாதுகாப்புத் தரப்பினரின் பங்களிப்புடன் துப்புரவு செய்யப்பட்டதுடன் பிரதேச பொலிஸ் நிர்வாக பொறுப் பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சரத் சந்திரவின் அனுசரணையுடன் சந்தைப் பகுதி, பஸ் நிலையம் என்பன துப்புரவு செய்யப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதேச பொது சுகாதார பரிசோதகர் தலைமையில் வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலர் பங்கு கொண்டு தங்கள் பங்களிப்பை நல்கினர். (வ-122)

## செயலமர்வு

தென்மராட்சி, செப்.13
தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகளின் முகாமைத்துவக் குழுக்களுக்கான வலய மட்ட முன்பள்ளி முகாமைத்துவக் குழுவை மேம்படுத்தல் தொடர்பான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

செயலமர்வில் முன்பள்ளி முகாமைத்துவக் குழுக்களின் தலைவர், செயலாளர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

முன்பள்ளி இணைப்பாளர்கள், மாவட்ட, பிரதேச மருத்துவ அதிகாரிகள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், சிறுவர் மேம்பாட்டு அலுவலர், சனசமூக நிலைய அலுவலர்கள், சர்வதேச உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், முன்பள்ளிகளை நடத்துவோர் இந்தச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (வ-9)

## 'என் ஆத்ம நேசரே' பக்தி இசை இறுவட்டு வெளியீடு

கொழும்புத்துறை, செப்.13
'என் ஆத்ம நேசரே' பக்தி இசை இறுவட்டு வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு யாழ்.நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செல்வி வினித்தா சாள்ஸ் சௌந்தரராஜாவினால் உருவாக்கப்பட்டுள்ள இந்த இறுவட்டின் வெளியீட்டு விழா எழுத்தாளர் யோசப்பாலா தலைமையில் இடம் பெறும்.

வாழ்த்துரையை மறை இசை மாமணி ம.யேசுதாசனும் வாழ்த்துரையை ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனமும் வழங்குவர்.

வெளியீட்டுரையை கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய பங்குத் தந்தை அருட்திரு. அன்ரன் மத்தாயன் அடிகளும் நயப்புரையை அமல மரித்தியாகிகள் வளனார் குருமட அதிபர் அருட்திரு செ.அன்புராசா அடிகளும் நிகழ்த்துவர். (வ-135)

## ஒன்றுகூடல்

யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க மறையாசிரியர்களுக்கான ஒன்றுகூடல் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் நடை பெறவுள்ளது.

இந்த ஒன்றுகூடலில் அனைத்து மறையாசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு மறைக் கல்வி இயக்குநர் கேட்டுள்ளார். (வ-135)


## இலவச சட்ட ஆலோசனை முகாம்

- நீங்கள் அரச அல்லது தனியார் நிறுவனத்தினால் அநீதிக்கு இலக்கானவரா?
- அரச காணிகள் பற்றிய பிரச்சினைகளில் தொடர்புடையவரா?
- லஞ்சம், ஊழல், மோசடி தொடர்பில் நீங்கள் செய்த முறைப்பாட்டுக்கு நீதி கிடைக்கவில்லையா?
- சட்டத்தரணிகளால் நாம் உங்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்குகின்றோம்

செப்ரெம்பர் - 14 யாழ்ப்பாணம்

இடம்: சமூக அபிவிருத்திக்கான செயற்பாட்டு மையம்,
இருபாலை வீதி, காளி கோயிலடி,
கோண்டாவில் மேற்கு.

காலை: 09.00 - மாலை 04.00 வரை

நேர்மையின் புகலிடம்
ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல்
ஸ்ரீலங்கா

024 - 222 7676



யாழ் மண்ணில் புதியதோர் அறிமுகம்




ஹோட்டல் ஆரோக்கியா
279, ஸ்ரான்லி வீதியில்

07.09.2014 முதல் கோலாகலமாக ஆரம்பித்துள்ளது.
தரமான, சுத்தமான, சைவ, அசைவ உணவுகளைக் குறைந்த விலையில் நிறைவான உபசரிப்புகளுடன் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.


ஹோட்டல் ஆரோக்கியா

இன்று முதல் சனி, ஞாயிறு தினங்கள் ந.ப. 12.00 மணி முதல் யாழ். மண்ணிற்கு உரித்தான ஒடியல் கூழ் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் வாடிக்கையாளர்களின் நலன் கருதி வழங்குகின்றோம்.

ஒரு முறை எமக்காக வாருங்கள்
மறு முறை நீங்களாக வருவீர்கள்
சுத்தம்! சுவை! உபசரிப்பு!

சுவையான உணவின் ராஜகிரீடம்
ஹோட்டல் ஆரோக்கியா
T.P: 021 221 7554 (52132)(4.3.6)

# மரண அறிவித்தல்



## ஐயாத்துரை பொன்னுத்துரை

இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பொன்னுத்துரை 10.09.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - இரத்தினம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான இராமசாமி - இரத்தினமலர் தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வேதநாயகம் மற்றும் சங்கரலிங்கம் (நகுலர்), சுந்தரலிங்கம் (ராசா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சாரதாதேவி, காலஞ்சென்றவர்களான தர்மேஸ்வரி, பஞ்சலிங்கம் மற்றும் சாந்தவதனா, விமலராணி, மனோன்மணி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், இராசரத்தினம், சிவபாலசிங்கம் (சதாசிவம்) மற்றும் விஜயகுலராணி, விக்னேஸ்வரன் ஆகியோரின் சகலனும், விக்னேஸ்வரி, செந்தமிழ்ச்செல்வி, காலஞ்சென்றவர்களான கங்கேஸ்வரி, கலைச்செல்வி மற்றும் ஐங்கரன், கஜாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீராமச்சந்திரன், ஸ்ரீவாணி, சமந்தா ஆகியோரின் மாமனும், பிரசீலன், லேபிரணவன், கிருபாலினி, சத்யன் ஆகியோரின் அம்மப்பாவும், சங்கரன், கரிகரன் ஆகியோரின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கட்டையாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீசீலா (சந்திரன்),
கோண்டாவில் கிழக்கு.
(52202)
(12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

## தங்கராசா ஸ்ரீகோணேஸ்

(ஸ்ரீ அம்பாள் கபே உரிமையாளர்)

தோற்றம் 13.04.1962 — மறைவு 12.08.2014




கடந்த 12.08.2014 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் தங்கராசா ஸ்ரீ கோணேஸ் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உடன் நேரில் வந்தும், தொலைபேசிமூலமாகவும் ஆறுதல் கூறியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலித்தோருக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பலவழிகளில் எமக்கு உதவிசெய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு,

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (13.09.2014) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி மத்தி, யாழ்ப்பாணம்.
(52130)(12.3.6)
குடும்பத்தினர்.

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ 16 . 03 . 1942



கண்நெகிழ 30 . 08 . 2010

அமரர் **பொன்னையா செல்லையா**

திதி: அபரபக்க பஞ்சமி

எம்மைச் சீரும் சிறப்புமாக வாழ வைத்த
எம் அருமை அப்பாவே! பண்பின் சிகரமே!
அன்பின் உறைவிடமே! எம்மைப் பிரிந்து
ஆண்டுகள் நான்கல்ல எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் நீங்காது உங்கள் நினைவுகள்
எம் இதயத்தை விட்டு.....

சிற்றம்பலம் வீதி,
மிசாலை கிழக்கு,
மிசாலை.
(47278)(12.3.6)
குடும்பத்தினர்.



கிளிநொச்சி முழங்காவில் நகரத்தில் ஏ-32 சாலையில் முக்கிய இடங்களில் பஸ் தரிப்பிடங்கள் இல்லாமையால் பயணிகள் வெயில், மழை நேரங்களில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-18)

# வெட்டப்படும் மாடுகளுக்கு காது அடையாளம் அவசியம்

தென்மராட்சி.செப்.13

மாடுகள் கொல்களங்களில் வெட்டுவதற்கு பிரிவு கிராம அலுவலரால் வழங்கப்படும் கடிதத்துடன் வெட்டப்படும் மாடுகளுக்குக் காதடையாளம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

இவ்வாறு நேற்று முன்தினம் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி முன்னிலையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

பிரதேசத்தில் மாடுகளுக்குக் கால்வாய் நோய் பரவியதையடுத்து சாவகச்சேரி நகர சபை, பிரதேச சபை ஆகியவற்றின் கொல்களங்களில் மாடுகள் வெட்டுவதற்கு கடந்த ஜூன் முதலாம் திகதி தொடக்கம் தடை விதிக்கப்பட்டு ஓகஸ்ட் 2 ஆம் திகதி தொடக்கம் சில நிபந்தனைகளுடன் தடை நீக்கப்பட்டது. நிபந்தனைகளில் காத டையாளம் மற்றும் கிராம அலுவலரின் கடிதம் ஆகியவை அவசியமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிரதேசத்தில் காதடையாளமிடப்படாத மாடுகள் பெருமளவில் காணப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்ததையடுத்து நீதிமன்றால் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாடுகளுக்குக் காத்டையாளம் இடும் பணிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் கால்நடை மருத்துவரினால் கிராமம் கிராமமாக மேற்கொள் ளப் படவுள்ளன. உறுதிப்படுத்தல் கடிதம் கால்நடை மருத்துவரி னால் வழங்கப்படவுள்ளது.

இந்தப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மாடு பிரிவு கிராம அலுவலரின் பரிந்துரையுடன் இறைச்சிக்கு வெட்டுவதற்கு அனுமதிக்கப்படும்.

மேலும் கொல்களங்களில் வெட்டப்படும் மாடுகளுக்குக் கால்வாய் நோய் இல்லாதமையை உறுதிப்படுத்துவதுடன் திருட்டு மாடுகள் வெட்டுவதைத் தடை செய்யும் நோக்குடனும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளதாக இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட கால்நடைத் திணைக்களப் பணிப்பாளர், சாவகச்சேரி கால்நடை மருத்துவர், தென்மராட்சி பிரதேச செயலர், நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றின் செயலாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-9)


## வேலை ஆள் தேவை

திருநெல்வேலி அருகில் கடை ஒன்றுக்கு கணக்கு வேலைக்கு பெண் ஒருவர் தேவை. ஆங்கில அறிவும், தெளிவான எழுத்தும் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (52201) (7.6.3)

தொடர்பு : 075 764 9113

## வீடு வாடகைக்கு

சுன்னாகம் பிரதேச சபை அலுவலகத்துக்கு முன்புறமாக உள்ள இராமநாதன் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (52148) (7.6.3)

தொடர்பு :

078 632 6111, 077 971 0760

## ...ந்து

... வீதியில் (...மணறத்துக்கு முன்பாக) இரண்டு பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு : 077 841 2509 (52146) (7.6.3)


# மரண அறிவித்தல்



## திருமதி புஸ்பம் சிவகுருநாதன்

இளைப்பாறிய ஆசிரியை - யாழ்.இந்து மகளிர் கல்லூரி
(Hindu Ladies College Jaffna)

திருமதி புஸ்பம் சிவகுருநாதன் 08.09.2014 நியூயோர்க் U.S.A இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சிவகுருநாதன் (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர், நல்லூர்) அவர்களின் அன்பு மனைவியும், டாக்டர் நந்தினி (நியூயோர்க் U.S.A)இன் அன்புத் தாயும், டாக்டர் நந்தகுமார் (U.S.A)இன் அன்பு மாமியும், நவிதா, நரேஷ், நரேன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திருமதி பரிமளம் நடராசா (தம்பசிட்டி - பருத்தித்துறை) இன் அன்புச் சகோதரியும், பாமதி (வவுனியா), தேவகி (வட.இந்து மகளிர் ஆசிரியை), ராஜேந்திரா (ஓமான்), வாசுகி (தம்பசிட்டி) ஆகியோரின் அன்புச் சிறிய தாயும், காலஞ்சென்ற முருகையா (வவுனியா), அருமைச்சந்திரன் (இளைப்பாறிய கல்லூரி அதிபர்), பத்மினி (ஓமான்), ராஜேஸ்வரன் (கட்டார்) ஆகியோரின் மாமியும், பிரேமாவின் (கனடா) வளர்ப்புத் தாயும், கிறிஸ்தோகுவின் (கனடா) மாமியும், ரம்யாவின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Park Hill (New York) மலர்ச்சாலையில் இன்று (13.09.2014) சனிக்கிழமை பி.ப.ஒரு மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: நந்தினி நந்தகுமார் - மகள்
Phone: 516 609 9606 (New York)

# மரண அறிவித்தல்

## செல்லையா பாலகிருஷ்ணன்

(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் J.P.U.M)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டி, சாவகச்சேரி, நுணாவில் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா மெல்பேர்ன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாலகிருஷ்ணன் 08.09.2014 திங்கட்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா- அன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற தம்பாபிள்ளை- சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நேசமலரின் (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், கலாநிதி மயூரன் (ஆஸ்திரேலியா), ஈஸ்வரன் (பேராசிரியர் -ஓமன்), வாசுகன் (ஆஸ்திரேலியா), கல்பனா (ஆஸ்திரேலியா), நிர்மலராஜன் (நியூஸிலாந்து), கலாநிதி நந்தகுமார் (ஆஸ்திரேலியா) ஆகியோர்ரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி, வீரவாகு ஆகியோரின் அன்புச் சகோதரரும், குமுதினி, கிரிஸ், கிருஷாந்தி, சேகர், வாசுகி, சாம்பவி ஆகியோரின் அன்பு மாமனாரும், சோபி, காலஞ்சென்றவர்களான பவளமலர், குணசிங்கம் மற்றும் சொர்ணமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகேஸ்வரன், கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகலனும், காலஞ்சென்ற சுபத்திராதேவியின் அன்புச் சகோதரனும், தாரகா, நிக்கிசா, யநார்த்தனன், டானியா, தமரா, மதுரேஸ், நித்தியன், அக்சயன், திவேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பார்வைக்கு திகதி: சனிக்கிழமை 13.09.2014, மாலை 4.00 -6.00

முகவரி: Allison Monkhouse, Corner Stud Rd & Burwood Hw Wantirna VIC 3152, Australia.

கிரியை திகதி: ஞாயிற்றுக்கிழமை 14.09.2014, பி.ப 1.00 - 3.00

முகவரி: Boyd Chapel Springvale Botanical Cemetery, 600 Princes Highway, Springvale, VIC, 3171, Australia.

தொடர்புகளுக்கு:
வாசுகன் - ஆஸ்திரேலியா - +61421344920
கல்பனா - ஆஸ்திரேலியா - +61398005516
நிரு - நியூஸிலாந்து +6427217712
சேகர் - ஆஸ்திரேலியா - +61439333415



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ள இரட்டைக்கோபுரம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் 13 ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் நினைவுகூரப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, அவரது மனைவி மிச்செல் ஒபாமா, துணை ஜனாதிபதி ஜோ பிடென், மற்றும் பலர் வொஷிங்டன் வெள்ளை மாளிகையின் தெற்கு புல்வெளியில் நின்றவாறு அவர்கள் ஒரு கணம் மௌன அஞ்சலி செலுத்தினர். (வ)

## பிரிட்டன் இளவரசர் ஹரிக்கு மெழுகுச்சிலை

லண்டன், செப்.13

பிரிட்டன் இளவரசர் ஹரியின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது மெழுகுச்சிலை வைக்கப்பட்டுள்ளது

நாளை மறுதினம் தமது 30 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார் ஹரி. இதையொட்டி, லண்டனில் உள்ள மேடம் துசாட்ஸ் மெழுகு அருங்காட்சியகத்தில், இராணுவ உடையில் ஹரியின் புதிய மெழுகு சிலை வைக்கப்பட்டுள்ளது. (வ)



## 50 லட்சம் ஜிமெயில் கணக்குகள் திருட்டு

### அதிர்ச்சியில் கூகுள் பயன்பாட்டாளர்கள்

50 லட்சம் ஜிமெயில் கணக்குகள் திருடப்பட்டுள்ளமை கூகுள் பயன்பாட்டாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவைச் சேர்ந்த ஹாக்கிங் நிறுவனம் ஒன்று தங்கள் இணையத்தளத்தில் 50 லட்சம் ஜிமெயில் முகவரிகளும், கடவுச்சொற்களும், பிஷ்ஷிங் தொழில்நுட்பம் எனப்படும் போலியான இணையத்தள வடிவமைப்பைப் பயன்படுத்தி திருடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தகவல்கள் திருடப்பட்டமை தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள டேனிஷ் பாதுகாப்பு அமைப்பான சி.எஸ்.ஐ.எஸ். இதில் இடம் பெற்றிருக்கும் பெரும்பாலான முகவரிகள் (அதிகப்படியான தரவுகள் நிறைந்ததால்) உபயோகப்படுத்தப்படாமல் உள்ளன.

இதுபோன்ற காரணங்கள் நடக்கலாம் என்பதால் தான் கூகுள் தனது பரிந்துரைகளில் அடிக்கடி கடவுச்சொல்லை மாற்றிக் கொள்ளும்படி கூறியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்தச் செய்தி ஜிமெயில் பயன்பாட்டாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள கூகுள், இது போன்ற சம்பவம் ஏதும் நடைபெற்றதாக தகவல்கள் இல்லை, இருந்தாலும் உங்கள் கணக்கின் கடவுச்சொல்லை அடிக்கடி மாற்ற வேண்டியது அவசியம் என்று கூறியுள்ளது. (வ)

## ஐ.நா.அமைதிப் படையினர் 45 பேரும் விடுதலையாகினர்

சிரியாவில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட ஐ.நா. அமைதிப் படையினர் 45 பேரும் விடுவிக்கப்பட்டனர்.

உள்நாட்டுப் போர் மோசமடைந்து வருகின்ற சிரியாவில் ஐ.நா. அமைதிப்படை இயங்கி வருகிறது. அங்கு இஸ்ரேல் ஆக்கிரமிப்பு கோலன் ஹைட்ஸ் என்ற பகுதி உள்ளது. அந்தப் பகுதியில் பணியில் ஈடுபட்டிருந்த ஐ.நா. அமைதிப் படையினர் 45 பேரை, ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தை எதிர்த்து சண்டையிட்டு வரும் தீவிரவாதிகள் கடந்த ஓகஸ்ட் 28 ஆம் திகதி பிடித்துச் சென்றுவிட்டனர். அமைதிப்படையினர் பிஜி நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். பின்னர் அவர்களை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை ஐ.நா. மேற்கொண்டது.

அதனையடுத்து அமைதிப் படையினரை தீவிரவாதிகள் ஐ.நா. பாதுகாப்புக் குழுவிடம் ஒப்படைத்துள்ளனர். அமைதிப் படையினர் எந்த ஒரு காயமும் இன்றிப் பத்திரமாக ஒப்படைக்கப்பட்டனர். (வ)

# அமெரிக்காவின் வான் தாக்குதல் திட்டத்துக்கு ரஷ்யா கடும் எதிர்ப்பு

மொஸ்கோ, செப்.13

சிரியாவில் இஸ்லாமிக் ஸ்டேட் ஆயுதக் குழுவினர் மீது வான் தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டிருப்பதற்கு ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்புதல் இல்லாமல் நடத்தப்படும் இதுபோன்ற தாக்குதல்கள், ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவே கருதப்படும் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் ஐ.எஸ். அமைப்பு மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்றால் அந்த நாட்டு அரசிடம் அனுமதி பெற வேண்டும்என்றும்ரஷ்யாகூறியுள்ளது.

அப்படியில்லாமல் தன்னிச்சையாகத் தாக்குதல் நடத்தினால், அது சிரியா மீது போர் தொடுப்பதாகக் கருத நேரிடும் என்று ரஷ்யா வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சிரியாவும் அமெரிக்காவின் தாக்குதல் நடவடிக்கை தொடர்பாக எச்சரித்துள்ளது. சிரிய எல்லைக்குள் தாக்குதல் நடத்துவதற்கு முன்னதாக அரசுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் அந்த நாட்டு அரசு கூறியுள்ளது.

ரஷ்யாவின் ஏவுகணைத் திறன், கடற்படை ஆகியவற்றையும் மேம்படுத்துவோம். மேலும், விமானப்படைத்திறன், விண்வெளிப் பாதுகாப்புத் திறன் ஆகியன மேம்படுத்தப்படும் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

முன்னதாக, அந்தநாட்டுப் பாதுகாப்புத் துறை தொடர்பான செலவுகள் குறித்த கூட்டம் தலைநகர் மொஸ்கோவில் புதன்கிழமை நடைபெற்றது. அதிபர் விளாடிமிர் புடின் இந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

மீண்டும் நேட்டோவை சக்தி வாய்ந்த அமைப்பாக உருவாக்கும் நோக்கத்துடன் உக்ரைன் பிரச்சினையை மேற்கத்திய நாடுகள் தூண்டிவிடுகின்றன என்று புடின் குற்றஞ் சாட்டினார்.

கிழக்கு ஐரோப்பாவில் நேட்டோ படைகள் குவிக்கப்படுகின்றன. ஐரோப்பா, அலாஸ்கா பகுதிகளைப் பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு அமெரிக்க ஏவுகணைகள் ஈடுபடுத்தப்படுகின்றன. உலகின் எப்பகுதியிலும் உடனடித் தாக்குதல் என்ற அடிப்படையில் புதிய அச்சுறுத்தல் எழுந்துள்ளது.

மேலும், இதனை விளக்குவதற்காக ஒரு சித்தாந்தத்தை உருவாக்கி வருகிறார்கள். சர்வதேச அளவில் ஆயுதங்களை முடக்கும் விதத்திலான ஒரு தாக்குதல் என்கிற ரீதியிலான சித்தாந்தம் உருவாக்கப்படுகிறது என்று புடின் கூறினார்.

உலகின் எந்தப் பகுதியிலும் உள்ள இலக்கை ஒரே மணி நேரத்தில் அடையும் தாக்குதல் திட்டத்தை அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகம் வகுத்து வருகிறது.

இந்தத் தாக்குதலுக்காக அணு ஆயுதம் அல்லாத வழக்கமான ஆயுதங்களே உருவாக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், அவற்றை எதிர்கொள்வதற்கான ஆயுதங்களை ரஷ்யா உருவாக்க வேண்டி வரும் என்று ரஷ்ய பாதுகாப்புத்Oதுறை இணை அமைச்சர் யூரி போரி ஸாவ் முன்னதாக கூறினார்.

புதிய ஆயுதங்களை எதிர்கொள்வதற்காக, ரஷ்யாவும் புதிய ரக ஆயுதங்களை உருவாக்கும் கட்டாயத்துக்குத் தள்ளப்படும். தற்காப்புத்தான் எங்கள் நாட்டின் கொள்கை. அதில் எந்த மாற்றமும் கிடையாது என்றும் அவர் கூறினார். (வ)

## செவ்வாய்க் கிரகத்தில் கூட்டு ஆய்வு இஸ்ரோ, நாஸா பேச்சுவார்த்தை

வொஷிங்டன், செப்.13

செவ்வாய்க் கிரகத்தில் கூட்டாக ஆய்வு மேற்கொள்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோவும், அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸாவும் பேச்சு நடத்தி வருவதாக நாஸா அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

விண்வெளி ஆய்வுக்கான நாடாளுமன்றக் குழுவிடம், நாஸாவின் கோள் ஆராய்ச்சிப் பிரிவு இயக்குநர் ஜேம்ஸ் கிரீன் தெரிவித்ததாவது:-

நாஸாவின் ஆய்வுக் கலன் செவ்வாய்க் கிரக சுற்றுப் பாதையில் இந்தமாதம் நுழைய இருக்கும் நிலையில், இந்தியாவின் செவ்வாய்க் கிரக ஆய்வுக் கலனும் இரு நாள்கள் கழித்து அந்தச் சுற்றுப்பாதையை அடைய உள்ளது. இந்த நிலையில், இரு ஆய்வுக்கலன்களின் மூலமும் ஒருங்கிணைந்த ஆய்வு மேற்கொள்ள வசதியாக செவ்வாய்க் கிரக கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைப்பதற்கான பேச்சில் இஸ்ரோவும், நாஸாவும் ஈடுபட்டுள்ளன. (வ)

## அழிவிலிருந்து மீண்டுவரும் ஓசோன் படலம்

### ஐ.நா.தெரிவிப்பு

ஓசோன் படலம் அழிவில் இருந்து மீண்டு வருவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

பல வருடங்களாகத் தொடர்ச்சியாகக் குறைவடைந்து வந்த ஓசோன் படலத்தின் தடிப்பு தற்போது அதிகரித்து வருவதாக ஐ.நாவின் ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

அண்டாட்டிக்காவுக்கு மேலுள்ள ஓசோன் படலத்தின் துவாரம் வருடாந்தம் விரிவடைவதும் நின்று போயுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனினும் இந்தத் துவாரம் முற்றாக நேர் சீராவதற்கு போவதற்கு ஒரு தசாப்தம் எடுக்கும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. (வ)

## இலங்கை, இந்தியப் பெருங்கடலில் சுனாமி ஏற்படும் வாய்ப்பு

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

இலங்கை மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதியில் சுனாமிப் பேரலைகள் ஏற்படும் வாய்ப்பு அதிகமாக உள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

மியாமி பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களும், இலங்கையின் பேராதனைப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களும் இதுவரை இலங்கை மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம் பற்றி ஆய்வு செய்தனர்.

இதில், இலங்கையின் தென் கிழக்கில் உள்ள லகோன் கடல் பகுதியில் 22 வகையான படிமங்கள் காணப்படுவதைக் கண்டுபிடித்துள்ளனர்.

அங்கு படிந்துள்ள மணலை ஆராய்ச்சி செய்த அவர்கள் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி குறித்த வரலாற்று பதிவுகளைக் கொண்டு ஆராய்ச்சி செய்தனர்.

முடிவில், மியான்மரிலிருந்து இந்தோனேசியா வரையிலுள்ள இந்தியப் பெருங்கடல் எல்லைத் தட்டுக்களிலேயே அதிக அளவிலான சுனாமி பேரலைகள் ஏற்பட்டமை தெரியவந்துள்ளது.

100 ஆண்டுகள் முதல் 1000 ஆண்டுகள் இடைவெளிகள் வரை இந்திய பெருங்கடல் பகுதி நிலநடுக்கம் மற்றும் பேரலைகளால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நிலத்தட்டுக்கள் தொடர்ந்து ஒன்றுடன் ஒன்று இணைந்து அழுத்தம் ஏற்பட்டு வருவதால் சுமாத்ராவில் ஏற்பட்டதை போல 9.2 ரிக்டர் அளவு நிலநடுக்கமும், 2004 இல் ஏற்பட்ட சுனாமி பேரலைகளும் மீண்டும் இந்திய பெருங்கடல் பகுதியில் உண்டாக வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (வ)

# இலங்கை மீது இனிமேலும் கனிவு காட்ட வேண்டாம்

## மத்திய அரசை வலியுறுத்துகிறார் ராமதாஸ்



சென்னை, செப்.13

தமிழக மீனவர்கள் கைதில் இனியும் இலங்கையிடம் கனிவு காட்டக் கூடாது என்று ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுகுறித்து பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்:-

வங்கக்கடலில் கச்சத்தீவு மற்றும் கோடியக்கரை பகுதி யில் தனித்தனியாக மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 55 பேரை நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். இராமேஸ்வரம், பூம்புகார், காரைக்கால் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இந்த மீனவர்களின் 8 படகுகளையும் இலங்கைக் கடற்படை பறிமுதல் செய்துள்ளது. அவர்கள் இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவருமே இந்திய கடல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தான் மீன்பிடித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், இலங்கைக் கடற்படையினர் இந்திய கடல் எல்லையில் அத்துமீறி நுழைந்து மீனவர்களை கைது செய்ததாக தப்பி வந்த மீனவர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கைக் கடற்படையினரின் இத்தகைய அத்துமீறல்கள் கடுமையாகக் கண்டிக்கத்தக்கவை ஆகும்.

அண்மை காலமாக, குறிப்பாக சுப்பிரமணியசுவாமி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சிக் குழு இலங்கைக்கு சென்று ஜனாதிபதி ராஜபக்ஷவை சந்தித்த பின்னர், மீனவர்கள் மீதான தாக்குதலும், கைது நடவடிக்கையும் அதிகரித்துள்ளன. கைது செய்யப்பட்ட மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டாலும் அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு முடக்கி வைக்கப்படுவது வாடிக்கையான ஒன்றாகிவிட்டது.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து 38 நாள்களாக வேலை நிறுத்தம் மேற்கொண்ட இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள், மத்திய, மாநில அரசுகளின் வாக்குறுதியை ஏற்று இம்மாத ஆரம்பத்தில் தான் போராட்டத்தைக் கைவிட்டு மீண்டும் மீன்பிடிக்கச் சென்றனர். இதுவரை மொத்தம் 3 முறை அவர்கள் கடலுக்குச் சென்றுள்ள நிலையில், மூன்று முறையும் அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதற்கெல்லாம் மேலாக, கடல் வளத்தை தமிழக மீனவர்கள் அழிப்பதாக அடிப்படையற்ற குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கும் ராஜபக்ஷ, தமிழக மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளைத் திருப்பித்தர முடியாது என்றும் கூறியுள்ளார்.

இந்தியாவிடமிருந்து உதவிகளைப் பெற்றும், போர்க் குற்றம் தொடர்பான பிரச்சினைகளில் உலக நாடுகளின் நெருக்கடியிலிருந்து இந்தியாவின் அரவணைப்பால் தப்பித்தும் ஆட்சிநடத்தி வரும் ராஜபக்ஷ, இப்போது இந்தியாவையே மிரட்டும் வகையில் பேசுவதற்கு இந்திய அரசும் ஒருவகையில் காரணம் என்பதை மறுக்க முடியாது. தமிழக மீனவர்களைக் கைது செய்யும் பிரச்சினையாக இருந்தாலும், இலங்கை இனப்படுகொலை தொடர்பான குற்றச்சாட்டுகளாக இருந்தாலும் இலங்கையிடம் இந்தியா மென்மையான அணுகுமுறையைக் கடைபிடிப்பது தான் ராஜபக்ஷவுக்கு இவ்வளவு துணிச்சலைக் கொடுத்திருக்கிறது. இனியும் இதே போன்ற அணுகுமுறையை மத்திய அரசு கடைபிடித்தால் அது இந்தியநலனுக்கே எதிராக அமைந்து விடும் என்பதை மத்திய ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கை மீது இனியும் கனிவு காட்டுவதை விடுத்து, இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் 76 மீனவர்களையும், 72 படகுகளையும் எந்த நிபந்தனையுமின்றி உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று ஜனாதிபதி ராஜபக்ஷவை மத்திய அரசு எச்சரிக்க வேண்டும். அதைச் செயற்படுத்த இலங்கை மறுக்கும் பட்சத்தில் அந்நாட்டின் மீது கடுமையான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தியா தயங்கக் கூடாது- என்றுள்ளது. (வ)

## ராணுவ வீரரை காலணி நாடாவை கட்ட வைப்பித்து அவமரியாதை

### புதிய சர்ச்சையில் ராஜ்நாத் சிங்

கட்ச், செப்.13

இராணுவ வீரரொருவரைக் கொண்டு தம்து காலணி நாடாவைக் கட்ட வைப்பித்து அவமரியாதை செய்து விட்டார் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் என்று புதிய சர்ச்சை எழுந்துள்ளது.



குஜராத் மாநிலம் கட்ச் பகுதியில் உள்ள பாகிஸ்தான் எல்லையில் பாதுகாப்புப் பணிகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்வதற்காக மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் சென்றிருந்தார். அப்போது, அவரது கால்களில் அணிந்திருந்த காலணியின் நாடாக்கள் அவிழ்ந்துள்ளன.

அதைத் தொடர்ந்து ராஜ் நாத் சிங்கின் காலணியின் நாடாக்களை சிப்பாய் ஒருவர் கட்டிவிட்டுள்ளார். இந்தக் காட்சிகள் அங்கிருந்த வீடியோ கமராவில் பதிவாகி இருக்கிறது. அந்தக் காட்சிகள் தற்போது வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. தனது காலணி நாடாவைக் கட்டிவிட ராஜ்நாத் சிங் உத்தர விட்டாரா?, அல்லது அந்தச் சிப்பாய் தாமாக முன்வந்து காலணியின் நாடாவைக் கட்டி விட்டாரா? என்ற விவரங்கள் வெளியாகவில்லை. எனி னும், பல்வேறு தரப்பினரிடம் இருந்து எதிர்ப்பு கிளம்பி இருப்பதால், இந்த விவகாரம் தற்போது சர்ச்சையாக மாறியுள்ளது. (வ)






கனடா ஜெயசாயி சுப்பர் சென்டர்

இருப்பகற்றல் மற்றும்
மலிவு விற்பனையை முன்னிட்டு
ஜெயசாயி இல் விற்பனை செய்யும் அனைத்து
பொருள்களும் குறித்த விலையில் இருந்து
அரைவாசி விலைக்குப் பெற்றுக் கொள்வதுடன்
13, 14, 15 ஆகிய தினங்களில் 3000/=
ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும்
அனைத்து வாடிக்கையாளர்களும்
பரிசுப் பொதிகளைப்
பெற்றுக் கொள்ளலாம்.

114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393

(52206)(7.6.3)


## நித்திக்கு மீண்டும் ஆண்மைப் பரிசோதனை?

பெங்களூர், செப்.13

பெண் சிஷ்யை பாலியல் பலாத்கார வழக்கில், கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற ஆண்மைப் பரிசோதனைக்கு நித்தியானந்தா முழுமையாக ஒத்துழைக்காத நிலையில், அவரிடம் மீண்டும் பரிசோதனை நடத்தப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.



கடந்த 8 ஆம் திகதி பெங்களூர் விக்டோரியா மருத்துவ மனையில் நடைபெற்ற சோதனையின் முடிவுகளை இதுவரை பொலிஸாரிடம் மருத்துவமனை நிர்வாகம் வழங்கவில்லை. பரிசோதனை முழுமையாக முடிவடையாததால் அறிக்கை அளிக்க மருத்துவ மனை நிர்வாகம் தயங்கி வருவதாகக் கூறப்படுகிறது. இதனிடையே, பரிசோதனையிலிருந்து தப்பிக்க, சட்டத்தின் உதவியை நித்தியானந்தா நாடியுள்ளார்.

எனினும் குற்ற வியல் நடைமுறை சட்டம் 53 இன்படி, வலுக்கட்டாயமாக நித்தியானந்தாவைப் பரிசோதனைக்கு உட்படுத்த சட்டத்தில் இடமுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதையடுத்து அவர் மீண்டும் ஆண்மைப் பரிசோதனைக்கு உட்பட வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. (வ)


45ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 01.08.2014 சனிக்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

சின்னத்தம்பி
ரதீஸ்வரன் (ரங்கன்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (14.09.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் தாயின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கலைமதி வீதி,
புத்தூர் மேற்கு, புத்தூர்.

மருமக்கள், மச்சான்,
சகோதரர்கள்.

(52251)(7.6.3)



மரண அறிவித்தல்

ஞானதுரை அருண்தயாபரன்



யாழ். இணுவிலைப் பிறப்பிடமாகவும், நியூஸிலாந்து Aucklandஐ வதிவிடமாகவும் கொண்ட ஞானதுரை அருண்தயாபரன் 10-09-2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஞானதுரை- காலஞ்சென்ற இந்திராணி தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கீதாவின் அன்புக் கணவரும், வேதகியின் அன்புத் தந்தையும், தயானந்தி நந்தகுமார், கிருபானந்தி காந்தராஜா, கலைச்செல்வி உதயகுமாரன், விவேகானந்தி கந்தகுமாரன், மயூரானந்தி சுரேஷ் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், லதாராணியின் (இணுவில்) பெறா மகனும், பாலச்சந்திரன், ரவிச்சந்திரன் (இணுவில்) ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2014) ஞாயிற்றுக்கிழமை நியூஸிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
கீதா அருண்தயாபரன் (மனைவி) நியூஸிலாந்து : +6495344596
அம்பலம் ஞானதுரை (தந்தை) நியூஸிலாந்து : +6492712222
ஐயாத்துரை இரவிச்சந்திரன் ((இணுவில்) : 0212241841

தகவல்:
குடும்பத்தினர்.

(52208)(10.6.3)



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

Lion Lady
பரமேஸ்வரி
தவக்குமாரன்
(சித்தன்கேணி)



தோற்றம்
10.07.1952

மறைவு
13.09.2013

தற்காத்து தற்கொண்டாற் பேணித்
தகைசான்ற சொற்காத்து சோர்வின்றி
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாய் ஆகிய எம்தெய்வமே
ஆண்டு ஒன்று அல்ல அநேகம் தான் சென்றாலும்
நீண்டு நிலைக்கும் உம் நினைவுகள் எம் இதயமதில்

Lion.M. தவக்குமாரன் (கணவர் (M/J/F),
நிஷாந்தன் அஜந்தினி (மகள் - பிரான்ஸ்),
சிவரூபன் சிவந்தினி (மகள் - ரூபன் ஸ்ரோஸ்,
நிரு மெடிக்கல் கிளினிக், அளவெட்டி.



மகாவெலி சி வலய விவசாயிகளின் பெரும்போக நெல் அறுவடையின் முதற்பகுதியான பூசை செய்யும் விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டார். கிராந்துருகோட்டை தர்மோதய பிரிவெனயில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இந்தப் பயணத்தின்போது விகாரைக்கு அருகாமையில அமைக்கப்பட்ட சமன் தேவாலயத்தையும் திறந்து வைத்த ஜனாதிபதி முதலாவது பூசையிலும் கலந்துகொண்டார். ஜனாதிபதியின் பயணத்தை ஞாபகப்படுத்தும் வகையில் சிவலிங்க மரக்கன்று ஒன்றும் அவரால் நடப்பட்டது. (ற)

# ஊவா மாகாணத் தேர்தலை வெற்றிகொள்ளும் ஐ.தே.க.

## சூளுரைக்கின்றார் கட்சித் தலைவர் ரணில்

கொழும்பு, செப்.13

கட்சித் தலைவர்களை ஒரே மேடைக்குக் கொண்டு வந்து மஹிந்தவின் சவாலை வெற்றி கண்டது போன்று ஊவா மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிப்பீட மேற்றி அடுத்த சவாலையும் வெற்றிகொள்வேன். -

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



"மதுபானம் வழங்கி ஊவாவில் தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்ற வேண்டாம். ராஜபக்ஷ அரசுடன் இணைந்து செந்தில் தொண்டமான் எந்தவொரு சேவையையும் ஊவாவில் முன்னெடுக்கவில்லை. ஊவா மக்கள் வறுமையில் வாடும்போது ராஜபக்ஷ குடும்பம் செல்வத்தில் மிதந்துகொண்டிருக்கின்றது. நாட்டு மக்கள் பட்டினியால் வாடும்போது ஒரு குடும்பம் சுதந்திர சதுக்க வளாகத்தில் 200 ரூபாவுக்கு அப்பம் சாப்பிடுவதுடன் இலட்சம் பெறுமதியான கைக்கடிகாரங்களை அணிகின்றனர்"- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"ராஜபக்ஷ குடும்பத்தவராகவும் முதல்வராகவும் பதவி வகித்த சஷீந்திர ராஜபக்ஷ ஊவா மாகாணத்திற்கு இது வரையில் எவ்வித சேவையையும் முன்னெடுக்கவில்லை.

மஹிந்த தரப்பினர் தேர்தல் காலங்களில் மதுபானங்கள் வழங்கி தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றுகின்றனர். எனவே, அந்த ஏமாற்று வித்தைக்கு தொழி லாளர்கள் துணைபோகக் கூடாது"- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## தேர்தலில் மஹிந்த போட்டியிட முடியாது

கொழும்பு, செப்.13

மூன்றாவது முறையாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிட முடியாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மூன்றாம் தவணைக்காக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது குறித்து உயர் நீதிமன்றில் சட்ட விளக்கம் அளிக்கும் போதே சட்டத்தரணிகள் சங்கம் இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளது.

மேலும் மக்களின் கருத்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்எனவும் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது அரசியல் சாசனத்துக்கு புறம்பானது எனவும் இலங்கை சட்டத்தர ணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ற)

## 40 வயதான மன்மதனுக்கு மறியல்

கொழும்பு, செப்.13

21 வயதான காதலியை ஏமாற்றி அவளை கர்ப்பமாக்கி அவளிடமிருந்து 16 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளை மோசடி செய்த இரண்டு குழந்தைகளின் தந்தையான 40 வயதான தந்தையை எதிர்வரும் 25ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

திருமணம் முடித்துக்கொண்டு நியூஸிலாந்து சென்று விடுவோம் என்று கூறியே பணத்தையும் நகையையும் மோசடி செய்ததுடன் தன்னையும் கர்ப்பிணியாக்கியதாக அந்த பெண் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## தேர்தல் சட்டமீறல்; 42 பேர் கைது

கொழும்பு, செப்.13

ஊவா மாகாண சபைத் தேர்தல் சட்ட மீறல்களுடன் தொடர்புடைய 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து 63 சம்பவங்கள் பொலிஸாருக்குப் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவிக்கின்றார்.

தேர்தல் சட்ட மீறல்கள் குறித்து கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு வேட்பாளர்களும் அடங்கியுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

## கனேவத்தை சிறுமி கடத்தல்: தகவல் தந்தால் ரூ. 10 லட்சம்



கொழும்பு, செப்.13

குருநாகல் - கனேவத்தை, அம்ப கொலவெல பிரதேசத்தில் கடத்தப்பட்ட தாகக் கூறப்படும் நான்கு வயதான பமாரா கேஷானி தொடர்பில் தகவல் தருபவர்களுக்கு ரூபா 10 இலட்சம் சன்மானம் வழங்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்தத் தீர்மானம் பொலிஸ்மா அதிபரால் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்தச் சிறுமி தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் 011 - 2422176, 011 - 3024245 மற்றும் 0777- 223095 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தகவல்களை வழங்கலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பமாரா கேஷானி பண்டார என்ற நான்கு வயதுச் சிறுமி கடந்த 9ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அதிகாலை உறங்கிக் கொண்டிருந்தபோது இனம் தெரியாதோரால் கடத்தப்பட்டிருந்தார். (ற)

## ஐ.ம.சு.மு. உறுப்பினருக்கு பொலிஸார் வலைவீச்சு

### மாணவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினாராம்

கொழும்பு, செப்.13

புத்தளம், வனாதவில்லுவ பிரதேசத்தை சேர்ந்த ஆண் மாணவர்கள் அறுவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்று சந்தேகிக்கப்படும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் வனாத்தவில்லுவ பிரதேச சபை உறுப்பினர் தேடப்பட்டு வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்த னர்.


வனாத்தவில்லுவ, கரைத்தீவிலுள்ள பாடசாலை ஒன்றையைச் சேர்ந்த மாணவர்கள் கடந்த 2 ஆம் திகதி மாத்தறை, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை பிரதேசங்களுக்கு கல்விச்சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது பாடசாலையில் தரம் 9,10,11 மற்றும் 12இல் கல்வி பயிலும் 53 ஆண் மாணவர்கள், 35 பெண் மாணவிகள் மற்றும் 11 ஆசிரியர்களும் 3 அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் உட்பட பிரதேச சபை உறுப்பினரும் பங்குபற்றினர்.

சந்தேக நபர் மாணவர்கள் தங்கியிருந்த பள்ளியிலேயே ஆண் மாணவர்களை அவருக்கு கிடைக்கும் பல சந்தர்ப்பங்களில் துஷ்பிரயோகப்படுத்தியுள்ளார். அதன்பின்னராக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைத்தொடர்ந்து விசாரணைகளை ஆரம்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தார். (ற)

## ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்ற அர்ப்பணிப்புகளை செய்ய வேண்டும்

### கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவிப்பு



கொழும்பு, செப்.13

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்ற வேண்டுமாயின் பலர் அர்ப்பணிப்புகளைச் செய்ய வேண் டும். சில சந்தர்ப்பங்களில் அரசியல் கட்சிகள் தமது அடையாளங்களையும் இழக்க நேரிடும்- இவ்வாறு தெரிவித்துள்ளார் அரசியல் அமைப்பு தொடர்பான நிபுணரான கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன.

இலங்கை மன்றக்கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அந்த காலத்தில் கைச்சின்னத்தைத் தவிர வேறு சின்னத்தில் போட்டியிடுவதில்லை எனக் கூறி தோல்வியடைந்த சிலர் இருந்தனர். யானைச் சின்னத்தைத் தவிர வேறு சின்னத்தில் தேர்தலில் போட்டியிடு வதில்லை எனக் கூறி தோல் வியடையும் நபர்கள் இன்றும் உள்ளனர்.

1993 ஆம் ஆண்டளவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்த சிலர், கை அல்ல காலையாவது சின்னமாக வைத்து வெல்ல வேண்டும் என எண்ணினர். அதனடிப்படையில் 1994 ஆம் ஆண்டு மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தது. அதனால், கடந்த காலத்தை எண்ணி அழுது கொண்டிருக்க வேண்டாம்.

முன்னோக்கிப் பாருங்கள், எதிர் காலத்தைப் பாருங்கள் என நான் யோசனை கூறுகிறேன். இது சிரமமான வேலை எனினும் எம்மால் செய்ய முடியும். இம்முறை தவறினால், எதிர் கால சந்ததி எம்மை சபிக்கும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# அவருக்குப் பதில் இனி இவர்







சினிமா இரண்டரை மணி நேரம் ஓடும். ஆனால் சின்னத்திரை தொடர்கள் ஆயிரம் 'எபிசோட்களை' தாண்டும். அதாவது ஆயிரம் மணி நேரத்தையும் தாண்டி ஓடும். சின்னத்திரை தொடர்களில் சிறிய கதாபாத்திரங்களில் நடிப்பவர்கள், அதிலிருந்து விலகி விட்டாலோ, அல்லது மரணம் அடைந்து விட்டாலோ கதையிலும் அவர் இறந்து விட்டதாகக் காட்டி விடுவார்கள். அல்லது கண்டுகொள்ளாமல் விட்டு விடுவார்கள்.
ஆனால் முக்கிய கதாபாத்திரங்களில் நடிப்பவர்கள் விலகிக் கொண்டால் அவருக்குப் பதிலாக இன்னொருவரை நடிக்க வைப்பார்கள். 'அவருக்கு பதில் இனி இவர்' என்று தலைப்புப் போடுவார்கள். இது எப்போதாவது நடக்கிற ஒன்று. ஆனால் தற்போது இது அதிகரித்துள்ளது.
புகழ்பெற்ற சரவணன் மீனாட்சி தொடரில் சரவணனாக நடித்துக் கொண்டிருந்த இர்பான், சினிமாவில் நடிக்கப் போய்விட்டதால் தற்போது சரவணனாக வெற்றி நடிக்கிறார். இரண்டாவது பகுதியின் 200 ஆவது 'எபிசோடில்' இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது.
உறவுகள் சங்கமம் தொடரில் 25 'எபிசோட்கள்' முடிந்துவிட்ட நிலையில் இப்போது பாரதிக்கு பதில் ஸ்ரீதுர்கா நடிக்கிறார். அழகி தொடரில் சாலு குரியன் நடித்த கதாபாத்திரத்தில் இப்போது குட்டி பூஜா நடிக்கிறார். வாணி ராணி தொடரில் ராதிகாவின் மகனாக 400 'எபிசோட்கள்' வரை நடித்த அஜீத்துக்கு பதிலாக மானஸ் நடிக்கிறார்.
தெய்வம் தந்த வீடு தொடரில் நடித்துக் கொண்டிருந்த சரண்யாவுக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டு விட்டதால் அவருக்கு பதிலாக மோனிகா நடிக்கிறார். மல்லி தொடரில் நடித்த சோனியா அகர்வால் அதிலிருந்து விலகிக் கொள்ள, இப்போது சாண்ட்ரியா நடிக்கிறார்.
"இந்த மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. முதலில் ரசிகர்கள் கொஞ்சம் குழம்புவார்கள். பின்னர் மாற்றத்தை ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் கவனம் கதையில் ஆழ்ந்து இருப்பதால் தான் இந்த மாற்றங்களைச் செய்ய முடிகிறது" என்கிறார்கள் சின்னத்திரை இயக்குநர்கள்.

## இன்றைய பேஸ்புக் தத்துவம்



ரீயில ஊறின 'பண்ணும்' பேஸ்புக்கில 'கரக்ட்' பண்ணின பெண்ணும் நீண்ட நேரம் நிலைச் சிருக்காது

## குளிர்சாதன பெட்டியில் கூலாக இருந்த சிங்கம்!

பிரித்தானியாவில் உணவு விடுதி ஒன்றின் குளிர்சாதன பெட்டியில் சிங்கம் இருந்தது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. பிரித்தானியாவின் மேற்கு சசெக்ஸ் நகரில் விலங்கியல் பூங்கா ஒன்றின் அருகில் உள்ள உணவகத்தின் குளிர்சாதன பெட்டியில் இறந்த சிங்கம் ஒன்று இருந்துள்ளது.
இந்த நிலையில் உணவகத்தை மேற்பார்வையிட வந்த சுகாதாரத்துறை அதிகாரிகள் இறந்த நிலையில் சிங்கம் குளிர்சாதன பெட்டியில் வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்து அதிர்ந்துள்ளனர்.
மேலும் வாடிக்கையாளர்களுக்கு பரிமாறும் உணவுகள், அந்த இறந்த சிங்கத்தின் அருகில் இருந்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.
இதுகுறித்து உணவகத்தின் உரிமையாளரிடம் அவர்கள் விசாரணை மேற்கொண்ட போது, தனது நாய்க்கு உணவளிக்க இந்த சிங்கத்தின் இறைச்சியை வைத்துள்ளதாகக் கூறியுள்ளார்.
இதனையடுத்து அவர் மீது நடவடிக்கை எடுத்த அதிகாரிகள் உணவகத்தை மூடுமாறு உத்தர விட்டுள்ளனர். ஆனால் இந்த சிங்க இறைச்சியைத் தவிர வேறு எந்தப் பிரச்சினையும் அங்கு இல்லை என்பதால் உணவகத்தை வழக்கம் போல் செயற்பட அனுமதி அளித்துள்ளனர்.



## ரிலாக்ஸா வாசியுங்க




## பெண்கள் பற்றி ஏழு சிக்கலான உண்மைகள்

1. அவர்கள் சேமிப்பில் அக்கறை உடையவர்கள்.
2. சேமிப்பில் அக்கறை உடையவர்கள் ஆனால் விலையுயர்ந்த ஆடைகளையே வாங்குவார்கள்.
3. விலையுயர்ந்த ஆடைகளை வாங்குவார்கள் ஆனால் அணிய எதுவும் இல்லை என்று கவலைப்படுவார்கள்.
4. அணிய எதுவும் இல்லை என்று கவலைப்படுவார்கள், ஆனால் எப்போதும் அழகாக உடை அணிவார்கள்.
5. எப்போதும் அழகாக உடை அணிவார்கள், ஆனால் திருப்தி அடையமாட்டார்கள்.
6. திருப்தி அடையமாட்டார்கள், ஆனால் ஆண்கள் அவர்களை புகழ வேண்டுமென எதிர்பார்ப்பார்கள்.
7. ஆண்கள் அவர்களை புகழ வேண்டுமென எதிர்பார்ப்பார்கள், ஆனால் ஆண்கள் அப்படி செய்தாலும் அவர்களை நம்புவதில்லை.

## நாங்க புதுசா கட்டிக்கிட்ட ஜோடிதானுங்கோ!



## கவுண்டர் மீண்டும்



நகைச்சுவையில் கொடிகட்டி பறந்தவர் நடிகர் கவுண்டமணி. இவர் கடந்த சில வருடங்களாக திரைத்துறையிலிருந்து விலகி இருந்தார். தற்போது அவர் மறுபிரவேசம் எடுத்து '49 ஓ' படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார்.
இந்தப் படத்தை கௌதம் மேனனிடம் உதவி இயக்குநராக இருந்த ஆரோக்கியதாஸ் இயக்கியுள்ளார். அரசியல் அமைப்புப் பிரிவில் வாக்களிக்க விரும்பாதவர்கள் பயன்படுத்தும் '49 ஓ' என்ற உரிமை குறித்த கதையம்சம் இதில் காணப்பட்ட போதிலும் முழுக்க முழுக்க நகைச்சுவை கலந்து எடுக்கப்பட்டுள்ளது.
இந்தப் படத்தில் கவுண்டமணி ஒரு விவசாயியாக நடிக்கின்றார். இதனூடாக மக்கள் பிரச்சினைகளை எடுத்துரைப்பதாகக் கதை உருவாக்கப்பட்டுள்ளது.
இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது படப்பிடிப்பு. படத்தின் முன்னோட்டம் செப்ரெம்பர் 12 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

# தலைவலியைத் தூண்டும் உணவுப் பொருள்கள்



ஒருவருக்கு உடலில் ஏற்படும் வலிகளிலேயே மிகவும் தொல்லை தரக்கூடிய வலி தான் தலைவலி.

இத்தகைய தலைவலியானது அதிக சத்தத்துடன் இசை கேட்டாலோ, அதிகப்படியான வாசனையினாலோ அல்லது மன அழுத்தத்தினாலோ ஏற்படக்கூடும். அத்துடன் ஒருசில உணவுகளை உட்கொண்டாலும், தலைவலியானது அதிகரிக்கும்.

மேலும் அந்த உணவுகள் அனைத்தும் அனைவருக்குமே தலைவலியை தூண்டும் என்று சொல்ல முடியாது.

இங்கு அப்படி தலை வலியைத் தூண்டும் சில உணவுப் பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

**சொக்லெட்**

சொக்லெட்டைப் பார்த்தாலே அனைவருக்கும், அதைச் சாப்பிட வேண்டுமென்று மனமானது குதூகலப்படும். ஆனால் உங்களுக்கு அடிக்கடி தலைவலி வருமானால், இதனைச் சாப்பிடாமல் இருப்பது நல்லது. ஏனெனில் சொக்லெட்டானது தலைவலியை ஏற்படுத் தக்கூடிய உணவுப் பொருள்களில் ஒன்று.

**ஐஸ்கிறீம்**

பொதுவாக அதிக அளவில் குளிர்ச்சியுடன் இருக்கும் உணவுப் பொருள்கள் தலைவலியை ஏற்படுத்தும். அதில் ஒன்று தான் ஜஸ் கிறீம்.

அதிலும் இவற்றில் உள்ள அதிகப்படியான குளிர்ச்சியானது நரம்புகளைப் பாதித்து, தாங்க முடியாத தலைவலியை ஏற்படுத்தும்.

**வாழைப்பழம்**

சிலருக்கு தைரமின் என்னும் கெமிக்கல் ஒத்துக்கொள்ளாது. அத்தகையவர்கள் வாழைப்பழத்தை உட்கொண்டால், கடுமையான வலியுடன் கூடிய தலைவலியைச் சந்திப்பார்கள்.

எனவே ஒருமுறை வாழைப் பழத்தை உட்கொண்டு தலைவலி வந்தால், வாழைப்பழம் சாப்பிடுவதை தவிர்த்து விடுங்கள்.

**உலர் பழங்கள்**

உலர் பழங்களான உலர் திராட்சை மற்றும் அத்திப் பழம் போன்றவையும் தலைவலியைத் தூண்டும். அதிலும் ஒரு குறிப்பிட்ட மக்களுக்குதான் இந்த உணவுப் பொருளானது தலைவலியை ஏற்படுத்தும்.

# நாம் உணவில் மஞ்சளை ஏன் சேர்த்துக் கொள்ளவேண்டும்?



மஞ்சளுக்கு பல மருத்துவ குணங்கள் உண்டு. அதில் மிக சிறப்பானது மஞ்சள் கிருமி நாசினியாக பயன்படுவது. வயிற்றின் உள்ளே உள்ள கிருமிகளை விரட்டுவதில் மஞ்சளுக்கு நிகர் மஞ்சள்தான்.

சிறு குழந்தைகளுக்கு ஒரு சிட்டிகை அளவு மஞ்சள் தூளை, வேப்பங் கொழுந்துடன் வாரா வாரம் ஒரு முறை அரைத்துக் கொடுத்தால், வயிற்றில் பூச்சிகள் இருக்காது.

மேலும் சிறு குழந்தைகளுக்கு வரும் சளி, இருமலுக்கு பாலைக் கொதிக்க வைத்து அதில் சிட்டிகை மஞ்சள் தூள் போட்டு, சர்க்கரை சேர்த்து குடிக்கக் கொடுத்தால், சளி, இருமல் தொல்லை இருக்காது.

வறட்டு இருமல், ம்றறும் சளி இருமலால் இரவில் தூங்காமல் அவதிப் படுவோரும் பாலில் மஞ்சள் தூளைப் போட்டு கொதிக்க வைத்து பருகினால் இருமல் உடனே நின்றுவிடும்.

மஞ்சள் ஜீரணத்துக்கு உதவும் மருந்து கூட. நாம் அன்றாடம் செய்யும் சாம்பார், ரசம் இவைகளில் மஞ்சள் தூளை சேர்த்து விட்டு, அதனுடன் கூடவே பொரித்த வடை, அப்பளம் என்றெல்லாம் சாப்பிட்டால் உணவு உடனே ஜீரணமாகிவிடும். நாம் அன்றாடம் உணவில் சேர்க்கும் மிளகாய் பொடி, அத்தனை நல்லதல்ல. ஆனால், அதனுடன் கொஞ்சம் மஞ்சள் சேர்த்து சாம்பார் பொடி தயாரிக்கும் போது, மிளகின் கெட்ட தன்மையை மஞ்சள் தூள் முறியடித்து விடும். மஞ்சள் தூள் அன்றாட உணவில் சேரும்போது புற்று நோய்கூட அண்டாது.

சருமம், பெருங்குடல் புற்று நோய் கொஞ்சம் குறைவாக இருப்பது நாம் அன்றாடம் உணவில் மஞ்சள் சேர்த்துக் கொள்வதால்தான்.

மஞ்சள் வயோதிபத்தில் வரும் நினைவுத் தடுமாற்ற நோய், கீமோதெரப்பி தரும்போது ஏற்படும் பக்க விளைவுகளைத் தடுக்கின்றது.

சிறு வயது முதலே பெண் குழந்தைகள் முகத்தில் மஞ்சள் பூசிக் குளித்து வந்தால், முகம் பொன்னென மின்னும். முகத்தில் தேவையற்ற முடிகள் வளராது.

மஞ்சளில் உள்ள குர்குமின் சத்து புற்றுநோய் அண்டவிடாமல் தடுக்கும். ஏற்கனவே இருந்தாலும் அதன் வீரியத்தைக் குறைக்கும்.

உடலில் உள்ள உள் மற்றும் வெளிக் காயங்களை ஆற்றும், வீக்கத்தைக் குறைக்கும். அசைவச் சாப்பாட்டில் மஞ்சள் சேர்த்து சமைத்தால் விரைவில் ஜீரணமாகும். தவிர மஞ்சள் கிருமி நாசினி என்பதால் இறைச்சியில் ஏதும் கிருமிகள் இருந்தாலும் அழித்து விடும்.

# அப்பிள் தரும் ஆரோக்கியம்



ஆரோக்கியமாக வாழ்வதற்கு ஏராளமான வழிகள் உள்ளன. ஆனால் அவற்றை பின்பற்றுவதுதான் சற்றுக் கடினம்.

நாம் உண்ணும் உணவானது உடல் வளர்ச்சிக்கு உதவினாலும் அதிலுள்ள சிலப் பொருள்கள் வயிற்று உபாதையை ஏற்படுத்திவிடுகின்றன. நமது உணவிலுள்ள சில பொருள்கள் நமது விருப்பத்துக்கு ஏற்றவாறு சுவையாகவும் இருப்பதில்லை. இவ்வாறு உணவில் பல பிரச்சினைகள் உள்ளதால் நாம் சமைத்த உணவை விரும்பிச் சாப்பிடுவதை விட இயற்கையாக கிடைக்கும் பழம், கிழங்கு போன்றவற்றை சாப்பிடுவதைதான் அதிகம் விரும்புகிறோம்.

அவ்வாறு உட்கொள்ளும் சில பழங்களும் நமக்கு எப்பொழுதும் ருசியாக இருப்பதில்லை. அதிகமாக உட்கொண்டால் திகட்டக்கூடிய பழங்கள் அல்லது புளிக்கக் கூடிய பழங்கள்தான் உண்டு. ஆகவே சில நேரங்களில் தொடர்ந்து பழங்களை சாப்பிடுவதும் கூட சலிப்பு ஏற்படுத்தும்.

நாம் அன்றாடம் உணவை உட்கொள்ளும் பொழுது சில நேரங்களில் புளித்த ஏப்பம், வயிறு ஊதல், மலச்சிக்கல் போன்ற பல தொல்லைகள் உண்டாகும். இந்தத் தொல்லைகளிலிருந்து நம்மை காத்துக்கொள்ள மருந்துகளையும், செரிமான பாணி மருந்துகளையும் உட்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. பெரும்பாலானோர் உண்ணும் உணவைச் செரிப்பதற்கும், போதைக்கும் குறைந்தளவு மதுவை அருந்துவ துண்டு. இவ்வாறு சிறிய அளவில் ஆரம்பிக்கும் மதுபோதைப் பழக்கம் நாள்கள் செல்லச் செல்ல கடும் போதைக்கு அடிமை யாகும் வாய்ப்புக்கு ஆளாகின்றனர்.

இது போன்ற மது போதை அடிமைகளை மீட்கவும், அன்றாடம் உடல் ஆரோக்கியம் மேம்படவும் நமது உண்ணும் உணவிலுள்ள நச்சுகளை நீக்கவும், இரத்தத்தில் கலந்துள்ள நுண்கிருமிகளை நீக்கி இரத்தத்தை சுத்தம் செய்யவும் பழங்களை உண்ணுவது நல்லது. இவற்றில் முதலிடத்தை பிடிப்பவை அப்பிள் பழங்களே.

அப்பிளில் நீர்ச்சத்து, புரதச்சத்து, குளோரோபில், மாலிக் அமிலம், சிட்ரிக் அமிலம், பொஸ்பரஸ் மற்றும் பல ஓர்கானிக் அமிலங்கள் உள்ளன. இவை செரிமானப் பாதையில் ஏற்படும் என்சைம்கள் குறைபாட்டை சீர் செய்வதுடன் பலவிதமான வயிற்றுக் கோளாறுகள் வருவதை தடுக்கின்றன.

மது அருந்துபவர்களுக்கு இரத்தத்தில் கலந்துள்ள அல்கஹோலின் அளவைக் குறைக்க அப்பிள் பெருமளவு உதவுகிறது. விஸ்கி எனப்படும் மதுவிலுள்ள பல சத்துகள் அப்பிளில் காணப்படுவதால் தொடர்ந்து அப்பிளை சாப்பிட்டு வர விஸ்கி அருந்தும் எண்ணம் கட்டுப்படும். தோல் நீக்காத அப்பிளிலிருந்து தயாரிக்கப்படும் பழச்சாறு இரத்தத்தைச் சுத்தம் செய்து இரத்தத்தில் கலந்துள்ள அதிக அமிலத் தன்மையை நடுநிலைப்படுத்துகிறது.

வயிற்று தொல்லை உள்ள போது இனிப்புச் சேர்க்காத அப்பிள் பழச்சாற்றைச் சாப்பிட்டு வர வயிற்றிலுள்ள ஹைட்ரோகுளோரிக் அமிலம் கார்பானிக் அமிலமாக மாற்றப்பட்டு நெஞ்சுக்கரிப்பு கட்டுப்படுகிறது. செரிமான சக்தி அதிகரிக்கிறது.

அப்பிளிலுள்ள மாலிக் அமிலம் மலச்சிக்கலை நீக்கி குடற்பாதையிலுள்ள நுண்கிருமிகளைக் கொல்கிறது. அப்பிளை நன்கு மென்று சாப்பிட வாய் மற்றும் தொண்டைப்பகுதிகளிலுள்ள நுண்கிருமிகள் நீங்குகின்றன.

வயதானவர்களுக்கு அப்பிள் மேற்தோலானது செரிக்கக் கடினமாக இருக்குமென்பதால் மேற்தோலை நீக்கி உட்கொள்வது நல்லது.

நீர்ச்சத்து ஏராளமாக உள்ள அப்பிள் பழத்தை கோடைக்காலத்தில் நன்கு உட்கொள்ளலாம்.

இதில் ஏராளமான மாச்சத்து நிறைந்துள்ளதால் நீரிழிவு நோயாளிகள் தங்கள் சரிவிகித சமஉணவுக்கு ஏற்றவாறு மருத்துவரின் ஆலோசனையின் படி ஒன்று அல்லது இரண்டு கீற்றுகள் அப்பிளை எடுத்துக்கொள்ளலாம்.

# உடல்நலக் குறிப்புகள்

மருதாணியைப் பூசிய பிறகு மறுநாள் விரல்களில் இருந்து அதை நீக்கி விட்டு, மறுபடியும் விரலில் தேங்காய் எண்ணெயைத் தேய்த்து மீண்டும் அதில் மருதாணியைப் பூச வேண்டும்.

முகத்தில் அல்லது உடம்பில் கருமையாக தேமல் படர்ந்தால் மருதாணி இலையை அரைத்து வைத்துக் கொண்டு, அதனுடன் சின்னத்துண்டு சவுக்காரம் சேர்த்துப் பிசைந்து தொடர்ந்து பூசிக் கொண்டு வந்தால் கருந்தேமல் நிறம் மாறி விடும்.

உடம்பில் பருமன் ஏற முக்கிய காரணம் இரவுச் சாப்பாடு தான். இரவுச் சாப்பாட்டை லேசாக்கி கொள்ளுங்கள். அல்லது விலக்கிக் கொள்ளுங்கள். கொஞ்சம் கொஞ்மாக உடல் எடை குறைந்து வருவீர்கள்.

* * *

எலுமிச்சம் பழத்தோலைக் காயவைத்து இடித்து உப்பு சேர்த்து வைத்து தினமும் அந்தப்பொடியுடன் நல்லெண்ணெய் சேரத்து பல்துலக்கி வர பல் பளபளவென்று ஆவதுடன் வாய் நாற்றமும் நீங்கி விடும்.

* * *

சுக்கையும், கல் உப்பையும் சம அளவு பொடி செய்து காலை இரவு உணவோடு கலந்து கொண்டால் வாந்தி, சோர்வு, ஆகியவை நீங்கும். நல்ல பசி உண்டாகும்.

* * *

தினசரி உணவோடு வெங்காயத்தைச் சேர்த்துக் கொள்வது நல்லது. குழந்தைகளுக்குத் தினமும் பச்சை வெங்காயத்தைக் கொடுத்து வந்தால் தடிமன், காய்ச்சல் வராது.



# முழங்காவில் மருத்துவமனை வரை பஸ் சேவைகளை நீடிக்கவேண்டும்

## நோயாளர் தரப்பில் கோரிக்கை

கிளிநொச்சி, செப்.13

கிளிநொச்சி-முழங்காவில் சேவையில் ஈடுபடும் சகல பஸ்களையும் முழங்காவில் மருத்துவமனைவரை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்று முழங்காவில் பகுதி முதியோர் சங்கம் மற்றும் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் கிளிநொச்சி அரச அதிபரிடம் மனுமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஏ-32 பிரதான வீதியிலிருந்து முழங்காவில் ஆதார மருத்துவமனைக்கு நாள் தோறும் பெருமளவு நோயாளர்கள் வருகை தருகின்றனர்.

பத்தினிப்பாய், செக்காலை, பாலாவி, பொன்னாவெளி, வேரவில், வலைப்பாடு, கிராஞ்சி, திக்குவில், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, நாச்சிக்குடா, வெள்ளாங் குளம், கணேசபுரம், தேவன்பிட்டி, 3 ஆம் பிட்டி, பாலி யாறு போன்ற தூர இடங்களிலிருந்து முழங்காவில் சந்தி வரை பஸ்களில் வந்து இறங்கும் நோயாளர்கள் அங்கிருந்து 500 மீற்றர் தூரத்திலுள்ள மருத்துவமனைக்கு ஓட்டோவுக்குப் பணம் செலுத்தியும் நடந்தும் செல்ல வேண்டியுள்ளது.


இந்த நெருக்கடியான நிலையில் ஏ-32 சாலையில் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்கள் மருத்துவமனை வரை பயணிக்க வேண்டும்.

குறிப்பாக முழங்காவில் பிள்ளையார் ஆலயத்திலிருந்து கிளிநொச்சி நகருக்கான போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்கள் மருத்துவமனையிலிருந்து பயணத்தைத் தொடங்குவதன் மூலம் நோயாளர்கள் பெரும் நன்மையடைவார்கள்.

இந்த விடயத்துக்கு முன்னுரிமை வழங்கி அரச அதிபர் தகுந்த நடவடிக்கையெடுக்க வேண்டும்- என்றுள்ளது.

இதேவேளை- அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்குச் செல்ல தாம் பஸ்களில் இருந்து இறங்கும் இடத்திலிருந்து 800 மீற்றர் நடந்து செல்ல வேண்டியுள்ள நிலை யில் பஸ்களை அக்கராயன் மருத்துவமனை வரை சேவையில் ஈடுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாக விடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-18)

## மரக்கறிச் செய்கை வவுனியாவில் பாதிப்பு



வவுனியா, செப் 13

வவுனியா பிரதேசத்தில் மரக்கறிச் செய்கையில் ஈடுபடுபவர்கள் வறட்சியாலும் தென்பகுதி வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகளாலும் பாதிப் படைந்துள்ளனர் என்று கூறப் படுகின்றது.

கடும் வறட்சி காரணமாக நீர் நிலைகளும் கிணறுகளும் வற்றிவிட்டன. இதனால் நீரின்றிப் பயிர்கள் கருகுகின்றன. தப்பி ஒட்டி நிற்கும் பயிர்களைப் பாதுகாத்து அதிலிருந்து கிடைக் கும் உற்பத்திகளைச் சந்தைக்குக் கொண்டு சென்றால், அவற்றுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை என்று அவர்கள் கவலையடைகின்றனர்.

மகாவலி ஆற்று நீரின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிகள் தென்பகுதியில் இருந்து எடுத்து வரப்படுவதால் அவை குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.

அவர்களுக்குத் தண்ணீர் கிடைக் கிறது. அதற்கு செலவு இல்லை. எமக்குத்தான் மின்சாரம், மண்ணெண்ணெய் என செலவு. அவர்களுடன் நாம் போட்டி போட முடியாது. எனவே எங்கள் உற்பத்திக்கும் நியாயமான விலை கிடைக்க உரியவர்கள் வகை செய்ய வேண்டும் என வவுனியா விவசாயிகள் கோரியுள்ளனர். (த)



வறிய நிலையில் வவுனியா கோமரசங்குளம் மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்வி கற்று வரும் என்.நிதர்சன் என்ற மாணவனின் குடும்ப நிலைமையை அந்தப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை திருமதி பவானி ஞானவேலாயுதம் வெளிப்படுத்தியதை அடுத்து, இந்தவிடயத்தை வட மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் கவனத்தில் எடுத்து குறிப்பிட்ட அந்த மாணவன் தமது கல்வியைத் தொடர்வதற்கு 5ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட கற்றல் உபகரணங்களை வழங்கியதுடன் மேலதிக தேவையைக் கேட்டறிந்து உதவி வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார். (த-421)

## மாணவர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி. செப்.13

அமெரிக்கத் தூதரகத்தின் அனுரணையுடன் கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட விசேட ஆங்கில பயிற்சிநெறியில் தேர்ச்சிபெற்றவர்களில் 38 மாணவர்கள் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு அழைக்கப்பட்டு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நேற்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு இந்தக் கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது.

அமெரிக்கத் தூதரகத்தால் நடத்தப்பட்ட ஆங்கிலப் பயிற்சி நெறியில் சிறப்பாகச் சித்தியெய்திய 38 மாணவர்களும் அவர்களுக்குப் பயிற்சி வழங்கிய மூன்று ஆசிரியர்களும் நேற்று அமெரிக்கத் தூதரகத்தில் வைத்துக் கௌரவிக்கப்பட்டனர். அமெரிக்கத் தூதரகத்தால் விசேடமாக அனுப்பப்பட்ட பஸ் மூலம் கொழும்புக்கு இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். (த)

# பாரதியார் நினைவு குருமன்காட்டில்



வவுனியா, செப் 13

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு தினம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வவுனியா குருமன் காடு பகுதியில் உள்ள அவரது உருவச் சிலை முன்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாரதியாரின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவரது தமிழ் பற்று மற்றும் சுதந்திர வேட்கை தொடர்பான கருத் துரைகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் வவுனியா நகரசபைச் செயலாளர் க.சத்திய சீலன், சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ். வாசன், கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தைச் சேர்ந்த கவிஞர் மாணிக்கம் ஜெகன் உள்ளிட்ட அந்தப் பகுதி வர்த்தகர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த)

# மீள்குடியேற்றக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை

## மாகாண சபை உறுப்பினர் விசனம்

கிளிநொச்சி, செப்.13

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற முகமாலை மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டத்துக்கு தனக்கு அழைப்பு விடுக்கப்பட வில்லையென வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.அரியரட்ணம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததா வது:-

முகமாலை எனது சொந்தக் கிராமம். எனது சொந்தக் கிராமத்தில் நடைபெறவுள்ள மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மற்றும் அரச சார்பு மாகாண சபை உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருந்தபோதிலும், முகமாலையைச் சொந்த இடமாகக் கொண்ட மாகாண சபை உறுப்பினரான எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இதனால் முகமாலை தொடர்பான ஆக்கபூர்வமான தகவல்களைக் கூட்டத்தில் தெரிவிக்கக்கூடிய வாய்ப்பு எனக்கு மறுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (த-18)

# கரியாலைநாகபடுவான் குளத்தை ஆழமாக்கிப் புனரமைக்கவேண்டும்

## அந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, செப்.13

கிளிநொச்சி, பூநகரியின் கரியாலைநாகபடுவான் குளத்தை ஆழமாக்கி புனரமைப்புச் செய்யுமாறு அந்தக் குளத்தின் கீழ் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



இந்தக் குளம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து முழுமையான புனரமைப்புகள் இடம்பெறாமையால் தாம் தகுந்த பலனைப் பெற்றுக்கொள்ள முடியவில்லையென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

450 ஏக்கர் வரையான காலபோக நெற்செய்கை மேற்கொள்ளக்கூடிய இந்தக் குளத்தை ஆழமாக்கிப் புனரமைப்பதன் மூலம் கூடுதலான வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ள முடியுமென விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வறட்சியால் நீர் மட்டம் அடிநிலையைச் சென்ற முதலாவது குளமாக இந்தக் குளம் காணப்படுகின்றது.

தற்போது அதன் அணைக்கட்டுகள் பல இடங்களில் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. (த-18)

# றோலர் மீன்பிடித் தடை காரணமாக 1000 குடும்பங்கள், மாணவர் பாதிப்பு

## மாற்று வழியை ஆராய்கின்றது குழு

யாழ்ப்பாணம், செப். 13

குருநகர் மற்றும் வல்வெட்டித்துறையில் றோலர் மூலமாக மீன்பிடிக்கும் தொழில் முறைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதனால் சுமார் ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குருநகரில் 6 மாதங்களுக்கு முன்னரே இவ்வாறு தடை விதிக்கப்பட்டபோதும் மாற்றுத் தொழில் முறைகள் எதுவும் செய்யப்படாததனால் அங்குள்ள சுமார் 800 இற்கும் மேற்பட்ட மீனவக் குடும் பங்கள் 6 மாதங்களாகத் தொழில் இன்றியுள்ளதோடு அவர்களில் சுமார் 150 மாண வர்கள் பாடசாலைகளுக்கு ஒழுங்கீனமான வரவுகளுடன் காணப்படுவதாகவும் வடக்கு மாகாண சபை உறுப் பினர் இ.ஆனல்ட் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மீன்பிடியை அபிவிருத்தி செய்யவும், கடல் வளத்தைப் பாதுகாக்கும் நோக்கிலும் வடமாகாண முதலமைச்சரின் ஆலோசனைக்கமைய வடமாகாண மீன்பிடித்துறை அமைச்சரால் அமைக்கப்பட்ட 15 பேர் கொண்ட குழு யாழ். நாவலர் வீதியிலுள்ள அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் கூடி வடமாகாண மீன்பிடி அபிவிருத்தி குறித்து ஆராய்ந்தது. அதில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர்கள், வடக்கு மாகாண உறுப்பினர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அதில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஆனல்ட் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்:

குருநகரில் 174 றோலர்கள் உள்ளன. அவை கடந்த 6 மாதங்களாகத் தொழில் இன்றி உள்ளன. அதனால் அவற்றை நம்பி வாழும் சுமார் 88 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்கள் வேறு தொழில் இன்றி அவதிப்படுகின்றனர். ஒரு மாதச் சம்பளம் தாமதமாகக் கிடைத்தால்கூட நாம் எவ்வளவு கஷ்டங்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொள்வதோடு மனத் தாக்கங்களுக்கும் உள்ளாகிறோம். அப்படியிருக்கையில் 6 மாதங்களாகத் தொழில் இன்றியுள்ளவர்களின் நிலை எப்படியிருக்கும்?

எனவே றோலர் பயன்படுத்துவதற்குச் சட்டரீதியாகத் தடை உள்ளபோதும் அதற்கு விசேட அனுமதி பெற்றுக் குறிப்பிட்ட காலம் வரை அதனை அனுமதிப்பது தொடர்பில் ஆராய வேண்டும் அல்லது மாற்றுத் தொழில் முறைகள் பற்றி ஆராயவேண்டும். தடை செய்யப்பட்ட 17 வகைத் தொழில்கள் உள்ளன. ஆனால் றோலரை மாத்திரம் தடை செய்வதனைக் கடுமையாக நடைமுறைப்படுத்திவிட்டு ஏனைய தொழில் முறைகளுக்கு மென்போக்கில் நடவடிக்கை எடுப்பது என்ன நியாயம்? என மீனவர் கேள்வியெழுப்பியுள்ளனர் என்று தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையில் குறித்த காலப் பகுதியில் மாத்திரம் றோலர் பயன்படுத்தி மீன் பிடிப்பது வழமை. தற்போது அந்தக் காலப்பகுதியாக இருப்பினும் தடை காரணமாக வல்வெட்டித்துறை மீனவர்களும் தொழில் இன்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் மாற்றுவழி தேவை என்று வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அவற்றைக்கவனத்தில்கொண்ட குழு, மீண்டும் அனுமதி வழங்குவது சட்டத்துக்குப் புறம்பானது. பதில் தொழில் முறைகள் தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தற்போதுள்ள பிரச்சினைகள் தொடர்பில் நேற்று முன்தினம் ஆராயப்பட்டது. இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் துறைசார் வல்லுநர்கள் பலரையும் இணைத்து ஆராயப்படவுள்ளது. அவற்றை எப்படித் தீர்ப்பது என்பது தொடர்பில் அடுத்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்படும்.

அதில் எடுக்கப்படும் முடிவுகள் குறித்தும், றோலருக்கு விசேட அனுமதி வழங்குவது தொடர்பிலும் மத்திய மீன்பிடித்துறை அமைச்சருடன் கலந்துரையாடி முடிவு எட்டப்படும். தற்போதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் அல்லது மாற்று வழிமுறைகள் விரைவில் கிடைக்கும்.

இந்தக் குழு நீண்டகாலத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படவுள்ளது. சட்டமுறைகளைப்பின்பற்றியே அது செயற்படவுள்ளது. அதனால் எந்தப் பகுதிக்கும் சென்று கடல்வள, மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்படும் என்று மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவித்தார்.

அங்கு நன்னீர் மீன்பிடி, மீனவர்களுக்கான எண்ணெய் மானியம், இறங்குதுறைகளின் அபிவிருத்தி உட்பட பல விடயங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன. (த-4)

# நெடுந்தீவில் கடத்தப்பட்ட குதிரைகள் திருகோணமலை கடற்படை முகாமில்

## விசாரணைகளின்போது தெரியவந்தது

யாழ்ப்பாணம்.செப்.13

நெடுந்தீவில் கடத்திச் செல்லப்பட்ட குதிரைகள் திருகோணமலை கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன என விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.



நெடுந்தீவில் கடத்திச் செல்லப்பட்ட குதிரைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காகவடக்குமாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மாகாண சபை உறுப்பினர் ஆகியோர் நேற்று முன்தினம் நெடுந்தீவுக்கு நேரடியாக பயணம் மேற்கொண்டனர்.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்னதாக நெடுந்தீவில் இருந்து கடற்படையினரால் 4 குதிரைகள் வெளியே கொண்டு செல்லப்பட்டுள்ளன. நெடுந்தீவில் காட்டுப் பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 500 இற்கும் மேற்பட்ட குதிரைகளுக்கு பாதுகாப்பு இல்லாத காரணத்தால் படையினரின் தேவைக்காக 4 குதிரைகள் கடத்திச் செல்லப்பட்டிருப்பதாக அப்பகுதி மக்களால் வடமாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சுக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் ஊடாகத் தெரியப்படுத்தி இருந்தனர்.

இது தொடர்பில் கால்நடை அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை மேற்கொள்வதற்காக நெடுந்தீவுக்குச் சென்ற வேளை விசாரணைகளின் போது திருகோணமலை கடற்படை முகாமுக்கு குதிரைகள் கடத்தப்பட்டமை தெரியவந்தது.

நெடுந்தீவு பிரதேச செயலகத்திடம் இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளச் சென்ற வேளை அங்கு பிரதேச செயலர் கடமையில் இல்லாத காரணத்தால் இன்னொரு உத்தியோகத்தர் கடற்படையினர் குதிரைகளைக் கொண்டு செல்வதற்கு வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடம் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட சிங்கள மொழி மூலமானகடிதத்தைக்காண்பித்தார்.

உத்தியோகத்தரால் பூரணமான விளக்கம் வழங்கப்படாத நிலையில் நெடுந்தீவு கடற்படை அதிகாரியைச் சந்தித்தபோது, தமக்கு மேலிடத்தில் இருந்து வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைவாக தாம் குதிரைகளை இங்கிருந்து கொண்டு செல்ல அனுமதி வழங்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் குறித்த பிரதேச சூழ்நிலை மற்றும் கால நிலைகளுக்கு ஏற்ப வாழப் பழக்கப்பட்டு இனவிருத்தி அடைந்து வரும் குதிரைகளைக் கடத்தி புதிய இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதால் அவை நோய் வாய்ப்பட்டு இறக்க நேரிடும். அத்துடன் இன்னமும் இது போன்று குதிரைகள் நாளாந்தம் கடத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றன எனவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பில்வடக்குமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவிக்கும்போது,

நெடுந்தீவில் இருந்து கடத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட நான்கு குதிரைகளும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதியுடன் கடற்படையினரால் திருகோணமலைக் கடற்படை முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

நெடுந்தீவில்வாழ்கின்றபோனிரகக் குதிரைகள் போர்த்துக்கேயரால் கொண்டுவரப்பட்டவை. எனினும் பெருநிலப் பரப்பில் இருந்து துண்டிக்கப்பட்ட நெடுந்தீவில் பன்னெடுங் காலம் தனிமைப்படுத்தப்பட்டு வாழ்ந்து வந்ததன் காரணமாக வடக்குக்கே உரித்தான தனித்துவமான ஒரு ரகமாகவும், வடக்கின் மரபுரிமைகளில் ஒன்றாகவும் இன்று இந்தக் குதிரைகள் மாறி உள்ளன. எனினும் ஏறத்தாள 500 குதிரைகள் மட்டுமே தற்போது இங்கு வாழ்வதால் அவற்றை உரிய முறையில் பாதுகாக்கத் தவறினால் விரைவிலேயே அவை முற்றாக அழிந்து விடும் அபாயம் உள்ளது.

இதனைப் பலரும் சுட்டிக் காட்டியதன் காரணமாக இலங்கை வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், நெடுந்தீவில் குதிரைகளுக்கு 537 ஹெக்டெயர் பரப்பளவில் சரணாலயம்ஒன்றை அமைக்க முன்வந்துள்ளது. இதற்கான அனுமதிகோரிவடக்குமாகாண முதலமைச்சரிடம் வடக்கு மாகாணக் காணி ஆணையாளர் கோரிக்கைக் கடிதம் ஒன்றையும் அனுப்பியிருக்கிறார்.

வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் ஒருபுறம் குதிரைகளைப் பாதுகாப்பதற்காகச் சரணாலயத்துக்கு அனுமதியைக் கோரிவிட்டு இன்னொரு புறம் கடற்படையினர் குதிரைகளைப் பிடித்துச் செல்வதற்கு அனுமதி வழங்கியிருப்பது முரண்பாடானது. இது கண்டிக்கத்தக்கது. திருகோணமலை கடற்படை முகாமில் குதிரை ஒன்று தனிமையில் வாடுவதாகவும் அதற்குத் துணையாகவே நெடுந்தீவிலிருந்து குதிரைகள் கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும் தனது மேலதிகாரிகளின் வேண்டுதலின்பேரில் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதியுடன் தாம் இதற்கு அனுமதித்ததாகவும் நெடுந்தீவு கடற்படைமுகாம் அதிகாரி லெப்டினன்ட் கொமாண்டர் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

தவறான முன்னுதாரணமாக இந்தச் சம்பவம் அமைந்து விடக்கூடாது என்பதால் கொண்டு சென்ற குதிரைகளை மீளவும் நெடுந்தீவிலேயே கொண்டு வந்து விட்டு விடுமாறு திருகோணமலைக் கடற்படை உயர் அதிகாரிக்கு உத்தியோகபூர்வமாக விரைவில் அறிவிக்கவுள்ளோம். கடற்படையினர் தங்களுக்குக் குதிரைகள் தேவையென்று கருதினால், இலங்கை பொலிஸ் துறையில் ஒரு பிரிவாகவுள்ள குதிரைப் படைப்பிரிவில் இருந்து இளைப்பாறும் குதிரைகளைப் பெற்றுக் கொள்ளலாம். எனவே நெடுந்தீவுக்கே உரித்தான குதிரைகளைக் கடத்திச் செல்ல வேண்டிய தேவையில்லை எனவும் தெரிவித்தார். (த-14)

# ஜோசெவ்வாஸ் அடிகளாருக்கு புனிதர் பட்டம் வழங்கும் நிகழ்வு

கொழும்புத்துறை,செப். 13

பாப்பரசரின் இலங்கைக்கான பயணத்தின்போது இலங்கையின் அப்போஸ்தலர் என அழைக்கப்படும் முத்திப்பேறு பெற்ற ஜோசெவ்வாஸ் அடிகளாருக்கு புனிதர் பட்டம் வழங்கும் திருச் சடங்கு நடைபெறும் சாத்தியங்கள் காணப்படுவதாக ஆயர் இல்லச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மறைந்த திருந் தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் இலங்கைக்கு பயணம் செய்தபோது ஜோசெவ் வாஸ் அடிகளாருக்கு முத்திப்பேறு பட்டம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை திருத்தந்தையின் வருகைக்கான ஆன்மிக ஆயத்தங்களாக நற்கருணை வழிபாடுகள், திரிதின ஆராதனைகள், திருப்பலிகளில் விசேட மன்றாட்டுக்களை மேற்கொள்வதுடன் ஞானப் பூச்செண்டுகள், கொடிகள், சுலோகங்கள் தயாரித்து திருப்பயணத்தை அர்த்தமுள்ளதாக்க வேண்டுமென யாழ். ஆயர் அறிவித்துள்ளார். (த-135)

# மாவை சேனாதிராசாவுக்கு மிகச் சிறப்பான வரவேற்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவுக்கான வரவேற்பு நிகழ்வு கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் மிகச் சிறப்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்திலும், யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக் கட்சியின் அலுவலகத்திலும் இந்த வர்வேற்பு நிகழ்வுகள் கட்சி அமைப்பாளர்களால் நடத்தப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாடு கடந்த சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றபோது கட்சியின் புதிய தலைவராக மாவை சேனாதிராசா தெரிவு செய்யப்பட்டிருந்தார். தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர் முதன் முதலாக நேற்று வடக்குக்கு வருகை தந்தார்.

இதன்போது முதலில் கிளிநொச்சி மாவட்டத்தில், அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. கிளிநொச்சியிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தலைமையில் காலை 8 மணிக்கு வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது கட்சியின் மாகாண சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். மாலை அணிவிக்கப்பட்டுப் பொன்னாடை போர்த்தி மாவை சேனாதிராசா கௌரவிக்கப்பட்டார்.

இதன் பின்னர் யாழ்ப்பாணம் வந்த கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, முதலில் தந்தை செல்வா நினைவுத் தூபிக்குச் சென்று அவரது உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இதன் பின்னர் மார்ட்டின் வீதியிலுள்ள, தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு வந்தபோது கட்சித் தொண்டர்களால் வரவேற்கப்பட்டார்.

இதன்போது நேரு, சுபாஸ் சந்திரபோஸ், அன்னா ஹஸாரே ஆகியோர் அணிந்த குல்லா போன்று மாவை சேனாதிராசாவுக்கும் குல்லாவை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டத் தலைவர் பொ.கனகசபாபதி அணிவித்தார். தொடர்ந்து, கட்சியின் மறைந்த தலைவர்களுக்கு மாவை சேனாதி ராசா அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபைத் தவிசாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (த-5-18)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புளித்துப்போன கதைகளால் வெறுத்துப்போகும் தமிழர்கள்

இலங்கை வரலாற்றிலும் அரசியலிலும் அரைத்த மாவையே அரைப்பதும் புளித்துப் போனதையே மேலும் புளிக்க வைப்பதும் சலிப்பின்றித் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மக்களுக்கு விசனத்தையும், வெறுப்பையும், கோபத்தையும் இது ஏற்படுத்துகின்றபோதும், அரசியல்வாதிகள் அது பற்றி அலட்டிக்கொள்ளாமல் மீண்டும் மீண்டும் ஒரே மாதிரியாகவே நடந்துகொள்கிறார்கள்.

இப்போதும் அதுபோன்ற ஒன்றே நடந்துகொண்டிருக்கிறது. பேச்சுக்கு கொழும்பு தயாராக இருக்கிறது என்றும், ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பேச்சு வர மறுக்கிறது என்றும், இந்தியாவிலிருந்து வெளிவரும் இந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் கொழும்பு அரசின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

தமிழர் தரப்பு மீது கொழும்பு அரசு இந்த வகையிலான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது இது ஒன்றும் முதல் தடவையல்ல. விடுதலைப் புலிகளின் காலம் முழுவதும் கூட இதே குற்றச்சாட்டையே மாறி மாறி வந்த கொழும்பு அரசுகள் முன்வைத்து வந்தன. அமைதிப் பேச்சுக்கள் அனைத்தையும் விடுதலைப் புலிகளே குழப்பினார்கள் என்றும், பேச்சு மூலம் தீர்வைக்காண அவர்கள் என்றும் தயாராக இருக்கவில்லை என்றும் தொடர்ந்து கூறிவந்தார்கள். ஆனால் எந்தவொரு கொழும்பு ஆட்சியாளரும் தமிழர்களுக்குத் தாம் என்ன தீர்வைத் தரப்போகிறார்கள் என்பதை ஒருபோதும் வெளிப்படுத்தியதில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மட்டுமே இதிலிருந்து சற்று மாறுபட்டிருந்தார். தனது இரண்டாவது பதவிக் காலம் முடிவடைய இருந்த சமயத்தில் ஒரு தீர்வுத் திட்டத்தை அவர் நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். ஐக்கிய தேசியக் கட்சி அதனைக் கிழித்து எறிந்து அந்த முயற்சியைக் குழப்பி விட்டது என்ற குற்றச்சாட்டுடன் அவரும் பதவியிலிருந்து நீங்கிச் சென்றுவிட்டார். மொத்தத்தில் எந்தவொரு கொழும்பு அரசும் தமிழர்களுடன் எந்த அளவில் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வது என்பதைத் தெளிவுபடுத்தியதில்லை. அதைப் பற்றி அவர்கள் சிந்தித்ததுமில்லை. அவ்வப்போது இருக்கும் நிலைமைகளுக்குத் தகுந்தாற்போல கருத்துக்களைத் தெரிவிப்பதும், ஆட்சிக் கட்டில் ஏற வேண்டி இருக்கும் போது தமிழர்களுக்குத் தீர்வைத் தருவேன் என்று கூறுவதும் ஆட்சிபீடம் ஏறியதும் தீர்வைக் கொடுப்பதற்குத் தமிழர்கள் வருகிறார்கள் இல்லை என்று குற்றஞ்சாட்டுவதுமே வழமையாக இருக்கிறது. இதில் இதுவரையில் ஆட்சி பீடத்தைப் பிடித்த எந்தவொரு சிங்களத் தலைவரும் விதிவிலக்கல்ல.

இப்போது மஹிந்த ராஜபக் ஷவும் அதனையே அட்சரம் மாறாமல் திரும்பச் செய்கிறார். இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கான காரணம் தமிழர்கள்தான் என்று அவர் விரல் நீட்டுகிறார். ஆனால் தமிழர்களுடன் எந்த அளவுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளப் போகிறார் என்று தெளிவுபடுத்த அவரால் முடியவில்லை. முதலில் 13 பிளஸ் என்றார். இப்போது அதனைப் பற்றிய கதையேதுமில்லை. பதிலாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் சொல்லப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரம் (இதுவும் மாகாண சபையைப் போன்றே உண்மையில் அதிகாரம் ஏதுமற்ற வெறும் கோது) தவிர்த்து ஏனைய அதிகாரங்களைப் பற்றிப் பேசலாம் என்கிறார்.

ஆக மொத்தத்தில், தமிழர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் திட்டம், எண்ணம் ஏதும் கொழும்பு அரசிடம் இல்லை. இதனை விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரும் தமிழினத்தின் விடுதலைக்காக 30 வருடங்களாக ஆயுதப் போராட்டத்தை வழிநடத்தியவருமான தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மிகத் தெளிவாக மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்தார். சிங்கள பௌத்த பேரினவாதம் தானாக முன்வந்து தமிழர்களுக்கு ஒருபோதும் தீர்வைத் தரப்போவதில்லை என்று அவர் திடமாகத் தெரிவித்திருந்தார். அவருடைய காலத்தில் மட்டுமல்ல அவரது காலத்தின் பின்னரும் அதுவே உண்மை என்பதை வரலாறு நிரூபித்துக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், தாமாக அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளத் தயாரில்லாதவர்களிடம் இருந்து அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வழி என்ன என்பதுதான் தமிழினத்துக்குப் புரிபடாமல் இருக்கிறது. விரைவில் அந்த வழி பிறக்கும் என்ற நம்பிக்கையோடு இவர்களின் இந்தப் புளித்துப்போன கதைகளை மீண்டும் மீண்டும் கேட்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

# பயங்கரவாதிகளின் எழுச்சிக்கு அமெரிக்காவே காரணம்

சேரலாதன்

அமெரிக்க அரசின் தவறான மதிப்பீடுகளும், நடவடிக்கைகளும் தற்போது அந்த நாட்டைப் பெரும் குழப்ப நிலைக்குள் தள்ளி விட்டது. அழிவுக்கு வித்திடும் ஆயுதங்களை உற்பத்தி செய்து வைத்திருந்ததாகக் குறிப்பிட்டு அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுத்ததும், அந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்த சதாம் ஹுசைனை தூக்கில் தொங்க விடுவதற்கு காரணமாக இருந்ததும் அமெரிக்காவின் தவறான இராஜதந்திர நடவடிக்கைகளாகும். சதாம் ஹுசைன் அமெரிக்கா மீது காழ்ப்புணர்வு கொண்டிருந்தார் என்ற ஒரே காரணத்துக்காகவே அமெரிக்கா அவரைப் பழிவாங்கியது என்பதை முழு உலகமும் தெரிந்து கொண்டுள்ளது. ஆனால் ஈராக் தேசம் சின்னாபின்னமாகிச் சீரழிவதற்கு அமெரிக்காவே காரணமாகும். எகிப்து, லிபியா ஆகிய நாடுகளின் அரசுத் தலைவர்களைப் பதவிகளில் இருந்து அகற்றியதும், சிரியா மீது கடும் நெருக்குதல்களைத் தொடுத்ததும் அமெரிக்காவின் கைங்கரியங்கள்தான். ஆனால் இதுவே ஐ.எஸ்.ஐ.எஸ். போன்ற கொடிய பயங்கரவாத இயக்கங்கள் பலம் பெறுவதற்குக் காரணமாக அமைந்து விட்டன. சிரியா மற்றும் ஈராக்கின் பெரும் பகுதிகளைத் தனது வசம் பிடித்து





வைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கம் மனித வரலாற்றிலே காணாத கொடூரமான கொலைகளைச் சர்வசாதாரணமாகச் செய்து வருகின்றது. அமெரிக்க ஊடகவியலாளர்கள் இருவரின் தலைகளைக் கொய்து வெறியாட்டம் ஆடிய இந்த இயக்கத்தின் செயலை அகில உலகமும் அருவருப்புடன் பார்த்து காறி உமிழ்ந்தது.

அமெரிக்க அரசின் மீது வெறுப்பு இருந்தால் அதை அரசு மீதே காட்டிக் கொள்ள வேண்டும். இதை விடுத்து ஒன்றுமே அறியாத அப்பாவிகளை கொடூரமான முறையில் கொலை செய்வது எந்த வகையில் நியாயம் என்பது புரியவில்லை.

மேலும் பயங்கரவாதத்தை ஒழிக்கப் போவதாகப் புறப்பட்ட அமெரிக்காவினால் புதிய புதிய பயங்கரவாத இயக்கங்களை உருவாக்கவே முடிந்துள்ளது. தற்போது மத்திய கிழக்கு நாடுகளில் மட்டுமல்லாது அமெரிக்கா காலூன்றி நின்ற ஆப்கானிஸ்தானிலும் நிலைமை மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. அமெரிக்கப் படைகள் அங்கிருந்து வெளியேறியமை பயங்கர வாதிகளுக்கு வாய்ப்பாக அமைந்து விட்டது. இதனால் தாக்குதல்களைத் தொடுக்க வேண்டிய தொரு நெருக்க டியான கட்டத்தை அமெரிக்க வல்லரசு எட்டியுள்ளது.

இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழ் இளைஞர்கள் கைகளில் ஆயுதங்களை ஏந்திப் போராடியதன் காரணம் தெரிந்திருந்தும் கூட அவர்கள் பயங்கரவாதிகளாகவே முத்திரை குத்தப்பட்டார்கள். இவர்கள் உலகின் எந்த வொரு நாட்டுக்கும் அச்சுறுத்தலாக இருந்ததில்லை. வெளிநாட்டவர்கள் எவரையும் கொடூரமான முறையில் கொலை செய்யவில்லை. தமது உரிமைகளுக்காகவே அவர்கள் போராடினார்கள்.

அஹிம்சை வழியில் போராட்டங்களை நடத்திய அவர்களின் தலைவர்கள் தோல்வியை எதிர்கொண்டதால் வேறு வழியின்றி அவர்கள் ஆயுதங்களை ஏந்தினர். ஆயுத மோதல்களின் போது உயிரிழப்புக்களும், சொத்து அழிவுகளும் ஏற்படத்தான் செய்தன. இருந்த போதிலும் இலங்கை அரசு சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களுக்கு எதனை வழங்குவதற்கும் தயாராக இருந்ததில்லை. இந்த நிலையில் 2005 ஆம் ஆண்டு இறுதிப் போர் இடம்பெற்றது. பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்ட புலிகளை அழிப்பதற்கு அமெரிக்காவும் பெரியளவில் உதவியது. விடுதலைப் புலிகள் பூண்டோடு அழிக்கப்பட்டார்கள். ஆனால் பல்லாயிரக் கணக்கான தமிழர்களும் தமது உயிர்களை இழந்தனர். பலர் காணாமற் போயினர். எல்லாமே முடிந்த பின்னர்தான் அமெரிக்க வல்லரசுக்கு விழிப்பு வந்தது. ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அந்த நாடு முன்னின்று நிறைவேற்றியது. இதுவொரு காலம் கடந்த செயல் என்றே கூற



வேண்டும்.

இவ்வாறுதான் மத்திய கிழக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கா நடந்து கொண்டது. ஈராக், சிரியா, எகிப்து, லிபியா ஆகிய நாடுகளில் தனது கவனத்தைச் செலுத்திய அந்த நாடு ஈரான் மற்றும் பாகிஸ் தான் நாடுகளின் விடயத்தில் மௌனம் காத்து வருகின்றமை பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி வருகின்றன.

பயங்கரவாதிகளின் ஊற்றுக் கண்ணாக பாகிஸ்தான் விளங்கி வருகின்றமை புதியதொரு விடயமல்ல. பாகிஸ்தானில் நிலவிவரும் அரசியல் ஸ்திரத்தன்மையில்லாமை பயங்கரவாதிகளுக்குவாய்ப்பாகவே அமைந்து விட்டது. பாகிஸ்தான் அரசு கூட பயங்கரமான இயக்கங்களை ஆதரித்து வளர்த்து வருவதால் புகார்கள் எழுந்த வண்ணம் உள்ளன. இந்தியாவுடனான பகையைக் கருத்தில் கொண்டு பயங் கரவாத இயக்கங் களுக்கு பாகிஸ்தான் ஆதரவு வழங்குவதாகக் கூறப்பட்டுள்ள போதிலும் சர்வதேச அளவில் இந்த இயக்கங்கள் பயங்கரவா[illegible] நடவடிக்கை களில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது. ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்வதாகக் கூறி அந்த நாட்டின் மீது அமெரிக்கா தலைமையிலான நாடுகளால் பொருளாதாரத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அந்த நாடு தனது எண்ணெய்யை ஏற்றுமதி செய்யமுடியாத தொரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதைப் போன்று வடகொரியாவின் ஏவுகணைச் சோதனைகளையும் அமெரிக்கா தடை செய்துள்ளது. ஆனால் பயங்கரவாதிகள் நிறைந்த பாகிஸ்தான் அணு ஆயுதங்களைக் குவித்து வைத்துள்ளது. இவை பயங்கரவாதிகளின் கைகளில் கிடைக்குமாயின் அதன் விளைவுகள் மிகப் பயங்கரமானதாகவே அமைந்துவிடும். இதனை உணர்ந்தும் கூட பாகிஸ்தான் மீது கை வைப்பதற்கு அமெரிக்கா தயங்குகின்றது. இதுவொரு பாரபட்[illegible]மான நடவடிக்கையாகும்.

இஸ்ரேல் என்ற யூத மக்களுக்கான நாடு உருவாக்கப்பட்ட கையோடு பாலஸ்தீனத்தில் வாழும் மக்களின் துயரங்களும் ஆரம்பமாகிவிட்டன. பாலஸ்தீனப் பிரதேசத்தில் பெருமளவு நிலப் பரப்பை அடாத்தாகப் பிடித்த இஸ்ரேலிய படையினர் அங்கு புதிய யூதக் குடியேற்றங்களை நிறுவியுள்ளனர். பரம்பரை பரம்பரையாக அங்கு வாழ்ந்த பலஸ்தீன மக்கள் ஏதிலிகளாக அலைந்து கொண்டிருக்கின்றனர். அண்மையில் கூட பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியில் இஸ்ரேல் நடத்திய கொடூரத் தாக்குதல்களால் பலர் கொல்லப்பட்டனர். ஏராளமான மக்கள் குடியிருப்புக்களும், கட்டடங்களும் தரைமட்டமாக்கப்பட்டன. ஆனால் அமெரிக்கா இதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

இவ்வாறு தனது நாட்டின் நலனைக் கருதி தன்னிச்சையான பல நடவடிக்கைகள் அமெரிக்க அரசால் மேற்கொள்ளப்பட்டதால் பாதகமான விளைவுகளே ஏற் பட்டுள்ளன. குறிப்பாக மத்திய கிழக்கில் வாழுகின்ற மக்களும் இலங்கைத் தமிழர்களும் அமெரிக்காவின் செயல்களுக்காக அந்த நாட்டைச் சபித்துக் கொண்டே இருக்கப் போகிறார்கள்.

அமெரிக்கா இனியாவது தன்னை மாற்றிக் கொள்ளா விட்டால் எதிர்விளைவுகளையே அந்த நாடு எதிர்கொள்ள நேரிடும்.

# மழைநீரைத் தேக்கி வைத்து வடபகுதியின் நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்

வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் 15ஆவது மாநாட்டில் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசா ஆற்றிய உரையின் தொடர்ச்சி பிரசுரமாகின்றது.

(நேற்றைய தொடர்ச்சி)

அந்த விசாரணைகளினால் உண்மைகள் கண்டறியப்படவேண்டும் என்பதுடன் அதனடிப்படையில் தமிழ் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஏற்படவேண்டும். மேலும் இத்தகைய சம்பவங்கள் இடம் பெறாமல் தடுப்பதும், அதற்கான நிவாரணங்களைப் பெறுதலும் முக்கியமாகும். அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உண்மைகளைக் கண்டறிவதில் கையாள வேண்டிய பொறுப்புக்கள், மற்றும் சர்வதேச இராஜதந்திர உபாயங்களில் வேலை செய்வதற்கான நிபுணத்துவ கட்டமைப்பை உள்வாங்குதல் அவசியமானதாகும். அதே வேளை இலங்கையில் எமக்குரிய கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் கண்டறிந்து, அடையாளப்படுத்தி அவற்றை முன்னெடுப்பதற்கான பொறிமுறைகளையும் வேலைத் திட்டத்தையும் உருவாக்கவேண்டும். வேலைத் திட்டத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் நில அபகரிப்பைத் தடுத்து நிறுத்துவதும், அந் நிலங்களை திரும்பக்கையளிக்கச் செய்தலும், மக்களின் மீள்குடியேற்றத்தின் பொருட்டு மக்களுக்குச் சொந்தமான காணிகளிலிருந்து இராணுவத்தினரை வெளியேற வைத்தலும் மிக அவசியமானதாகும். இராணுவ ஆதிக்கம் தமிழ்ப்பிரதேசங்களில் நீக்கப்படவேண்டும் என்பது மிக அவசியமாகும்;

தமிழ்நிலம், மொழி, பண்பாடு, மதவழிபாட்டுத் தலங்கள் அதன் சின்னங்கள் பாதுகாக்கப் படுதல் வேண்டும்;

மக்களின் உளஉடல் ரீதியான குறிப்பாக பெண்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்;

அம்பாந்தோட்டையின் வீரக்கொட்டியாவில் தான் விமான நிலையம் அரசால் கட்டுவ தற்கு முதலில் ஏற்பாடகியிருந்தது. அங்குள்ள சிங்கள மக்களும், விவசாயிகளும் தங்கள் நிலங்கள் பறிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவுடனேயே மத்தளவுக்கு விமான நிலை யத்தை மாற்றிவிட்டது ராஜபக்ஷ அரசு. வலி வடக்கில் காங்கேசன்துறைமுகம், பலாலி விமான நிலைய அபிவிருத்தி என்று இலட்சக் கணக்கான விவசாய குடியிருப்பு நிலங்களையும், மீன்பிடி வளமுள்ள கடற்பிரதேசங்களையும் அபகரித்து இராணுவத் தேவைகளுக்கும், வர்த்தக நடவடிக்கைகளுக்கும் அந்நிலங்களை அரசு பயன்படுத்துகிறது.

அம்மக்களை அகதிகளாக்கி அநாதரவாக்கி தெருவில் விட்டுவிட்டு 25ஆண்டுகளுக்கு மேலாக உல்லாச புரியில் ஆளுங்கட்சியினரும், இராணுவத்தினரும் பகற்கொள்ளை போல் மேலும் மேலும் தமிழ் மக்களின் நிலங்களைக் கொள்ளையடிக்கிறார்கள். காங்கேசன் துறை துறைமுகமும், பலாலி விமானநிலையமும் எமது மாநிலத்துக்கு வேண்டும். அதற்கான அபிவிருத்தி விஸ்தரிப்புக்கு ஆழமற்ற கடற்பரப்பைச் சிங்கப்பூர் போல பாவிக்கலாம் என்ற எமது ஆலோசனை நிராகரிக்கப்பட்டு விட்டது. இப்பொழுதும் அதைச் செய்யலாம். அதனை வற்புறுத்துகிறோம். அபகரிக்கப்பட்ட வலி. வடக்கில் மட்டும் 6000க்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் மீளக் கையளிக்க வேண்டுமென்பதை வற்புறுத்துகிறோம். கிளிநொச்சியில் இரணைமடுக்குளத்தை அண்டிய பிரதேசங்களில் 1700 ஏக்கர் மக்களின் நிலங்களை அபகரித்து அரசு 10,000 இராணுவக்குடியிருப்புக்களைக் கட்டத்திட்டமிட்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஓர் இராணுவக்குடும்பத்துக்கு 5பேர் என்று பார்த்தால் 50000 சிங்கள பௌத்தர் குடியேற்றப்படுவார்கள். மொத்தமாக தமிழர் பிரதேசங்களில் அபகரிக்கப்பட்ட சம்பூர் உட்பட மக்களின் நிலங்கள் திரும்பக் கையளிக்கவேண்டு மென்பதை வற்புறுத்துகிறோம். மன்மோகன் பிரதமராக இருந்தபொழுதும் மீனவர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று நாம் கேட்டிருந்தோம்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு புறம் எங்கள் மீனவர்கள் ஆழ்கடல் சென்று சொந்தப் பிரதேசங்களில் குடியிருப்புக்களிலிருந்து மீன்பிடிக்க அனுமதிக்கப்படவில்லை. ஆனால் வாடியமைத்து மீன்பிடிக்கச் சிங்கள மீனவர் அனுமதிக்கப்படுகின்றனர். எங்கள் மீனவர்களிடம் பொருத்தமான வலை உபகரணங்கள் ஒருபொழுதும் இருக்கவில்லை. தென்னிலங்கைச் சிங்கள மீனவர்கள் தடைவிதிக்கப்பட்ட உபகரணங்களைப் பாவித்தே மீன்பிடிக்க இராணுவம் பாதுகாப்பளிக்கின்றது. இதனிடையே சீன கப்பல்களும் மீன்பிடிப்பதாகத் தகவல் வருகின்றன. மறுபுறத்தில் இந்த ஐந்து ஆண்டுகளில்தான் மிக அதிகமாக இந்திய மீனவர்கள் இலங்கைக் கரையோரங்களிலும் ஆழ்கடலிலும் மீன் வளங்களை வாரிக் கொண்டு செல்வதால் கரையோரக் கடலில் கூட எம்மீனவர்கள் மீன்பிடித்துத் தம்வாழ்க்கையை நடத்தமுடியாமல் இருக்கின்றனர்.

இதுபற்றியும் மீனவர் பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாண வேண்டும் என்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் மற்றும் வெளியுறவுச் செயலாளருடனும் பேசியிருக்கின்றோம். வாழ்விழந்த 80,000 பெண்கள் பற்றி, இந்திய வெளிநாட்டமைச்சரிடம் பேசினோம். நீண்ட பல ஆண்டுகளாக யாழ்ப்பாணம் வறண்டு விடப் போகிறது என்றும் நிலத்தடிநீர், நீரூற்றுக்கள் என்பன கொடிய நோய்கள் வரக்கூடியளவுக்கு மாசடைந்து வருகின்றன என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றமை அதிர்ச்சியானவை மட்டுமல்ல மனித குலத்துக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியதுமாகும். (தொடரும்)

# உலக முதலுதவி தினம் - 2014



உலக முதலுதவி தினத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை வெளியிடப்படுகின்றது.

உலக முதலுதவி தினம் செப்ரெம்பர் மாதம் இரண்டாவது சனிக்கிழமை ஆண்டு தோறும் உலக நாடுகளில் எல்லாம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த ஆண்டும் இன்று இத் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்தத் தினத்தை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நாடு முழுவதும் அனுஷ்டித்து வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் ஒரு கருப்பொருளை மையமாக வைத்து அனுஷ்டிக்கிறது. இந்த ஆண்டும் "உயிரைக்காக்கும் வீரனாவாய், அனைத்திடத்திலும் அனைவருக்கும் முதலுதவி கிடைக்கட்டும்" என்னும் கருப்பொருளைக் கொண்டிருக்கின்றது.

முதலுதவியானது இன்று முக்கிய ஒன்றாகக் கருதப்படுகின்றது. இயற்கை மற்றும் செயற்கை அழிவுகளால் பாதிக்கப்படும் மனித உயிர்கள் இறப்புக்கள் மற்றும் அங்கவீனம் ஏற்படுவதற்குக் காரணம் சரியான முதலுதவி இல்லாமையாகும்.

இந்த முதலுதவியானது எங்கு ஆரம்பமானது என்று கூறும்போது செஞ்சிலுவைச் சங்கத்தைப் பொறுத்தவரை அதன் ஸ்தாபகர் ஜீன் ஹென்றி டுனான்ட் 1859 ஆம் ஆண்டு சொல்பரினோவில் நடந்த யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான படைவீரர்களுக்கு அந்த ஊர் மக்களின் உதவியுடன் முதலுதவி சேவையை வழங்கியது குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் இவர் எழுதிய சொல் பெரினோவின் மீள்நினைவுகள் என்னும் புத்தகத்தில் பின்வரும் விடயங்கள் இரண்டையும் குறிப்பிட்டிருந்தார்.

1. உலகெங்கும் முதலுதவித் தொண்டர்கள் இணைக்கப்பட வேண்டும்.
2. உலக நாடுகள் தொண்டர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்.

அன்றைய காலம் தொட்டு இன்றுவரை முதலுதவிக்கு சகல நாடுகளும் முன்னுரிமை கொடுத்து வருகின்றன.

அடுத்து முதலுதவி என்றால் என்ன?

முதலுதவி என்றால் திடீர் விபத்து அல்லது நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அந்த இடத்தில் இருந்து வைத்திய உதவி கிடைக்கும் வரை சூழலில் உள்ள பொருள்களைக் கொண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட பயிற்றப்பட்ட ஒரு முதலுதவியாளரால் செய்யப்படும் உதவியே முதலுதவி ஆகும்.

**முதலுதவியின் நோக்கங்கள்**

உயிரைக் காத்தல், நோயின் தீவிரத்தன்மையைக் குறைத்தல், சுகமடைதலை இலகுவாக்கல் மேற்கூறப்பட்ட நோக்கங்கள் யாவும் எந்த ஒரு பாதிக்கப்பட்டவருக்கும் முதலுதவி செய்யும் போது இருக்க வேண்டும்.

**முதலுதவியாளன் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்**

தலைமைத்துவம், விடாமுயற்சி, சகிப்புத் தன்மை, பொறுமை, இரக்கம்

**மயக்க மீள்நிலைக்கு சரித்தல்**

இந்த நிலைக்கு சரிப்பதன் நோக்கம் பாதிக்கப்பட்டவரின் சுவாசப்பாதை தொடர்ந்து நேரான நிலையில் இருப்பதற்கும் வாந்தி போன்றன வரும்போது இலகுவில் வெளியேறுவதற்கும் இந்த நிலை உதவும்.


சுவாசம் இல்லையெனில் உடனடியாக இதயசுவாச மீள்உயிர்ப்பு செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்டவரது மார்ப்புப்பகுதியில் இதயத்தை 30 தடவை அழுத்த வேண்டும். இதன் பின் வாய்க்கு வாய் 2 தடவை சுவாசம் வழங்க வேண்டும். இந்தச் செயற்பாட்டை மீள இதயசுவாசம் செயற்படும் வரைக்கும் வைத்தியசாலையில் வைத்தியரிடம் ஒப்படைக்கும் வரை செய்ய வேண்டும்.

**காயங்கள்**

உடற்கலங்கள் இழையங்கள் ஆகியவற்றில் ஏற்படும் சிதைவு காரணமாக நாடி, நாளம், மயிர்த்துளைக்குழாய்களில் ஏற்படுகின்ற பாதிப்பு காயம் எனப்படும். கண்டற் காயம், வெட்டுக் காயம், கிளிசல் காயம், துளைகாயம், சிராய்புக் காயம்

குருதி கூடிய அளவு வெளியேறும் காயங்களால் நாடி நாளம் பாதிக்கப்பட்டிருக்கும். குறைந்தளவு குருதி வெளியேறும் காயங்களால் மயிர்த்துளைக் குழாய் பாதிக்கப்பட்டிருக்கும். குறைந்தளவு குருதி வெளியேறும் காயங்களுக்கு சம்பவ இடத்திலேயே முதலுதவிப் பெட்டியைக் கொண்டு காயத்தைத் துப்புரவு செய்து கொள்ளலாம்.

காயத்துக்கு முதலுதவி அளிக்கும் போது தொற்று ஏற்படாதவாறு கையுறை அணிதல் வேண்டும். பெரியளவில் குருதி வெளியேறுமாயின் உடனடியாக பின்வரும் நடவடிக்கையை பின்பற்ற வேண்டும்.



1. காயம் ஏற்பட்ட பகுதியின் (பிற பொருள்கள் குத்திக் கொண்டிருக்காவிடின்) சுத்தமான பல அடுக்குகளால் மடிக்கப்பட்ட துணியால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு மேல் வைத்து நேரடி அழுத்தம் கொடுக்கவும்.
2. இதன் பின் பாதிக்கப்பட்ட பகுதியை பாதிக்கப்பட்டவரின் இதயத்துக்கு மேல் உயர்த்தவும்.
3. பாதிக்கப்பட்டவரை சுலபமாக இருக்கக் கூடியவாறு அல்லது படுக்க வைக்கவும்.
4. வைக்கப்பட்ட துணியைச் சுற்றி பாதுகாப்பாகக் கட்டு ஒன்றை இடவும்.
5. வேறுகாயங்கள் தொடர்பாகப் பாதிக்கப்பட்டவரைப் பார்க்கவும்.

**முதலுதவிச் சேவை**

முதலுதவிச் சேவையில் இருப்போர் குறைந்தது அடிப்படை முதலுதவிப் பயிற்சியாவது பெற்றிருக்க வேண்டும். எப்படியான பாதிப்புக்குள்ளானவரையும் சுலபமாகக் கையாளக்கூடியவராக இருக்க வேண்டும். சேவையில் இருக்கும்போது பாதிக்கப்படும் முதலுதவிப் பெட்டி திறம்பட இருக்க வேண்டும் முதலுதவிப் பெட்டி பல அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் காணக்கூடியதாக உள்ளது. இந்தப் பெட்டிகளில் உள்ள இலச்சினைகள் பச்சை நிற பின்னணியில் வெள்ளை சிலுவையை உடையதாக இருக்க வேண்டும். முதலுதவிப் பெட்டி அந்தந்த நிறுவனங்களுக்கு ஏற்ற அளவில் பெட்டிகள் அமைய வேண்டும். பெட்டியில் உள்ள பொருள்கள் கூடிய அளவில் அங்குள்ளவர்களால் பாவிக்கத் தெரிந்த அளவில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். பெட்டியில் உள்ள பொருள்களின் முடிவுத் திகதியின் பின் புதிய பொருள்கள் மாற்றப்பட வேண்டும். இந்தப் பொருள்கள் மாற்றத்தின் போது ஒரு முதலுதவிப் போதனாசிரியரின் ஆலோசனை இன்றியமையாதது.

எனவே எல்லோரும் ஏதாவது சம்பவத்தில் பாதிக்கப்பட்டவரை உரிய முறையில் வைத்தியசாலையில் சேர்ப்போம் என்று உறுதி அளித்துக் கொள்வோம். உயிரைக் காக்கும் வீரனாவாய் அனைத்திடத்திலும் அனைவருக்கும் முதலுதவி கிடைக்கட்டும் என்ற கருப்பொருளை வைத்து இந்த உயிர் காக்கும் உன்னத பணியைச் செய்வோம்.

ந.இலங்கேஸ்வரன்
*முதலுதவிப் போதனாசிரியர்*
*இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,*
*யாழ்.கிளை*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**:செலவினங்கள் அதிகரிக்கும். மற்றவர்களுக்காக பிணைக் கையொப்பமிட வேண்டாம். வியாபாரத்தில் மிகுதிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.

**இடபம்**: திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள்.

**மிதுனம்**: சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**கடகம்**: நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். இளவயது நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையைப் பெறுவீர்கள்.

**சிங்கம்**: சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். நண்பர்கள், உறவினர்கள் விடயத்தில் அத்து மீறி தலையிட வேண்டாம். நியாயம் பேசப்போய் பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினை வந்து நீங்கும்.

**கன்னி**: பிள்ளைகளால் மகிழ்ச்சியும், உறவினர்களால் ஆதாயமும் உண்டு. தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிக்கும்படி நடந்து கொள்வீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**துலாம்**: குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களைச் சொல்லித் தருவார்.

**விருச்சிகம்**: எதிர்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துச் சேமிக்கத் தொடங்குவீர்கள். புதிய தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள்.

**தனுசு**: எதிர்ப்புகள் அடங்கும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளைத் தாண்டி அதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**மகரம்**: திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சொத்துப் பிரச்சினையில் நல்ல தீர்வு கிடைக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**கும்பம்**: கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். உத்தியோகத்தில் புதிய அதிகாரி உங்களை மதிப்பார். வெளியூர் பயணங்களின்போது கவனம் தேவை. குடும்பத்தில் சிற்சில சண்டைகள் வரலாம்.

**மீனம்**: சிக்கனமாக இருக்க வேண்டும் என்று நினைத்தாலும், அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். சிலரின் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும்.

## நாளை

**ஆவணி-29 ஞாயிற்றுக்கிழமை | 14.09.2014**

திதி: ஷஷ்டி மு.இ.11.43 வரை
நட்சத்திரம்: கார்த்திகை பி.இ.12.58 வரை

சுபநேரம்: 09.03-10.33 வரை
இராகுகாலம்: 04.33-06.03 வரை
கார்த்திகை விரதம்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




### புத்த மதத்தின் தீய ஆதிக்கம்

"புத்த மதத்தின் தீய ஆதிக்கம் என்று கூறியதன் உட்பொருள் என்ன?"

"அந்த மதம் அழியும்போதுதான் தீமை விளைந்தது. ஒவ்வோர் இயக்கமும் ஒரு தனிச் சிறப்பியல்பினால் வெற்றி பெறுகிறது. அது வீழ்ச்சியுறும்போது பெருமைக்குரிய அதே இயல்புதான் அதன் முக்கியமான பலவீனமும் ஆகிறது. மனிதருள் சிறந்தவரான புத்தர் வியத்தகு ஆக்கச் சக்தி பெற்றவர். அவர் இந்த முறையால் உலகமே தம்மைப் பின்பற்றுமாறு செய்தார். ஆனால், அவரது மதம் துறவை அடிப்படையாகக் கொண்டது. ஆகையால், இதில் துறவுக் கோலத்தையே பெருமை செய்யும் ஒரு தீய விளைவு ஏற்பட்டு விட்டது. மடங்களில் துறவிகள் ஒரு கூட்டமாகக் கலந்து வாழும் வழியை முதன் முதலில் ஏற்படுத்தியவர் புத்தரே. ஆனால், அந்தச் சங்கத்தில் பெண்களுக்கு ஆண்களை விடத் தாழ்ந்த நிலையைத்தான் அவரால் தர முடிந்தது. மடத்துத் தலைவியர் எவ்வளவுதான் சிறப்புற்றிருந்தாலும் சங்கத் தலைவர் சிலரது அனுமதியில்லாமல் இன்றியமையாத எந்தப் பணியையும் செய்ய இயலாதவர்களாக அவர்கள் இருந்தனர்.

இந்த ஏற்பாடு தற்காலிகமாகப் புத்த சமயத்துக்கு உறுதியளித்திருந்தாலும், அதன் நீண்ட கால விளைவுகள் குறை கூறத்தக்கனவே."

# அணுக் கழிவை உண்ணும் பக்றீரியா கண்டுபிடிப்பு



அணுக் கழிவுகளை உண்ணக்கூடிய பக்றீரியாவை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

பூமிக்கு அடியில் வசிக்கும் இந்த நுண்ணுயிரிகள் ஒற்றை உயிரணுவைக் கொண்டவை.

இந்தக் கண்டுபிடிப்பின் மூலம், அணு உலைகளிலிருந்து வெளியாகும் பேராபத்தை விளைவிக்கக் கூடிய கழிவுகளை கணிசமான அளவு அழிக்க முடியும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். கழிவுகளை உண்ணும் பக்றீரியாக்கள் ஏற்கெனவே கண்டறியப்பட்டிருந்தாலும், அணுக் கழிவுகளைக் கையாளும் பகுதிகளின் சூழலை இந்த பக்றீரியாவால் மட்டுமே தாங்க முடியும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | | | 3 | 9 | | 6 | 7 |
| 6 | | | 2 | | | | 9 | 1 |
| | | | | 6 | 5 | 2 | | |
| | 1 | | | 7 | | | | 2 |
| | 2 | 9 | | | | 6 | 7 | |
| 4 | | | | | | | 3 | |
| | | 1 | 7 | 8 | | | | |
| 9 | 3 | | | | 2 | | | 6 |
| 7 | 5 | | 6 | 9 | | | 2 | 8 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 8 | 4 | 1 | 6 | 7 | 9 | 5 |
| 7 | 1 | 9 | 5 | 2 | 3 | 4 | 6 | 8 |
| 6 | 4 | 5 | 7 | 9 | 8 | 1 | 3 | 2 |
| 5 | 3 | 7 | 9 | 6 | 4 | 8 | 2 | 1 |
| 1 | 6 | 4 | 2 | 8 | 5 | 9 | 7 | 3 |
| 9 | 8 | 2 | 1 | 3 | 7 | 6 | 5 | 4 |
| 2 | 9 | 3 | 6 | 4 | 1 | 5 | 8 | 7 |
| 8 | 7 | 1 | 3 | 5 | 9 | 2 | 4 | 6 |
| 4 | 5 | 6 | 8 | 7 | 2 | 3 | 1 | 9 |

# அரச அதிபர் வெற்றிக்கிண்ணக் கரப்பந்தாட்டம்; இறுதிக்கு சங்கானை, வேலணை பிரதேச அணிகள்




கரணவாய்,செப்.13
பரபரப்பாக இடம்பெற்ற அரையிறுதி ஆட்டங்களில் யாழ். செயலக அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன சங்கானை பிரதேச செயலக, வேலணைப் பிரதேச அணிகள்.

அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான யாழ். மாவட்ட பிரதேச செயலக அணி களுக்கிடையில் நடத்தப்படும் ஆண்க ளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட் டிகள் இமையாணன் மத்திய விளை யாட்டுக்கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்றன.

இதில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் சங்கானைப் பிரதேச செயலக அணியும், யாழ்.மாவட்ட செயலக அணியும் மோதிக்கொண்டன. மிகவும் விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் இடம்பெற்ற இந்தப் போட்டியின் முதல் இரு செற்களையும் சங்கானை பிரதேச செயலக அணி 25:17, 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது.இதனை அடுத்து தம்மைச் சுதாகரித்து ஆக்ரோஷத்துடன் விளை யாடிய யாழ். மாவட்ட செயலக அணி 25:10, 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் அடுத்த இரு செற்களை யும் வென்று பதிலடி கொடுத்தது.இரு அணிகளும் தலா இரு செற்களை வெற்றி கொண்டதால் வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்கான 5 ஆவது செற்றில் பலத்த போராட்டத்தின் பின் 15:13 என்ற புள்ளிகளால் வெற்றி கொண்டு 3:2 என்ற செற்கணக்கில் வென்று இறுதியாட்டத்துக்குள் நுழைந்தது சங்கானை பிரதேச செயலக அணி.

இரண்டாவதாக இடம்பெற்ற மற்றொரு அரையிறுதியாட்டத்தில் யாழ். பிரதேச செயலக அணியும், வேலணைப் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன. இதில் முழுமையான ஆதிக்கம் செலுத்திய வேலணைப் பிரதேச செயலக அணி 25:15, 25:19, 25:15 என்ற புள்ளிகளைப் பெற்று 3:0 என்ற நேர் செற் கணக்கில் வென்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. (ரி-108)

## அளவெட்டி ஞானவைரவர் வெற்றி



யாழ்ப்பாணம்,செப்.13
அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் வலி வடக்கின் சமர் என வர்ணிக்கப்படும் ரி-20 மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணியினர் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் வசிங்ரன், பிரபு ஆகியோர் தலா 13 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணி சார்பில் பிரதீஸ் 4 இலக்குகளையும், சுயன் 3 இலக்குகளையும்இ வீழ்த்தினர்.

74 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய அளவெட்டி மத்திய விளையாட் டுக்கழக அணியினர் 20 பந்துப்பரிமாற் றங்கள் நிறைவில் சகல இலக்கு களையும் இழந்து 52 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர். இதில் சுயந்தன் 15 ஓட்டங்களையும், காந்தசீலன் 16 ஓட்டங்களையும், இரகுபாலன் 9 ஓட்டங்களையும் தம்து அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி சார்பில் பிரணவன் 4 இலக் குகளையும், பிரபு 3 இலக்குகளையும். வீழ்த்தினர். (ரி- 23)

## தேசியமட்ட குழு நிலைப்போட்டிகள்

யாழ்ப்பாணம்,செப் .13
தேசியமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான இரண்டாம் கட்ட குழுநிலைப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றன.அதில் 19 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டிகள் யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.இந் துக்கல்லூரி மைதானங்களிலும், பெண்களுக்கான போட்டிகள் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கிலும் இடம்பெறவுள்ளன. தேசிய மட்ட போட்டிகள் முதன்முறையாக யாழ்.மாவட்டத்தில் இடம்பெறுவது இதுவே முதல் தடவையாகும். (ரி- 23)

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.13
மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெடுங்கேணல் சென்.அன்ர னிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் தேவராஜா ஞபாகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அடம்பன் பிரதேச சபை மைதானத்தில் இன்றும் நாளையும் இடம் பெறவுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டியில் 27 கழகங்கள் பங்குபற்றுவதாக போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ரி- 23)

## ஹற்றிக் கோல் அடித்தார் சயந்தன் இறுதியாட்டத்தில் திக்கம் அணி



யாழ்ப்பாணம்,செப்.13
சயந்தனின் ஹற்றிக் கோல் மூலம் திக்கம் விளையாட்டக்கழக அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற் றது ஊரெழு றோயல் விளையாட் டுக்கழக அணி.

பொற்பதி விளையாட்டுக்கழகம் நடத்தும் சிவகுரு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத் துக்கான அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரை யிறுதியாட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை புத்தூர் எவெரஸ்ட் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் திக்கம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் சம பலத்துடன் மோதிக் கொண்டதால் ஆட்டம் தொடங் கியது முதலே விறுவிறுப்புக்குப் பஞ்சம் இருக்கவில்லை. இதன்போது இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோலைப் பெற எதிர் அணியின் கோல் பரப்பை நோக்கி தமது ஆட்டத்தை நகர்த்தினர். இதன் போது ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி வீரர் சயந்தன் தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார். திக்கம் விளையாட்டுக்கழக அணியினர் பதிலுக்கு தமது அணிக்கான கோலைப் பெற கடுமையான முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் அவர்களால் தமது அணிக்கான கோலைப் பெறமுடிய வில்லை. தொடர்ந்த ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியின் வீரர் வெள்ளை தனது அணிக்கான 2ஆவது கோலை அடித்தார். ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது ஊரெழு றோயல் விளையாட் டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி சார்பில் சயந்தன் ஒரு கோலையும், கானுஷன், நிதர்சன் தலா 2 கோல் களையும் அடித்து அசத்தினார்கள். ஆட்ட நேர முடிவில் ஊரெழு றோயல் விளை யாட்டுக்கழக அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட் டத்துக்கு தகுதிபெற்றது. (ரி-23)

## இன்றைய ஆட்டங்கள்



கரணவாய்,செப்.13
திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணிக்கு நடை பெறும் ஆட்டத்தில் கரவெட்டி சென்சுடர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொம்பந்தறை கழுகுகள் விளையாட்டுக் கழகமும், மாலை 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதவுள் ளன. (ரி- 108)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.13
கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான விளையாட்டுக்கழகங்கள் பங்கு புற்றும் 30 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு :-

காலை 8.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஸ்ரான்லி விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 1 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளை யாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து ஒல் கோல்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 422- 23)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 13
அளவெட்டி மத்திய விளையாட் டுக்கழகம் நடத்தும் வலி. வடக்கின் சமர் என வர்ணிக்கப்படும் லீக் முறையிலான ரி- 20 மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அளவெட்டி மத்திய விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட் டுக்கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 23)

★ ★ ★

யாழ்ப்பாணம்.செப்.13
இலங்கை கிரிக்கெட் பிரிவு 3 இற்கான கிரிக்கெட் சுற்றுத் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை அநுராதபுரம் சமுர்த்தி விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் யாழ்.சென்ற லைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அநுராதபுரம் தம்புக்கம டி.ஓ.சி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ரி- 23)

# இன்று ஆரம்பமாகிறது சம்பியன் லீக் ரி-20

2009ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்றுவரும் சம்பியன்ஸ் லீக் ரி- 20 கிரிக்கெட் தொடரின் இந்த வருடத்துக்கான ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன. ஆறாவது சம்பியன் லீக் ரி- 20 தொடர் இன்று முதல் அடுத்த மாதம் 4ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறவுள்ளது.

முதன்மைச்சுற்று ஆட்டங்கள் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், தகுதி சுற்று ஆட்டங்கள் இன்று முதல் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. ஆட்டங்கள் இந்தியாவின் ஐதராபாத், சண்டிகார், ராய்ப்பூர், பெங்களூர் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன. முதன்மைச் சுற்றில் 10 அணிகள் விளையாடவுள்ள நிலையில், அவற்றில் 8 அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. ஏனைய 2 அணிகள் இன்று ஆரம்பமாகும் தகுதி சுற்று மூலம் உள்நுழையும்.

முதன்மைச் சுற்றில் விளையாடும் 10 அணிகளும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன், 'ஏ' பிரிவில் ஐ.பி.எல். நடப்பு சம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ், சென்னை சுப்பர்கிங்ஸ், ஆஸ்திரேலியாவின் பெர்த் ஸ்கோர்சேர்ஸ், தென்னாபிரிக்காவின் டால்பின்ஸ் ஆகிய அணிகளும், 'பி' பிரிவில் இந்தியாவின் கிங்ஸ்லெவன் பஞ்சாப், ஆஸ்திரேலியாவின் ஹோபார்ட் ஹரிகேன்ஸ், தென்னாபிரிக்காவின் கேப் கோப்ராஸ், மேற்கிந்திய தீவுகளின் பார்படோஸ் டிரைடென்ஸ் ஆகிய அணிகளும் இடம்பெற்று உள்ளன.

தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் மும்பை இந்தியன்ஸ், இலங்கையின் சௌதர்ன் எக்ஸ்பிரஸ், நியூஸிலாந்தின் நோர்தன் நைட்ஸ், பாகிஸ்தானின் லாகூர் லயன்ஸ் ஆகிய 4 அணிகள் விளையாடுகின்றன. இவற்றில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் முதன்மை சுற்றில் முறையே ஏ, பி பிரிவுகளுக்கு முன்னேறும்.

சம்பியன் லீக் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஐதராபாத்திலும், இறுதி போட்டி 4ஆம் திகதி பெங்களூரிலும் நடைபெறவுள்ளன. (ரி)







# பங்களாதேஷ் வீரரின் பந்துவீச்சில் சந்தேகம்

மேற்கிந்தியதீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடிய பங்களா தேஷ் வேகப்பந்து வீச்சாளர் அல் அமின் ஹுசைனின் பந்து வீச்சு சந்தேகத்துக்கு உரியதாக இருப்பதாக போட்டி நடுவர்கள் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் அங்கீகாரம் பெற்ற கார்டிப் அல்லது பிரிஸ்பேனில் உள்ள தேசிய கிரிக்கெட் மையத்தில் 21நாட்களுக்குள் அல் அமின் ஹுசைன் ஆஜராகி பந்து வீச்சு சோதனைக்கு தன்னை உட்படுத்த வேண் டும் என் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அந்த சோதனையின் முடிவைப் பொறுத்தே அவர் தொடர்ந்து பந்து வீசுவது குறித்து முடிவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படு கிறது. கடந்த ஜுன் மாதத்தில் இருந்து நடுவரின் புகாருக்கு உள்ளாகும் 6ஆவது கிரிக்கெட் வீரர் அல் அமின் ஹுசைன் ஆவார். ஏற்கனவே இலங்கையின் சேனநாயக்க, நியூஸிலாந்தின் கனே வில்லியம்சன், சிம் பாப்வேயின் உத்சயா, பங்களாதேஸின் சோஹக் காஜி, பாகிஸ்தானின் சயீட் அஜ்மல் ஆகியோர் புகாரில் சிக்கி இருந்தனர். (ரி)

# உலகக்கிண்ணத்தில் சூதாட்டம்

அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணக் கிரிக் கெட் தொடரை மையமாக வைத்து மிகப்பெரிய சூதாட்டம் நடைபெறும் என்று கணிக்கப்பட்டுள்ளது.




பெரும் அளவில் பணம் புரளும் என்பதால் கிரிக்கெட் வீரர்களை தங்களுக்கு சாதகமாக்க சூதாட்ட தரகர்கள் அனைத்து முறை களையும் கையாள்வார் கள். அழகிகளை வைத்து வீரர்களை மயக்க சூதாட்ட காரர்கள் திட்டமிட்டு இருப்பதாக நியூசிலாந்து பொலிஸார் எச்சரித்து உள்ளனர். இதனால் வீரர்களும் அவர்களுடன் வரும் மனைவி, உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என அனைவரும் அறிமுகம் இல்லாதவர்களுடன் பேசுவதையும், பழகுவதையும் தவிர்க்க வேண்டும் என்று எச்சரித்து உள்ளனர். சூதாட்ட தரகர்கள் வீரர்களை தொடர்பு கொள் வதை தடுப் பத ற்கு அனைத்து முன் எச்சரிக்கை நட வடிக்கையும் எடுத்து உள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்து உள்ளனர். அதையும் மீறி தவறுகள் நடக் காமல் இருக்க வீரர்களும் முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று அவர்கள் எச்சரித்து உள் ளனர். (ரி)

# அஜ்மலுக்கு உதவ முன்வந்த முன்னாள் வீரர்

சயிட் அஜ்மல் பந்து வீசும் முறை யைச் சரிப்படுத்த முன்னாள் பாகிஸ்தான் வீரர் சக்லைன் முஸ் தாக் உதவியைப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நாடியுள்ளது.




இலங்கை சுற்றுப்பயணத்தின் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் போது சயீட் அஜ்மலின் பந்து வீச்சு சர்ச்சைக்குரியதாக உள்ளது என போட்டி நடுவரால் புகார் தெரிவிக் கப்பட்டதைத் தொடர்ந்து, உடற் கூற்றுப் பரிசோதனைக்காக அவர் ஆஸ்திரேலியா அனுப்பி வைக் கப்பட்டார். அங்கு நிபுணர்கள் மூலம் சந்தேகத்திற்குரிய அவரது பந்து வீச்சு பல்வேறு கட்டமாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. இந்த நிலையில் சோதனை முடிவில் அவரது பந்து வீச்சு சட்டத்திற்கு புறம்பாக இருப்பதாக தெரிவிக்கப் பட்டு, அவர் பந்து வீச சர்வதேச கிரிக்கெட் சபை தடை விதித்தது.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணியின் முன்னணி பந்து வீச்சாளரான சயிட் அஜ்மல் பந்து வீசும் முறையை சரிப்படுத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. இதற்காக முன்னாள் வீரர் சக்லைன் முஸ்தாக் உதவியை நாடியுள்ளது. முஸ்தாக் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் வேண்டுகோளை ஏற்றுள்ளார்.

மேலும் சக்லைன் முஸ்தாக் கூறுகையில், சயிட் அஜ்மலுக்கு உதவ தயாராக உள்ளதாகவும், இதற்காகலண்டனில்இருந்துபாகிஸ்தான் செல்லவுள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார். (ரி)

# பதான் சகோதரர்களின் அக்கடமி

இந்திய கிரிக்கெட் வீரர்களான யூசுப் பதான் மற்றும் இர்பான் பதான் ஆகியோர் தங்களது கனவுத்திட்டமாக இருந்த கிரிக்கெட் அக்கடமியை தங்களது சொந்த ஊரான பரோடாவில் நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளர் கிரேக் சப்பல் மற்றும் கமரூன் டிரேடலுடன் இணைந்து இந்த பயிற்சி அக்கடமியை ஆரம்பித்து இருக்கிறார்கள்.

அடுத்த மாத இறுதி முதல் பயிற்சிகளை வழங்க திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. ஒரு பயிற்சி நெறிக்கு 10 ஆயிரம் ரூபா முதல் 15 ஆயிரம் ரூபா வரை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 3 முக்கிய நகரங்களில் அக்கடமிகளை ஆரம்பிக்கவும் முடிவு செய்துள்ளனர். அதன்பிறகு, நாடு முழுவதும் 50 அக்கடமிகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த அக்கடமிகளில் பயிற்சிய ளிக்கும் பயிற்சியாளர்களுக்கு கிரேக் சப்பல் மற்றும் கமரூன் டிரேடல் பயிற்சி அளித்து வழி நடத்தி செல்லவுள்ளனர்.

புதிய கிரிக்கெட் அக்கடமி பற்றி செய்தியாளர்களிடம் பேசிய இர்பான் பதான், 'இது எங் களுடைய நீண்ட நாள் கனவு. நாங்கள் கிரிக்கெட் டுக்கு ஏதா வது செய்ய வேண்டும் என நினைக்கிறோம். பயிற்சி வகுப் புகள் 8 முதல் 9 வாரங்கள் வரை இருக்கும். வருடத்திற்கு 3 கற்கை நெறிகள், என ஆண்டு முழுவதும் இந்த பயிற்சிகள் வழங்கப்படும். இதற்காக 7 மாதங்களாக திட்டமிட் டோம் என்று கூறினார். (ரி)



## இன்றைய CLT-20 ஆட்டங்கள்

| தகுதியாட்டம் 1 | | தகுதியாட்டம் 2 | |
|---|---|---|---|
| KNIGHTS | VS SOUTHERN EXPRESS | MUMBAI INDIANS | VS LAHORE LIONS |
| நோர்தன் நைட்ஸ் | சௌர்தன் எக்ஸ்பிரஸ் | மும்பை இந்தியன்ஸ் | லாகூர் லயன்ஸ் |
| மாலை 4 மணி | | இரவு 8 மணி | |

CMYK

# உலகக்கிண்ணம் வரை ரவிசாஸ்திரி



உலகக் கிண்ணம் வரை ரவி சாஸ்திரியை இந்தியஅணியின் இயக்குநராக பதவி நீடிப்புச் செய்ய இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபை திட்டமிட்டுள்ளது.

இங்கிலாந்தில் சுற்றுப் பய ணத்தில் இந்திய அணி டெஸ்ட் தொடரை 1:3 என்ற கணக்கில் மோசமாக தோற்றது. இதனால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அணி நிர்வாகத்தில் அதி ரடி மாற்றம் செய்தது. பந்து வீச்சு மற்றும் களத்தடுப்பு பயிற்சியா ளர்களை நீக்கியது. அத்துடன் ஒருநாள் தொடரில் முன்னாள் அணித்தலைவர் ரவி சாஸ் திரியை இயக்குநராக நியமித் தது. இதற்கு பலன் அளிக்கும் வகையில் ஒரு நாள் தொடரை இந்திய அணி 3:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இந்த தொடரில் அசத்திய ரகானே, ரெய்னா, தவான் உட்பட சில வீரர்கள் ரவிசாஸ்திரியை பாராட்டி இருந்தனர்.

இந்நிலையில் உலகக்கிண்ணம் தொடர் வரை ரவிசாஸ்திரியை இந்திய அணியின் இயக்கு நராக நீடிக்க கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது. இது தொடர் பாக நிர்வாகி ஒருவர் கூறு கையில்; குறுகிய காலத்தில் ரவிசாஸ்திரி பொறுப்பை ஏற்ற பிறகு அணியில் மிகுந்த மாற் றம் காணப்பட்டது. அவர் நீடிப் பது அணியின் பலமாகக் கருதப் படுகிறது. இதனால் அவரை நீடிக்க வைப்பது தொடர்பாக விவாதித்து வருகிறோம் என் றார்.

உலகக்கிண்ணம் வரை ரவி சாஸ்திரிஅந்த பொறுப்பில் இருக்கு மாறு கிரிக்கெட் சபை கேட்டு கொள்ளும் என்று தெரிகிறது. அத்துடன் பயிற்சியாளராக இருக்கும் பிளெட்சர் தானாக முன் வந்து விலக வேண்டும் என்று கிரிக்கெட் சபை விரும்புகிறது. ரவிசாஸ்திரியை நீடிக்க வைப்பது மூலம் பிளட்சர் தானாக ஓய்வு முடிவை எடுக் கலாம் என்றும் கருதுகிறது.

ரவிசாஸ்திரி சமீபத்தில் அளித்த பேட்டியில் பிளட்சரை பாராட்டி இருந்தார். உலகக் கிண்ணம் வரை அவரை பங்கேற்கும் வகையில் வார்த்தைகளை தெரிவித்திருந்தார். அவருக்கு ஆதரவாக பேசப்போவதாக வும் கூறி இருந்தார். இந்திய அணித் தலைவர் டோனியும், பிளட்சருக்கு ஆதரவாக இருக் கின்றமையும் குறிப்பிடத்தக் கது. (ரி)

## தொடர்ச்சிகள்

### போரில்

இறுதிப் போரின் போது விடு தலைப் புலிகளின் தரப்பில் இருந்து சரணடைந்தவர்கள் மற்றும் கைதுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் பொட்டு அம் மான் இறந்துள்ளார் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனா லும் அவரது உடலைத்தான் எம்மால் மீட்க முடியவில்லை. அதேபோல் வெளிநாடுகளுக் குச் செல்லவில்லை என்பதும் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூ பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்கையில் பொட்டு அம்மான் ஹொங்கொங் நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், எம்பிம்அவரை ஒப்படைக்கப் போகின்றனர் எனவும் செய் திகள் வெளி யாகியுள்ள மையில் எவ் வித உண் மைத் தன்மையும் இல்லை.

இவ்வாறான செய்திகளைப் பரப் பும் சிலர் தமது தனிப்பட்ட தேவை களை நிறைவு செய்துகொள்ள முயற்சிக்கின்றனர். சர்வதேசத் தின் தேவைக்காகவும் புலம்பெயர் அமைப்புகளின் தேவைக்கா வும் இவ்வாறான உண்மைக் குப் புறம்பான செய்திகளை சிலர் பரப்புகின்றனர் - என்றார். (த-5)

### துப்பாக்கிகளுடன்

யில் உள்ளூர் தயாரிப்பான துப் பாக்கியை வைத்திருந்த ஒரு வர் கடந்த 28 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன் றில் முற்படுத்தப்பட்டபோது 5 ஆயிரம் ரூபா அபரா தம் விதிக்கப்பட்டது.

அம்பாள்குளம் வவு னிக்குளம் பகுதியில் இடியன் துவக்கு வைத் திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிமன்று உத்தர விட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

### துஷ்பிரயோகத்தின்

பட்டது.

பொதுமக்கள், சிறுவர் கள், உயிரிழந்த சிறு மியின் உறவினர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். நேற்று வெள்ளிக் கிழமை பள்ளிவாசல்களில் நடைபெற்ற தொழுகையைத் தொடர்ந்து கல்முனை பிரதான வீதியில் ஊர்வலமாகக் கோஷங்களை எழுப்பிய வாறு ஆர்ப்பாட்டக்காரர்கள், காத்தான்குடி பிரதேச செயல கம் வரை சென்றனர். 'சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுங் கள்', 'சட்டத்துறையே எதிரிக்குத் துணைபோகாதே', 'சிறுவர் துஷ்பிரயோகத்தை நிறுத்து', 'சிறுவர் துஷ்பிரயோக ஒழிப்பு அதிகாரிகளே எங்கள் விடயத் திலும் கவனம் செலுத்துங்கள்' போன்ற சுலோகங்களைத் தாங் கிய பதாகைகளையும் ஆர்ப் பாட்டத்தில் கலந்துகொண் டோர் ஏந்தியிருந்தனர். ஆர்ப் பாட்டப் பேரணி காத்தான்குடி பிரதேச செயலகத்துக்கு சென்ற தும் அங்கு நிர்வாக உத்தியோ கத்தர் எஸ்.சுந்தராஜனிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. (த)

### வழிபாட்டைத்

சபாபதிப்பிள்ளை முகாமில் கட்சி ஒன்றின் ஏற்பாட்டில் கூட் டம் இடம்பெறுவதாகவும், அத னைத் தடுத்து நிறுத்துமாறும் பொலிஸாருக்கு இனந்தெரியாத வர்களிடமிருந்து அழைப்பு வந்தது. அங்கு சென்று என்ன நடக்கிறது என்று பார்த்து வரு மாறு பொலிஸாரைச் சிவில் உடையில் அனுப்பினோம். அங்கு சென்றபோது அங்கு எந்தவிதமான ஏற்பாடுகளும் இருக்கவில்லை. அது தொடர் பில் தொலைபேசியில் தகவல் தரப்பட்டதே அன்றி எவரும் முறைப்பாடு செய்யவில்லை. அங்கு ஏதாவது இடம்பெற்றால் அது தொடர்பில் அறிவிக்குமாறு கூறிவிட்டு பொலிஸார் வந்தனர். அங்கு பிரார்த்தனையைப் பொலி ஸார் தடுத்து நிறுத்தவில்லை. அங்கு சென்றவர்கள் பிரார்த்த னையைத்தடுத்து நிறுத்தியமை தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது. அந்தப் பிரார்த்தனை நிகழ்வை அரசியல் பின்புல முள்ள, வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் ஏற் பாடு செய்திருந்தார். சட்டரீதி யாக இடம்பெறும் வழிபாடு களை நாம் தடுக்கமாட்டோம். சட்டத்துக்குப் புறம்பாக நடக்கும் வழிபாடுகளை நீதிமன்ற அனு மதியுடன் தடுத்து நிறுத்துவோம் - என்றார்.

ஆனால் அந்தப் பிரார்த்தனை வழிபாட்டைத் தாமே ஏற்பாடு செய்ததாகப் பூந்தளிர் பெண் கள் அமைப்பினர் தெரிவித் துள்ளனர். (த-4)

### மோ.சைக்கிள்கள்

வயதுடைய கூலித் தொழிலாளி யும் நெல்லியடியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களுமே படுகாயமடைந்தனர்.

கர்ப்பிணியை ஏற்றியவாறு அவரது கணவர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டி ருந்தபோது எதிரே வேகக்கட் டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் கள் அவர்களை மோதியதோடு அவ்வழியே தன்பாட்டில் சென்ற வாய்பேசமுடியாத தொழிலா ளியையும் மோதி வீழ்த்தியுள் ளனர் என்று ஆரம்ப விசார ணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள்களைப் பொலிஸார் பொலிஸ் நிலை யத்துக்குக் கொண்டு சென்ற னர். விபத்தில் ஐவரும் படுகாய மடைந்துள்ளனர்.

வேகமாகப் பயணித்தமையே விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலி ஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (த-4)

### 65 ஆண்டுகளுக்கு

கேட்டுள்ளார். விகாரையை மீள ஆரம்பிப்பதற்கு காணியின் உறுதி உறுதிப்படுத்த வேண்டி யது அவசியமாகவுள்ளது என வும் குறித்த கடித்த்தில் குறிப்பிட் டுள்ளார்.

இது தொடர்பில் வலி.வடக்குப் பிரதேச சபை அனுப்பி வைத் துள்ள பதிலில், "குறித்த காணி உயர் பாதுகாப்பு வலயப் பிர தேசத்தினுள் இருப்பதால் அத னைச் சென்று பார்க்க முடியாது. போர் நடவடிக்கைகளின் போது ஆவணங்கள் அழிவடைந்துள்ள மையால் உறுதிப்படுத்த முடி யாது"- என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (ற-5)

**English Personal Class**

- குறுகிய காலத்தில் துரித பயிற்சிகள்
- தேவைப்படும் திறன்களில் விசேட கவனம் தரப்படும்.
- நீண்ட அனுபவம் உள்ள பட்டதாரி ஆசிரியர்
- நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

T.P: 077 930 9740 (5224) (10)

யாழ். மாவட்டஅனைத்து திருச்சபை தலைவர்கள் மற்றும் சபை மக்கள் இணைந்து நடத்தும்

**நிலையான சமாதானத்துக்கான ஐக்கிய ஜெப பெருவிழா - 2014**

திகதி : இன்று (13.09.2014) சனிக்கிழமை
நேரம் : பி.ப 4.30
இடம் : சென்.ஜோண்ஸ் கல்லூரி மைதானம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



அனுமதி இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(52223)(10)

## மரண அறிவித்தல்

### குழந்தைவேலு யோகநாதன் (ராசா ஆசாரி)



காளி கோயிலடி கோப்பாய் மத்தியைப் பிறப் பிடமாகவும் பாடசாலை வீதி, இமையாணன் கிழக்கு உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு யோகநாதன் கடந்த (10.09.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு மற்றும் பகவதி(கனடா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான தம்பிராசா மாணிக்கம் தம்பதியரின் மருமகனும், வசந்தா தேவியின் (தங்கக்கிளி) அன்புக் கணவரும் ரதனின் பாசமிகு தந்தையும், வசந்தி (ஜேர்மனி), ஜேந்தி, சுகந்தி, உதயகுமார் (கனடா), ஜெயக்குமார்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோ தரனும், குணசேகரம்(ஜேர்மனி), மகேந்திரன் (அசோ கன்), குலசிங்கம், கோமேஸ்வரி (கிளி-கனடா), விஜிதா (லண்டன்), காலஞ்சென்ற சற்முணதேவி மற்றும் கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் கிரிதாஸ்(லண்டன்), மோகனதாஸ், பிரியதர்சினி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் சியாந்தன் (ஜேர்மனி), சுதன்(ஜேர்மனி), கோகிலா(லண்டன்), தாரகா (ஜேர்மனி), அமலன், தாரங்கா(மலேசியா), விதுஷா, வித்தியா ஆகியோரின் பாச மிகு மாமனாரும் தமிழ்மாறன் (கனடா), தமிழ்குமரன் யாழினி(கனடா), சாம்பவி (லண்டன்), சாயதி (லண்டன்), சையிந்தவி(லண்டன்) ஆகியோரின் பெரிய தந்தையும் அகிலா, கீதா, சுதா, சசிகலா, மோகனதாசன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2014) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணியளவில்காளி கோயிலடி கோப்பாய் மத்தியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இளங்காடு இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோயிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P : 077 129 6371

(52225)

**GRAPHIC DESIGNER**
Urgently Required

A Leading Printing Company looking for the experienced Designers for under given jobs

| Graphic Designer | Book Layout Designer |
|---|---|
| Brochure Layouts, Label Layouts, Handbill Layouts and Leaflets Layouts. | Book Layouts, Magazine Layouts, Newsletter Layouts. |

Requirements:

- Graphic Designer Should have knowledge of Photoshop or Illustrator.
- Book Layout Designer Should have knowledge of Indesign or CorelDraw.



Interview Time:
9.30am - 12.30pm, Monday, 15.09.2014

Candidate Should Have 1-2 Years Experience in Printing Market.

ANDRA DIGITAL IMAGE
#379, Kasthuriyar Road, Jaffna.
0776622981, 0777481696

# அரச காணியில் அத்துமீறியிருந்தோர் நீதிமன்ற உத்தரவின் படி வெளியேற்றம்

## ஏறாவூரில் அதிரடி நடவடிக்கை

ஏறாவூர், செப். 13

ஏறாவூரில் ஒரு துண்டு அரச காணியை அத்து மீறிக் கைப்பற்றியிருந்தவர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் செவ்வாய்க்கிழமை காலை அங்கிருந்து வெளியேற்றப் பட்ட தாக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற கட்டளைச் சேவகர் (பிஸ்கால்) அரியரதி புவனேந்திரராஜா தெரிவித்தார்.

ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவுக்குள் அடங்கும் ஏறாவூர் 6 ஆம் கிராம சேவகர் பிரிவில் உள்ள ஆற்றங் கரை வெட்டை பன்புல்லுப் பூமி என்று அழைக்கப்படும் 0.3641 பரப்புக் காணியில் அத்துமீறியிருந்தோரே வெளி யேற் றப்பட்டனர்.

இது குறித்து தெரிய வருவதாவது:-

குறித்த அரச காணியை ஒருவர் சட்டவிரோதமாகக் கைப்பற்றி அதனை ஆட்சி புரிவதாக ஏறாவூர் பிரதேச செயலாளரால் வழக் குத் தொடரப்பட்டிருந்தது. அந்த வழக்கின் பிரகாரம் காணியில் அத்து மீறியிருந்தோர் வெளியேறுமாறு பணிக்கப்பட்டனர்.

அத்துமீறி குடியிருந்தவர்களை வெளியேற்றுவதற்காக நீதி மன்ற அதிகாரிகள் பொலிஸார் சகிதம் நேற்றுக் காலை குறித்த காணிக்குள் பிரவேசித்து அங்கிருந்தவர்களை வெளியேற்றினர்.

அதன் பின்னர் குறித்த அரச காணியின் ஒரு பிடி மண் சம் பிரதாய முறைப்படி பிரதேச செயலாளர் சார்பாக ஏறாவூர் பிர தேச செயலக நிர்வாக அதிகாரி ஜி. கிரு பாகரனிடம் நீதிமன்ற பிஸ்கால் உத்தியோ கத்தர் அரியரதி புவ னேந்திரராஜாவால் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மட் டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பிஸ்கால் அரியரதி புவனேந் திரராஜா, நீதிமன்ற அலுவலர் ஏ.சி.ஏ. ஸலாம், நீதிமன்ற கட் டளைச்சேவகர்களான வி. செல்வகுமார், என். கோணேஸ்வ ரன், பொலிஸ் அதி காரிகள் ஆர்.எம். பிரி யதர்ஷன, எஸ். சுமித் குமார், ஏறாவூர் பிர தேசசெயலக நிர் வாக அதிகாரி ஜி. கிரு பாகரன், கிராம சேவ கர் எம்.ஐ. கபீர் முஹம் மத், ஏறாவூர் நகர சபை பிரதி நகர பிதா எம்.ஐ.எம். தஸ்லிம், ஏறாவூர் நகரசபை செயலாளர் எச்.எம். எம். ஹமீம், ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங் களின் சம்மேளனத் தலைவர் ஏ.எசி.எம் ஷயீட், நகரசபை உறுப் பினர் எம்.எல். அப் துல் லத்தீப் உள்ளிட்ட பலர் கலந்து கொண் டனர்.

அத்துடன் அத்துமீறி குடியிருந்தவர்களால் குறித்த காணியில் அமைக்கப்பட்டிருந்த கொட்டிலும் வேலியும் உடனடியாக அகற் றப்பட்டன. (ஓ-10)

# காத்தான்குடி பிஸ்மி இஸ்லாமிய பாடசாலையின் பரிசளிப்பு விழா

மட்டக்களப்பு காத்தான்குடி பிஸ்மி இஸ்லாமிய பாடசாலையின் 2014 வருடாந்தப் பரிசளிப்பு விழா புதிய காத்தான்குடி கடற்கரை கடாபி பீச் கார்ட னில் இடம்பெற்றது.

பிஸ்மி இஸ்லாமிய பாடசாலையின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எஸ்.எம். நுஸ்ரி தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவில் பிரதம அதி தியாக பொத்துவில் மாவட்ட நீதிமன்றத்தின் நீதிவான் அஷ்ஷெய்க் ஐ.நௌபல் ரிஸ்வான் கலந்துகொண்டு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளுக்கு வெற்றிக் கிண்ணமும், சான்றிதழும், பரிசும் வழங்கினார். நிகழ்வில் இஸ்லாமிய கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் விடிவெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம்.பி.எம். பைரூஸ், பிஸ்மி இஸ்லாமிய மேம்பாட்டு கழகத்தின் தலைவர் மருத்துவர் எஸ்.நுஸைர், ஊர்பிரமுகர்கள், பெற்றோர்கள், பிஸ்மி குழுமத்தின் பணிப் பாளர்கள் உட்பட உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-10)

# பிரிட்டன் பிரதி உயர் ஸ்தானிகர் கல்முனைக்கு வருகை

பிரிட்டனின் இலங்கைக் கான பிரதி உயர்ஸ் தானிகர் லாரா லேவிஸ் நேற்று புதன்கிழமை கல்முனை மாநகர சபைக்கு வருகை தந்து மாநகர முதல்வர் சட் டத்தரணி எம்.நிஸாம் காரியப்பரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கல்முனை மாநகர சபையில் அமைந் துள்ள முதல்வர் செய லகத்தில் நேற்று மதி யம் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இதன்போது கல் முனைப் பிராந்தியத் தின் தற்போதைய அர சியல் மற்றும் சமூக, கலாசார விடயங்கள் போர் மீள்கட்டுமானப் பணிகள், வாழ்வாதா ரம்போன்றவை தொடர் பில் கலந்துரையாடப் பட்டது. (ஓ-10)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம் இராமலிங்கம் (இராசதுரை)



சங்கானை வீதி, பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப் பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் இராமலிங்கம் (இராசதுரை) நேற்று (12.09.2014) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - அழகம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற வர்களான தம்பு - நல்லபிள்ளை தம்பதியரின் மருமகளும், இராமலிங்கம் (இராதுரை - முன்னாள் வர்த்தகர் - அச்சுவேலி) அவர்களின் அன்பு மனைவியும், தனபாலசிங்கம் (லண்டன்), சர்வலோகநாயகி (லண்டன்), யோகநாதன் (நேரு- கனடா), சாந்தநாயகி, சிறிகாந்தராசா (காந்தன் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், சாந்தி, விஜயராணி, ஜெய்யம் (லண்டன்), மஞ்சுளாதேவி, மார்க்கண்டவாசகர் (சோமு - அச்சுவேலி), றவிச்சந்திரா ஆகியோரின் பாசமிகு மாமியும், வேவா, வசித்திரா, பிரியா, மைதிலி, மயூரி, ஆர்த்தி, பிரிந்தா, ஜெசி, ஜெய்சன், ஜெனி, அனுசா, துர்க்காதரன், வசந்தன், ஜெகதீஸ் வரன், கஜேந்திரன், நிஷாணி, சகானா, சப்றீனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அஷான், ஜசினி, திவ்யா, மகேஷ், நிசாளன், ஜானுஷன், அனுஷன், சியன்னா ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தமேனி தீர்த்தாங்குளம் உல்லிவிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சங்கானை வீதி,
பத்தமேனி, அச்சுவேலி. (52145) (45.3.6)
த.இராமலிங்கம் (கணவர்)
குடும்பத்தினர்.



### ஐயாத்துரை குணசேகரம்

சிறுப்பிட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குணசேகரம் 11.09.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அருமைக்கணவரும், ஸ்ரீகரன், ஸ்ரீசங்கர் (சுவிஸ்), ஸ்ரீஜெயந்தன் (V.N.C.o.E), சிவரூபினி(சுவிஸ்), சுதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசங்கர் (சுவிஸ்), கார்த்திகா (கல்வியங்காடு) ஆகியோரின் அன்பு மாமனாரும், மாணிக்கம், காசிப்பிள்ளை, தவமணி(சுவிஸ்), அருளம்பலம் (சுவிஸ்), சிவமணி (சுவிஸ்), குணபாலசிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற வர்களான கிருஷ்ணபிள்ளை, செல்வநாயகம், பொன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தகலட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராசவீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. (52149) (4.6.3)
குடும்பத்தினர்.
T.P: 077 858 3863

## மரண அறிவித்தல்கள்

### சதாசிவம் ஜெகதீசன் (அம்பி)



நயினாதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிட மாகவும் கொண்ட சதாசிவம் ஜெகதீசன் 06.09.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் -சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தாமோதரம் பிள்ளை மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திரமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முத் தையா- செல்லமுத்து ஆகியோரின் பெறா மகனும், காலஞ்சென்ற துரைராசாவின் அன்புச்சகோதரரும், மெற்றில்டா (கற் பிட்டி), சத்தியபாமா (டென்மார்க்), உதயகுமார் (இலங்கை), சத்திய பிரேமா(டென்மார்க்), பிரேமாவதி (டென்மார்க்), பிரேமினா (லண்டன்), பிரேமலதா (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும், ராஜன் (டென் மார்க்), உருத்திரா (இலங்கை), ஜெயந்திசிவம்(டென்மார்க்), கணேச மூர்த்தி(டென்மார்க்), ஜலால் (லண்டன்), கெங்காதரன் (டென்மார்க்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2014) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப.10.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19/2, புகையிரத நிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
021 321 0984/077 503 6118

தகவல்:
இந்திரமலர் (மனைவி)
உதயகுமார் (மைத்துனர்)
(51846)(6.4.3)



### வல்லிபுரம் செல்லத்துரை

[ஓய்வுபெற்ற நில அளவை உத்தியோகத்தர்]

துன்னாலை தெற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், முதலாம் கட்டை தம்பசிட்டி, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்லத் துரை 10.09.2014 புதன்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கோவிந்த பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பூபதியின் அன்புக் கணவரும், புஸ்பராணி, Dr. தேவகுமார் (லண்டன்), புவனேஸ்வரி (பிரான்ஸ்), செல்வக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆதித்தன் (லண்டன்), Dr.யசோதா நகுலேஸ் வரன் (பிரான்ஸ்), பவானி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், இராஜசிங்கம், செல்லையா காலஞ்சென்ற பாய்க்கியம் மற்றும் இராசம்மா, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அகிலா, அபிதா, ஆகில்யன், சிரந்தீப், பதஞ்சலி, இனியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்பசிட்டி,
பருத்தித்துறை.
T.P : 077 504 5776 (49774)(7.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## கிணற்றில் தவறி விழுந்து குழந்தை சாவு

கிளிநொச்சி,செப்.13
வீட்டுக் கிணற்றுக்குள் விழுந்த மூன்று வயதுக் குழந்தை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் பூநகரியில் நடந்துள்ளது.

செட்டிக்குறிச்சி, பூநகரியைச் சேர்ந்த ஜெ.தேனுஜா (வயது - 3) என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது. வீட்டினுள் இருந்த குழந்தை திடீரெனக் காணாமற்போனதையடுத்து வீட்டார் குழந்தையைக் தேடியுள்ளனர்.

பின்னர் குழந்தை கிணற்றில் விழுந்ததைக் கண்டு உடனடியாக குழந்தையை மீட்டு பூநகரி பிரதேச வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளது. (த-55)

## ஹெரோயின், கஞ்சா வைத்திருந்த ஐந்து பேர் வவுனியாவில் கைது

கரணவாய், செப்.13
வவுனியா மதுவரித் திணைக் களத்தினால் வவுனியா மாவட்டத் தில் சுமார் 900 மில்லிகிராம் ஹெரோயினும் 500 கிராம் கஞ் சாப் பொதிகளும் கடந்த திங்கட் கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன.

மதுவரி அத்தியட்சகர் எஸ்.மதன மோகன் பணிப்புரைக்கமைய வவுனியா மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்கள் மன்னார் பள்ளிமுனை, மன்னார் நகரம், உப்புக்குளம், சிலாவத்துறை மற் றும் முருங்கன் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின்போது சுமார் 900 மில்லிகிராம் ஹெரோயின் பொதி வைத்திருந்த ஒருவரையும் 50 கிராம் அடங்கிய கஞ்சாப் பொதி வைத்திருந்த் நால்வரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களையும் மன்னார் மாவட்ட நீதிவான்முன்னிலையில்வவுனியா மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி பி.ரகுநாதன் குழுவினர் முன்னி லைப்படுத்தியபோது சந்தேகநபர்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டனர்.

இதனை அடுத்து நான்கு பேருக் கும் 40 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-108)

## ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு ரூ. 60 மில்லியன் செலவில் கட்டடம்

யாழ்ப்பாணம், செப். 13
ஊர்காவற்றுறை ஆதார வைத்தி யசாலையின் வெளிநோயாளர் பிரிவை 60 மில்லியன் ரூபா செலவில் கட்டுவதற்கு வடக்கு மாகாண அமைச்சரவை வழங் கிய அங்கீகாரத்தின் அடிப்படை யில் நேற்று அதற்குரிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவு கட்டுவதற்கு 60 மில்லியன் ரூபா டில்மா நிறுவனத்தினால் வழங்கப்பட்டது. நன்கொடை வேலைத் திட்டத்தின் கீழ் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு வடக்கு மாகாண அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதன் அடிப் படையில், வடக்கு மாகாண ஆளு நர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்தி ரசிறியின் அனுமதிக்கு அமை வாக இந்த வேலைத் திட்டத்தின் உடன்படிக்கை நேற்றுக் கைச் சாத்திடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண பிரதம செயலா ளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி, டில்மா நிறுவனத்தின் நம்பிக்கை நிதியத் தலைவர் டிலான் ஹரிச்சந் திரா பெர்னாண்டோ ஆகியோர் உடன்படிக்கையில் கைச்சாத் திட்டனர். இந்த வேலைத் திட்டம் ஒரு வருடத்துக்குள் நிறைவேற் றப்படும் என்பது குறிப்பிடத்தக் கது. (த-5)

## மணி விழாவும் மலர் வெளியீடும்

சுழிபுரம், செப்.13
சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் பிரம்மஸ்ரீ வரதராசக் குருக்கள் ஸ்ரீகாந்தன் மணி விழாவும் மலர் வெளியீடும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் கல்லூரி றிஸ்வே மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி சத்தியகுமாரி சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

மலர் வெளியீட்டுரையைக் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் நிகழ்த்துவார்.

மூத்த சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ மு.பாலகுருசாமி சர்மா மலரை வெளியிட்டு வைப்பார். (த-28)

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
13.06.1943

இறப்பு
15.08.2014



**டானியல் எட்வின் விஜயரத்தினம்**

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர், பிரதேசசபை உறுப்பினர்- சாவகச்சேரி)

காற்றோடு காற்றாக
காலத்தில் கலந்தவரே
பௌர்ணமிக்கு காத்திருக்க
அமாவாசை ஏந்தனையோ?
மண்ணில் நல்ல வண்ணம்
நீர் வாழ்ந்தீர் வாழ்வித்தீர்
நீளநினைந்து
நித்தமும் கைதொழுவோம்.

91, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (52220)(10) குடும்பத்தினர்.

### Personal Class

தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கும் (No Age Limit) English, Spoken with Grammer, சிங்களம் போன்ற பாடங்களும் ஏனைய பாடங்களும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (அனுமதிகளுக்கு முந்தவும்) (52218)
தொடர்பு பிரபல ஆசிரியர்
பருத்துறை வீதி,யாழ்ப்பாணம் T.P-072 3682977

### ALL OUT
Pest control service



கறையான் தொல்லையா?

உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்

தொடர்புகளுக்கு:
ந. ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200 (51108)(10)

### காணி விற்பனைக்கு

களபாவோடை, ஏழாலையில் 6 பரப்புக் காணி, வீடு, பயிர் என்பவற்றுடன் உடன் விற்பனைக்குண்டு.
தொ.பே: 077 303 6850 (47873) (4.6.3)

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கும், கோண்டாவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் 2-3 அறை, இணைந்த குளியலறை, வாகனத்தரிப்பிடம் ஆகிய வசதிகளுடன் வீடு தேவை.
தொ.பே: 078 646 6890 (52213) (4.6.3)

### அழைப்பு

வெளிப்படைத் தன்மையுடனான நிர்வாகத்தை எதிர்பார்த்தும், கடந்த கால கல்லூரி நிர்வாகத்தினதும் அவர்களின் முகவர்களினதும் செயற்திட்டங்களின் உண்மைத் தன்மையை வெளிக்கொண்டு வர வேண்டி நடாத்தப்படும் சாத்வீக கவனயீர்ப்பு போராட்டம்.
இடம் : யா/சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி முகப்பு
காலம் : 14.09.2014 ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணி

இதய சுத்தியுடன் எமது கல்லூரிக்கு சேவை செய்ய விரும்பும் அனைத்து பழைய மாணவர், நலன் விரும்பிகள் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

தங்கள் உண்மையுள்ள:
இராசநாயகம் ஸ்ரீரங்கன் (பழைய மாணவன்.) (52214) (10)

### 45ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சக ஆசிரியர் திருமதி ச.புவனேந்திரா அவர்களுடைய மாமியார்,

**திருமதி கமலம் கந்தையா**

அவர்கள் 31.08.2014 இல் காலமானார். அவரது 45ஆவது நினைவு நாளில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவிகள்.
யா/பாசையூர் சென்.அன்ரனிஸ் றோ.க.மகளிர்.வி.
யாழ்ப்பாணம். (52215)(7.6.3)

### யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்

காலம் : 27.09.2014 சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 3.00 மணி
இடம் : பிரதான மண்டபம்

பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ச. வேலழகன்
தலைவர்

(52219) (10)

ம. கந்தையா
செயலாளர்

### கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் களஞ்சியப்பொறுப்பாளராகக் கடமையாற்றிய

**ராமலிங்கம் ஞானசேகரம் (ஞானம்)**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியைக் கேட்டு ஆறாத் துயரடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்

S.V.M.Pvt.Ltd.
122, Dam Street,
colombo-12

(c/16212)

S.V. முருகேசு
154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்கு

சங்கானை மரக்கறி சந்தையில் இருந்து தென் கிழக்குப் பக்கமாக 300M தொலைவில் இரண்டு பக்க மதில், 20 தென்னை காய்க்கும் நிலையில் 4½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம். (52211) (10.6.3)
தொடர்புகொள்ள: 077 444 7905

### அறைகள் வாடகைக்கு

கருவேலடி வீதி, கொக்குவில் கிழக்கில் இரண்டு அறைகள், பிரத்தியேகக் குளியலறையுடன் வாடகைக்குண்டு.
தொ.பே: 077 918 4553 (52210) (4.6.3)

### மருந்தாளர் தேவை (Pharmacist)

456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கிவரும் வசந்தம் மருந்தகத்துக்கு மருந்தாளர் உடன் தேவை.
தொடர்பு: 076 652 9677 (52211) (10.6.3)

### "சானியா கேபல் கெயர்"

262. செம்மணி வீதி, நாயன்மார்கட்டு
ஆயுள்வேத வைத்தியசாலை

- ஒரே வாரத்தில் கருமைநிற நீக்கம் உட்பட முகப்பருக்கள், கரும்புள்ளிகள், கருவளையம், உதடு கருமை நீக்கம் மற்றும் பாலுண்ணிகளுக் கான சிகிச்சை
- முடி உதிர்வு, இளநரை, பொடுகுக்கான சிகிச்சை
- உடற் பருமன் கூட்டுதல், குறைத்தல்
- அனைத்து நோய்களுக்குமான ஆலோசனையுடன் கூடிய சிகிச்சைகள் (52221) (10)
- முற்பதிவு அவசியம் 077 735 1954

### நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கம் (வ/து)

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
**கூறுவிலை கோரல்**

**NPGI - 9989 லேடன் லொறியின் உடற்கோர்ப்பு வேலைகள்**

எமது சங்கத்தின் லேடன் லொறியானது கீழ்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளைச் செய்ய வேண்டியிருப்பதால் லொறியைப் பார்வையிட்டு வேலை விவரங்கள் அடங்கிய பத்திரத்தைக் காரியாலயத்தில் பெற்று இதற்குரிய கூறுவிலையினை **29.09.2014 இற்கு முன்னர் பொதுமுகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

01.லொறிக்கு ராங் பொருத்துதல்.
02.உடற்கோர்ப்பு முழுமையாக மீள் புனரமைத்தல்.

லொறியைப் பார்வையிடும் நேரம்- வார நாள்களில் 08.30-5.00 மணிவரை

பொதுமுகாமையாளர்,
நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்,
021 222 2143 (ர/16210) (4.6.3)

## தொடர்ச்சிகள்

### முதலமைச்சர்

தியசிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தன்னைப் புகைப்படம் பிடிக்கிறார்கள் என்று முதலமைச்சர் கூறுகிறார். அவ்வாறு தனக்கு ஏதாவது பாதுகாப்புப் பற்றிய பிரச்சினைகள் இருந்தால் அது தொடர்பில் ஏன் பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை? அவ்வாறு பாதுகாப்புத் தொடர்பில் ஏதாவது இருந்தால் எமக்கு அறிவியுங்கள்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை வடக்கிலுள்ள நிலமை குறித்தே வடக்கு முதலமைச்சர் குறிப்பிட்டிருந்தார். அண்மையில் இங்கு வந்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதி கூட தன்னைப் புகைப்படம் பிடிக்கிறார்கள் எனக் கூறியிருந்தார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன. (ற-4)

### சுண்ணக்கற்கள்

பகுதி தாழ்ந்து போவதோடு சூழல் மாசடையும் நிலை ஏற்பட்டுள்ளது. கல் அகழ்வோர் சபையின் அனுமதி பெறவேண்டும். அதனை விட அகழ்ந்த கற்களை வீதியால் எடுத்துச் செல்வதற்கும் சபை வழி அனுமதிப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

இந்த நடைமுறையை பின்பற்றாது வியாபார நோக்கத்துக்காக கல் அகழ்வோர் மீது சபை சட்டத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கவுள்ளது. புத்தூர், நீர்வேலி, குட்டியப் புலம், செல்வநாயகபுரம், தம் பாலை, போன்ற பகுதிகளில் கல் கூடுதலாக அகழப்பட்டு வருகின்றன. அனேகமான பகுதிகளில் கல் அகழப்பட்டுள்ளதால் சம்பந்தப்பட்ட பகுதிகளில் நிலம் தாழ்வாக காணப்படுவதுடன் மாரி காலங்களில் வெள்ளம் தேங்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளன"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-17)

### சர்வதேச

பின் தலைவர் இரா.சம்பந்தன், 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதற்கு தயாராக உள்ள போதும், அவர்கள் பேச்சை நிராகரித்துள்ளனர் என்றும், பேச்சு நடைபெறாமல் எவ்வாறு அதிகாரங்களைப் பகிர்வது என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 'த ஹிந்து' ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்து அதே ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நாம் பேச்சுக்கு எந்த நேரமும் தயாராக இருக்கின்றோம். ஆனால் கடந்த காலங்களில் நடந்ததைப் போல், காலவரையறையின்றி பேசுவதற்கு நாம் தயாரில்லை. அத்துடன் சர்வதேச பிரசன்னத்துடன் இந்தப் பேச்சு நடைபெற வேண்டும். பேச்சுகளின் வெளிப்படைத் தன்மை வெளி உலகுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

பேச்சுக்கு தயார் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பை நாங்கள் வரவேற்கின்றோம். பொலிஸ் அதிகாரம் பரவலாக்கம் செய்யப்படமாட்டாது என்ற ஜனாதிபதியின் கருத்தை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. நாம் சட்ட - ஒழுங்கு அதிகாரத்தைத்தான் கோருகின்றோம். படையணி அமைப்பதற்கான அதிகாரத்தைக் கோரவில்லை.

13 ஆவது திருத்தத்தினுள் சட்டம் - ஒழுங்கை உள்ளடக்கிய பொலிஸ் அதிகாரம் உள்ளது. அதனை நடைமுறைப் படுத்துவதாக இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாக்குறுதி வழங்கியுள்ளார் என்பதை சுட்டிக்காட்டுகின்றேன்"- என்று இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

### தமிழ் மக்கள்

அமைச்சின் செயலாளர் கோத்தபாய அது பிரிவினைக்கே இட்டுச்செல்லும் என்று வேண்டுமென்றே தெரிவித்திருப்பதானது, தமிழ் மக்கள் மீதும் தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும், காழ்ப்புணர்வை சிங்கள மக்கள் மத்தியில் தூண்டுவதற்காகக் கூறியுள்ளார். நாட்டின் சுமுகநிலையை பாதிப்பதற்காக யாராவது ஏதாவது செய்திருந்தால் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறிய கருத்துத்தான் காரணம்"- என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவை, வரவேற்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"தமிழரசுக் கட்சியால் நிறைவேற்றப்பட்ட 15 தீர்மானங்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்த கருத்துகளை இன்று (நேற்று) 'த ஐலண்ட்' பத்திரிகை வெளியிட்டுள்ளது. அதில் கோத்தபாய ராஜபக்ஷ இந்தத் தீர்மானங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு குந்தம் விளைவிக்கும் செயல் என்றும் இது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று என்றும் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக கடமையாற்றுபவர் பல அரசியல் கருத்துக்களைச் சொல்லியிருப்பது வருத்தத்துக்குரியது. அரசியல் கூற்றாக இருப்பதால் ஏற்றுக் கொள்ள முடியாதது."- என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஒரு பொது சேவகன் செய்யக் கூடாததைச் செய்திருக்கின்றார். அந்தக் கூற்றுக்களிலேயே தனக்கு எவ்வளவு விடயங்கள் தெரிந்தவை என்பதையும் வெளிப்படையாகச் சொல்லியுள்ளார். அதிகாரப் பகிர்வு என்றால் என்ன என்பதையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். பிளவுபடாத நாட்டினுள் தீர்வு என்று நாங்கள் தீர்மானமாகச் சொல்லியிருக்கின்றோம். இருந்த போதும் அது பிரிவினைக்கு இட்டுச் செல்லும் என்று கூறுவது வேண்டுமென்றே தமிழ் மக்கள் மீதும், தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியின் மீதும் காழ்ப்புணர்வை சிங்கள மக்கள் மத்தியில் தூண்டுவதற்காகவே அவர் செய்திருக்கின்ற காரியம். நாட்டின் சுமுக நிலையைப் பாதிப்பதற்காக யாராவது ஏதாவது செய்திருந்தால் இன்று (நேற்று) பாதுகாப்பு அமைச்சின் செயலர் கூறிய கூற்றுத்தான் காரணமாக இருக்கும்"- என்றும் சுமந்திரன் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

### மஹிந்த

ருடைய சொந்த சகோதரரும், ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷதான்.

2006ஆம் ஆண்டு ஜுலை மாதம் 11ஆம் திகதி சர்வக்கட்சி மாநாட்டைக் கூட்டி அதன் முன்பாக உரையாற்றிய போது அவர்தான் இதனைத் தெரிவித்திருந்தார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிராகவே தற்போது சொல்லியிருக்கின்றார். ஜனாதிபதி நாட்டைப் பிரிக்கப் பார்க்கின்றார் என்ற குற்றச்சாட்டைத்தான் கோத்தபாய முன்வைத்துள்ளார்"- என்று சுமந்திரன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

23 பென்ஸ் கார்

"கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா அடிக்கடி ஒன்றைச் சொல்லிக்கொள்ளுவார். மற்றைய அரசியல் கட்சிகளில் இருப்பவர்கள் அரசுடன் சேர்ந்து அடுத்தடுத்த நாள்களிலேயே சுகபோகங்களை அனுபவிக்கத் தொடங்கி விடுவார்கள் என்றும், ஆனால் எங்கள் கட்சியில் சேர்பவர்கள் இருக்கின்ற பணத்தையும் இழந்துதான் போவார்கள் என்று சொல்லுவார்.

தந்தை செல்வா, ஜீ.ஜீ.பொன்னம்பலத்துக்கு முன்பதாகவே ராணி வழக்கறிஞராக பட்டம் பெற்றவர். ஆனாலும் 1972 ஆம் ஆண்டு தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டெறிந்தபோது தனது வாழ்க்கையை கொண்டுநடத்துவதற்கே கஷ்டப்பட்டிருக்கின்றார். அந்தளவுக்கு தனது சொத்துக்களை கட்சிக்காக அழித்தவர். இவ்வாறான அரசியல் பாரம்பரியம் இந்தக் கட்சிக்கே உரியது.

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் ஒரு போட்டி நடத்தப்படுவது வழமை. யார் கூடியளவான பென்ஸ் கார் வைத்திருக்கின்றார்கள் என்று கணக்கெடுத்து போட்டி முடிவு வெளியிடப்படும். அதன்படி தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களாக இருந்த ஒரு குடும்பத்தினரிடம், 23 பென்ஸ் கார்கள் இருந்தனவாம்"- என்று தெரிவித்தார். (ற-5)

### மோடி தலைமை

வலகத்துக்கு வந்திருந்தார். தலைவராகப் பதவியேற்ற பின்னர் முதன்முதலாக கட்சி அலுவலகத்துக்கு வந்த அவருக்கு, அங்கு கௌரவிப்பு நடத்தப் பட்டது. அதன்பின்னர் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாங்கள் சமஷ்டி ஆட்சி முறையில், வடக்கு - கிழக்கு இணைந்து தம்மை தாமே ஆளவேண்டும் என்றுதான் கேட்கின்றோம். கடந்த காலங்களில் இந்த அரசுகள் எங்களுக்கு அவற்றை வழங்க மறுத்தன. இதனாலேயே எங்கள் தலைவர்கள் சாத்வீக வழியில் போராட்டம் நடத்தினார்கள். பின்னர் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். தற்போது சர்வதேச சூழல் கனிந்திருக்கின்றது. இந்தியாவின் பிராந்திய பலத்தை நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அவற்றைச் சரிவரப் பயன்படுத்தி நாம் எமக்கான அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டும்."- என்றும் அவர் தனது உரையின்போது சுட்டிக்காட்டினார்.

"13 ஆவது திருத்தத்தில் ஒன்றுமில்லை என்று முற்றாகச் சொல்ல முடியாது. அதில் சில சரத்துக்கள் இருக்கின்றன. ஆனால் இந்த அரசு நடைமுறைப்படுத்தவிடவில்லை என்பதுதான் உண்மை. எமது மக்கள் மாகாண சபை கிடைத்தவுடன் எங்கள் அரசு கிடைத்துவிட்டது என்று அளவு கடந்த மகிழ்ச்சியடைந்தார்கள்."- என்றும் அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.

"இலங்கை அரசு இனப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. கடந்த 60 வருடங்களிலும் பார்க்க, இறுதிப் போர் முடிந்த 5 வருடங்களில் அந்தச் செயற் பாடுகள் வலு வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது." என்று குறிப்பிட்ட அவர், "இந்தியாவின் கடந்த அரசில் சில குறைப்பாடுகள் இருந் தன. கடந்த ஆட்சியை நடத் திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி தனது கணவரது உயிரிழப்பு தொடர்பில் கொண்டிருந்த அபிப்பிராயங்கள் காரணமாக அந்தக் குறைகள் இருந்தன. ஆனால் புதிய அரசு, எமது விடயம் தொடர்பில் புதிய கொள்கையுடன் செயற்படும்"- என்றும் நம்பிக்கை வெளியிட்டார். (ற-5)

### கிளிநொச்சியில்

கிளிநொச்சி பரந்தன் பகுதி யில் கடந்த வாரம் வீடொன்று உடைக்கப்பட்டு ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் பணம் என்பன திருடப்பட்டிருந்தன. இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட கிளிநொச்சிப் பொலிஸார் நேற்று இந்த ஐந்து சந்தேகநபர்களையும் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து கோடரி, உருக்கப்பட்ட தங்க நகைக் கட்டிகள் என்பவற்றையும் தாம் மீட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்கொண்ட விசாரணைகளில் இவர்களுக்கு புதுக்குடியிருப்பு பகுதியில் இடம்பெற்ற நான்கு திருட்டுச் சம்பவங்களுடனும் மாங்குளத்தில் இடம்பெற்ற கொள்ளையுடனும் பூநகரி மற்றும் கிளிநொச்சியில் இடம்பெற்ற கொள்ளைகளுடனும் தொடர்பிருப்பது தெரிய வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் இன்றைய தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட வுள்ளனர். (உ-55)

### அருண்

சந்திப்புக்கான அனுமதியைக் கோரும் கடிதமொன்றை அவர்கள் உள்துறை அமைச்சுக்கு அனுப்பி வைக்கவுள்ளனர்.

ஹைதராபாத்தில் ஐஸ் இவெண்ட்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வந்த அருண் செல்வராஜன் என்ற இலங்கைப் பிரஜையைச் சில மாத காலமாகத் தாம் கண்காணித்து வந்தனர் என்றும் அதன் பின்னரே அவரைக் கைதுசெய்தனர் என்றும் இந்திய தேசியப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை,

பாகிஸ்தானுக்காக வேவு பார்த்தார் என்ற சந்தேகத்தில் இந்தியாவில் கைதுசெய்யப்பட்டுள்ள இலங்கையரான அருண் செல்வராஜன் பல முக்கிய தகவல்களை இந்திய தேசியப் புலனாய்வுப் பணியகத்திடம் வழங்கியுள்ளார் என்று செய்தி வெளியாகியுள்ளது. பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ உடன் இணைந்து பணியாற்றினார் என்று சந்தேகிக்கப்படும் இலங்கை தமிழரான அருண் சென்னை துறைமுகம், கல்பாக்கம் அணுமின்நிலையம், கொச்சி துறைமுகம் போன்றவற்றின் வரைபடங்களை பாகிஸ்தானுக்கு வழங்கியுள்ளார் என்பதை விசாரணையின்போது தெரிவித்துள்ளார். சென்னையிலுள்ள அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி போன்றவற்றின் விவரங்களையும் இவர் வழங்கியுள்ளார். அத்துடன் தான் சேகரித்து வைத்திருக்கும் விசாகப் பட்டினம் துறைமுகம் குறித்த தகவல்களை இன்னமும் கையளிக்கவில்லை எனவும் அருண் தெரிவித்துள்ளார். இதேவேளை குறிப்பிட்ட சந்தேகநபரை ஹைதராபாத் பொலிஸார் தங்களுடைய பொறுப்பில் எடுத்து விசாரிப்பதற்கான அனுமதியை கோரியுள்ளனர். அருண் ஹைதராபாத்க்கும் வந்துள்ளார். அதனால் அவர் அங்கு என்ன செய்தார் என்பதை அறிய விரும்புகிறோம் என ஹைதராபாத் பொலிஸார் தெரிவிக்கின்றனர். பாகிஸ்தான் உளவுப் பிரிவினர் அவரிடம், விசாகப்பட்டினம் கடற்படைத்தளம், நீர்மூழ்கிகள் போன்றவற்றின் தகவல்களை வழங்குமாறு கேட்டதாக அறிகிறோம். ஆனால் அவர் இன்னும் இந்த விடயத்தைக் கையளிக்கவில்லை. ஆனால் இந்தப் பகுதிகளுக்குச் சென்று தகவல்களைச் சேகரித்துள்ளார் என்றும் ஹைதராபாத் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் விசா பிரிவில் பணியாற்றிய சித்திக் என்ற பாகிஸ்தானியருக்கு அருண் தகவல்களை வழங்கி வந்துள்ளார். கடந்த மூன்று வருடங்களில் முக்கிய தகவல்களை வழங்குவதற்காகப் பாகிஸ்தான் அருணுக்கு 3 கோடி இந்திய ரூபா வரை வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த)

### மாகாண

தில் இயங்கி வருவதால் வன்னிப் பெருநிலப்பரப்பைச் சேர்ந்த மக்கள் தமது தேவைகள் தொடர்பாக யாழ்ப்பாணத்துக்கு வந்து செல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பொதுமக்கள் இதனைச் சுட்டிக்காட்டியதையடுத்து இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதை அடுத்து முதலாவது செயற்பாடாக நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தற்காலிக அடிப்படையில் பணியாற்றிய 6 சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாங்குளம் இணைப்பு அலுவலகம் ஏனைய மாகாண அலுவலகங்களைப் போல சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய ஐந்து நாள்களும் இயங்கும் எனவும், இந்த அலுவலகத்தில் வாரத்தில் ஒருநாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனை பொதுமக்கள் சந்திக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

### கர்ப்பிணியை

எட்டு மாதங்களுக்கு முன்னர் காதலித்துத் திருமணம் செய்து தனியாக வீடொன்றை வாடகைக்கு எடுத்து அவர்கள் நுணாவிலில் குடியிருந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் மதுபோதையில் வந்த கணவன் தனது தாய் வீட்டுக்குப் போகவேண்டுமெனக் கூறிக் கர்ப்பிணிப் பெண்ணை அழைத்துச் சென்று இடை வழியில் உள்ள மயானத்தில் வைத்துஆடைகளைக் களைந்து தாக்கிக் காயப்படுத்திய பின்னர் அங்கேயே விட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

கர்ப்பிணியான இவர் மருத்துவமனையின் பிரசவ விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மேலும் ஒரு 19 வயது பெண் கணவனால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் நேற்று அனுமதிக்கப்பட்டார். (த-9)

### தமிழரசுக் கட்சியின்

சியின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அநேகமாக பிரிவினைவாத உணர்வுகளை எழுப்புவதாகக் காணப்படுவதாகவும், இலங்கை அரசைப் பலவீனமான தாக்கும் நோக்கம் கொண்டவையாக இருப்பதாகவும் தெரிவித்த பாதுகாப்புச் செயலர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தந்திரங்களுக்கு ஆதரவு வழங்கும் சர்வதேச சமூகத்தினரும், உள்ளூர் அரசியல் கட்சிகளும் இந்தத் தீர்மானங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கவேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார்.

மேலும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டிருந்தமை சட்ட விரோதமானதென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால் அவற்றை மீண்டும் இணைப்பது சாத்தியமானதல்லவெனவும் பாதுகாப்புச் செயலர் தெரிவித்தார்.

காணாமற்போனோர் தொடர்பில் அவர் கருத்து வெளியிடுகையில்,

காணாமற்போனவர்களில் பலரை வெளிநாடுகளில் காண முடியும். இலங்கைத் தமிழரசுக் கட்சி மேற்கு நாடுகளின் தூதரங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி அவர்களைக் கண்டு பிடிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

மேலும் வடக்கு-கிழக்கு மாவட்டங்களில் பெண்களும், சிறுவர்களும் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகி வருவதாக இலங்கைத் தமிழரசுக் கட்சி பொய்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக தீர்மான இல 3 மற்றும் 15 ஆகிய வற்றை கோத்தபாய சுட்டிக் காட்டினார்.

தமிழர்களும், சர்வதேச சமூகத்தினரும் இவர்களின் பொய்களால் ஏமாற்றப்படக் கூடாது எனவும் அவர் மேலும் கூறினார். (த-க)

### மண்கும்பானில்

நேற்று மதியம் 2 மணியளவில் கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

சடலத்தின் வலது கையில் மணிக்கட்டிலிருந்து சற்று மேலாக பச்சை குத்தப்பட்டிருக்கிறது. இடுப்பில் கூடுடன் இணைந்த நூல் கட்டப்பட்டுள்ளது. பச்சைநிற உள்ளாடை அணிந்துள்ளார். சுமார் 35 வயது மதிக்கத்தக்க அவரது தலை மோசமாக உருக்குலைந்துள்ளது. குறித்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.13
2012-2014 ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சியை முடித்து வெளியேறிய ஆசிரியர் உதவி யாளர்களுக்கான கலந்துரை யாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உயர் கல்வி நிறுவனத்தில் நடை பெறவுள்ளது. ஆசிரியர் சேவை 3 - I இற்குள் உள்வாங்கப்படுதல் தொடர்பான நடவடிக்கையை மேற்கொள்ள உள்ளதால் சம்பந்தப்படுவோர் தத்தமது நியமனக் கடிதம், அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்படப் பிரதியைக் கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றத் தவறுவோர் பெயர்விரம்பெயர்ப் பட்டியலில் இடம் பெறமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## கண்டிச் சீமையில் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.13
மலை நாட்டு எழுத்தாளர் சங்கத்தின் அனுசரணையில் சட்டத்தரணி இரா. சடகோபனின் 'கண்டிச் சீமையில்' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது. நூலின் வெளியீடு புரவலர் ஹாசீம் உமர் முன்னிலையில் பேராசிரியர் சோ.சந்திரசேகரனின் தலைமையில் நடைபெறும். (வ)

# மட்டு. சிறைச்சாலையின் ஏற்பாட்டில் மனித நேயம் பேணும் சிரமதானம்



மட்டக்களப்பு, செப்.13
ஸ்ரீலங்கா சிறைக்கைதிகள் நலன்புரி சங்கம் மற்றும் ஸ்ரீலங்கா சிறைக்கைதிகள் திணைக்களத்தின் கூட்டுமுயற்சியில் சிறைக் கைதிகளும் மனிதர்களே அவர்களுக்கு உதவியளிப்போம் என்ற தொனிப்பொருளில் இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதன் ஓர் அங்கமாக மட்டக்களப்பு சிறைச்சாலை ஏற்பாடு செய்த மனித நேயம் பேணும் சிரமதான நிகழ்வு புதன்கிழமை மட்டக்களப்பு மத்திய பஸ் தரிப்பு நிலையத்துக்கு அருகாமையிலுள்ள மட்டக்களப்பு லேக் வீதி கரையோரப்பகுதியில் இடம்பெற்றது.
மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் எஸ்.பி.பிரியங்கர தலைமையில் இடம்பெற்ற இந்த மனித நேயம் பேணும் சிரமதான நிகழ்வில் மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதான அதிகாரி ஆர்.மோகனராஜா, சிறைச்சாலையின் அதிகாரி அருள்வண்ணன், சிறைச்சாலை நலன்புரி உத்தியோகத்தர் எல்.ஜெயசுதாகரன் உட்பட சிறைச்சாலை அதிகாரிகள், சிறைக் கைதிகள் பலரும் கலந்துகொண்டனர்.
இதன்போது மட்டக்களப்பு சிறைச்சாலையின் சுமார் 15 கைதிகளினால் மட்டக்களப்பு லேக் வீதி கரையோரப்பகுதி மனிதநேயம் பேணும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. (வ)

# சிறுமி படுகொலை குறித்த கண்டன ஆர்ப்பாட்ட பேரணி





மட்டக்களப்பு, செப்.13
மட்டக்களப்பு, காத்தான்குடியில் 8 வயது சிறுமியான எஸ்.பாத்திமா சீமா, துஷ்பிரயோகம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் சிறுமியை கொலை செய்ததாகக் கூறப்படும் ஐ.எம்.றமழான் என்ற சந்தேக நபருக்கு சாவுத் தண்டனை வழங்கக்கோரி காத்தான்குடியில் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்ட பேரணி நடைபெற்றது.
காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும் ஆ பள்ளிவாசலில் ஜும்மா தொழுகையின் பின்னர் காத்தான்குடி பிரதான வீதியில் ஒன்று கூடிய பொது மக்கள் மற்றும் இளைஞர்கள் சுலோகங்களை தாங்கி பேரணியாக காத்தான்குடி பிரதான வீதி வழியாக காத்தான்குடி பிரதேச செயலகம் வரை சென்றனர்.
ஆர்ப்பாட்டப் பேரணியில் சென்றவர்கள் சிறுவர் துஷ்பிரயோகத்தை நிறுத்து. சிறுவர்களாகிய எங்கள் விடயத்தில் அக்கறை செலுத்துங்கள், சட்டத்துறையே எதிரிக்கு துணைபோகாதே, சட்டத்தரணிகளே கொலைகாரர்களுக்கு ஆதரவாக உதவிசெய்யாதீர்கள், கொலைகாரனுக்கு கருணை காட்டதீர்கள் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை தாங்கியிருந்தனர். ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் காத்தான்குடி பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் ஆர்.சுந்தராஜாவிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. (வ)

# ஊவா மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் கூட்டமைப்பின் வெற்றி உறுதி

## வட மாகாண சபை உறுப்பினர் ரயீஸ் தெரிவிப்பு

கொழும்பு, செப், 13
நடைபெற உள்ள ஊவா மாகாண சபைத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் போட்டியிடும் முஸ்லிம் கூட்டமைப்பான இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் வெற்றிபெறும் எல்லைக்கு வந்துள்ளனர் என்று வடமாகாண சபை உறுப்பினர் எச்.எம்.ரயீஸ் தெரிவித்துள்ளார்.
ஊவா மாகாண சபைத் தேர்தல் குறித்து கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இதன்போது அவர் தொடர்ந்து பேசுகையில்;
பதுளை மாவட்டத்தில் போட்டியிடும் முஸ்லிம் கூட்டமைப்பான இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் வெற்றிபெறும் நிலையில் உள்ளனர். அதிலும் குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களின் வெற்றி உறுதியானது. இந்த வெற்றியை உறுதி செய்யும் நோக்கோடு முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண, மாநகர, பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் எல்லோரும் வாக்குச் சேகரிப்பில் ஈடுபடுகிறோம். எங்களுடன் ஆயிரக்கணக்கான இளைஞர்களும் களம் இறங்கி உள்ளனர்.
ஊவாவில் வாழும் எமது முஸ்லிம்களின் உரிமைக்குரல் ஊவா மாகாண சபையில் ஒலிக்கவும், அந்த மக்களின் துயர் துடைக்கவும் ரவூப் ஹக்கீம் வரலாற்று ரீதியான விட்டுகொடுப்புக்களை செய்து சாணக்கியமான அரசியல் காய் நகர்த்தல்களை செய்துள்ளார். புதியதோர் அரசியல் கலாசாரத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார். அதன் வெளிப்பாடுதான் புதிய முஸ்லிம் கூட்டமைப்பு என்று தெரிவித்தார். (வ-10)

# குற்றங்களும் கைதுகளும்



## குற்றங்கள் தொடர்பில் கடந்தவாரம் 240 பேர் கைது

வலி.வடக்கு, செப். 13
யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் கடந்த இரண்டு வார காலத்தில் பல்வேறு குற்றங்களுடனும் தொடர்புடைய 240 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு.ஐ.விமல சேனா தெரிவித் துள்ளார்.
யாழ்ப்பாணம் ஊடகவியலாளர்களுக்கும் யாழ். மாவட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையே இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை நடைபெறும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட் சகர் பிரிவில் உள்ள 9 பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு உரிய நீதிமன்றங் களில் அவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.
பிறரை அடித்துக்காயப்படுத்திய குற்றத்தில் 36 பேரும், சுற்றுச் சூழல் மாசடைத்தல் தொடர்பாக 3 பேரும், பாதுகாப்புக் காரணங்களுக்காக ஒருவரும், சமாதானத்தை சீர் குலைக்கும் வகையில் நடந்து கொண்ட ஒருவரும்–
வீட்டினுள் அத்து மீறி பிரவேசித்த குற்றத்தில் இருவரும், அனுமதிப்பத்திரம் இன்றி மது விற்பனையில் ஈடுபட்ட 27 பேரும், வாகன விபத்து தொடர்பாக 4 பேரும், மோசடி தொடர்பில் ஒருவரும், களவு தொடர்பில் 9 பேரும், குடிபோதையில் கலகம் விளைவித்த குற்றத்தில் 8 பேரும்–



சந்தேகத்தின் பெயரில் 25 பேரும், குடிபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்தில் 8 பேரும், வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்து வியாபாரம் செய்த குற்றத்தில் 4 பேரும், மிருக வதை சட்டத்தின் கீழ் 2 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றத்தில் 59 பேரும்–
பொது இடத்தில் மது அருந்திய குற்றத்தில் 37 பேரும், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் ஒருவரும் ஏனைய குற்றங்கள் தொடர்பில் 12 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-86)

### பொது இடத்தில் மது அருந்திய நபருக்கு சமூகப்பணி

தென்மராட்சி, செப்.13
நாவற்குழிப் பகுதியிலுள்ள பொது இடம் ஒன்றில் வைத்து மது அருந்திய இருவரை 80 மணி நேர சமூகப் பணியில் ஈடுபடுமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து ஆறுமாத காலத்தினுள் 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயங்கள் சீர் திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (வ-9)

### அனுமதியின்றி சாராயம் கொண்டுசென்ற குற்றம்

தென்மராட்சி, செப்.13
அனுமதிப்பத்திரமின்றி 13 போத்தல் சாராயத்தை வாகனத்தில் கொண்டு சென்ற நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

### சாரதிகள் இருவருக்கு தண்டம்

கிளிநொச்சி, செப்.13
மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிகள் இருவருக்கு கிளிநொச்சி நீதிமன்றம் நேற்று தலா 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்துள்ளது.
பரந்தன் பகுதியில் மது போதையில் வாகனம் செலுத்திய இருவரை போக்குவரத்து பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்து நேற்று கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். இதன்போது தமது குற்றத்தை ஒப்புக் கொண்ட சாரதிகள் இருவருக்கும் இந்தத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (வ-18)

### 20 ஆயிரம் ரூபா தண்டம்

கிளிநொச்சி, செப்.13
24 பாலை மரத்துண்டுகளை டிராக்டரில் அனுமதியின்றி ஏற்றிச்சென்ற நபர் ஒருவருக்கு கிளி நொச்சி நீதிமன்றம் நேற்று 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.
பூநகரியின் முக்கொம்பனுக்கும் அரசபுரத்துக்கும் இடையில் பூநகரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட குறித்த நபர் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் மேற்படி தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தார். (வ-18)

C MYK

## ஒட்டுசுட்டானில் மினி சூறாவளி

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நேற்று மாலை வீசிய மாழையுடன் கூடிய மினி சூறாவளியால் பல வீடுகள் சிறு சேதமடைந்ததுடன் ஒரு வீடு பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது. நேற்று பி.ப. 3 மணியளவில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கடும் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்ததுடன் மினி சூறாவளியும் வீசியுள்ளது. இதனால் பல வீடுகள் சேதமடைந்ததுடன் கற்சிலைமடு கிராம அலுவலர் பிரிவுக் குட்பட்ட ராசையா பார்த்தீபன் என்பவரது வீட்டுக் கூரைகள் தூக்கி வீசப் பட்டுள்ளது. இதனால் வீட்டிலிருந்த பெறுமதி யான பொருள்களுக்கு சேதங்கள் ஏற்பட்டன.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 12 . 08 . 1955

விண்ணில் 24 . 09 . 2013

அமரர்

## அப்பாக்குட்டி சிங்கராஜா

(இலங்கை மின்சார சபை)

மறைந்தும் மறையாமல் எம் உள்ளத்தில்
உறைந்து நிற்கின்ற அப்பாவே!
ஒளிர்கின்ற தீபத்தின் விரிகின்ற ஒளிச்சுடரே!
ஆண்டவன் அடி அழைத்து
ஆண்டு ஒன்று ஆனதே- அப்பா!
எம்மைவிட்டுப் பிரிந்த துயர்தனை
சுமந்த வண்ணம் இன்றைய தினம்
உங்கள் முதலாம் ஆண்டு நினைவு
நாளில் நினைவு கூர்ந்து பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

0779545406

மனைவி, பிள்ளைகள்


### கிராபிக்ஸ் டிசைனர் தேவை

Photo Shop இல் முன் அனுபவமுள்ளவர்கள் தேவை
ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு
நேரில் சமுகம் தரவும்
தொடர்புகளுக்கு:
லக்சுமி டிஜிற்றல் கலர் லாப்
சங்கானை.
(HNB BANK க்கு அருகாமை)

### இவ்வார வெற்றியாளர்கள்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
Draw
1. த.திஷானி - யாழ்ப்பாணம்
2. அ.துஷாந்தன் - கிளிநொச்சி
3. செ.நந்தமோகன் - வவுனியா
Mobile 0773083820

| | | |
|---|---|---|
| கொழும்பு – டுபாய் | 20000/= | One way |
| கொழும்பு – மலேசியா | 32000/= | Return |
| கொழும்பு – சிங்கபூர் | 30800/= | Return |
| கொழும்பு – பிரான்ஸ் | 45500/= | One way |
| கொழும்பு – ஜேர்மனி | 72300/= | Return |
| கொழும்பு – லண்டன் | 45400/= | One way |
| கொழும்பு – சுவிஸ் | 83500/= | Return |
| கொழும்பு – கனடா | 105700/= | One way |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்
Nation Popular Travels & Tours
#128, Brown Road, Jaffna
128.பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
Hot line 0114651199 Jaffna 0214920920

### கணினி மலிவு விற்பனை
COMPUTER SALE
hp FULL SET COMPUTER
17" LCD MONITER
FREE-H.PHONE/ PENDRIVE/ SKYPE
ONE YEAR WARRANTY
24,750/= மட்டுமே!
ST.ANTONY'S
187 K.K.S ROAD, JAFFNA TOWN
(C/16214) 021 222 4865 / 0750698608

### மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்!
எமது தள்ளுபடி
இன்னும்
3 நாள்கள் மட்டுமே.
இல. 15, சிவப்பிரகாசம் வீதி,(தட்டாதெரு)
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 398 0195 / 077 35 83 879

### Drive your Vehicle
நாங்கள் தருகிறோம் நீங்களே ஓட்டிச் செல்லுங்கள்
கார்கள்
கப்கள்
வான்கள்
பஸ்
லொறி
PEAKING RENT A CAR
அழையுங்கள் 0777484820

### Sky Computers (Pvt) Ltd
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம்
15-09-2014 021-222-1417
கட்டணக் கழிவு 20%
Ms office 2013, Internet & E-mail, Graphic Design, Video Mixing, DTP, Hardware, Computer Type Setting, Web Design, Kids Programme.
இலவசம்! இலவசம்! இலவசம்!, இலவசம்.......!
20.09.2014 ற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களிற்கு சிங்களம் இலவசமாக கற்பிக்கப்படும்.
89,கண்டி றோட், யாழ்ப்பாணம்.(கச்சேரிக்கு அருகாமையில்)

### நிலப்பதிப்புக்கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு
Inter Lock Paving Stone
உறுதியான பல வடிவங்களில்
கறுப்பு,சிவப்பு, வெள்ளை நிற
நிலப்பதிப்புக்கற்களை (Interlock)
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
தொடர்புகளுக்கு
077 3818799
உங்கள் இருப்பிடத்திற்கு இறக்கித்தரப்படும்.
பிரணவன் என்ரபிறைசஸ்
635, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
வவுனியா காட்சியறையிலும் பார்வையிடலாம்

### Wanted
மூன்று வருடத்துக்கு மேல்
அனுபவம் உள்ளவர்கள் தேவை
• Video Editor
• Graphic Designer
தொடர்பு: Raja 076 655 7757
(அனுபவம் உள்ளவர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும்)
வெளிநாடுகளில் நன்மதிப்புப் பெற்ற வீடியோ ஸ்ருடியோ

### டுபாய் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் அதியுயர் சம்பளத்துடன் கீழ்க்காணும் வேலைவாய்ப்பு உடனடியாக காத்திருக்கின்றன.

Car washer 40 பேர் உடன் தேவை.

| | |
|---|---|
| Basic Salary | 750 DHS |
| Commission | 5 DHS Per car |
| Other benefit | Tips & OT |

தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்
கைவசம் வீசா உள்ளதால்
மிகக் குறுகிய காலத்தில் பயணம்
(மாதம் 80,000இற்கு மேல் சம்பளம் பெறக்கூடியது)
இடம்: உதயன் விருந்தினர் விடுதி
இல. 20, கன்னாதிட்டி ஒழுங்கை,
காளிகோயில் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: நாளை 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மு.ப. 10.00 – பி.ப. 3.00 மணி வரை
ஆவணங்கள்: பாஸ்போட், சுயவிபரக்கோவை, Photo
முக்கிய குறிப்பு: வங்கிக் கடன் வசதியும் பெற்றுத் தரப்படும்.
உடன் தொடர்பு கொள்ள :
Lanka Voice Adve (Jaffna) : 077 952 7575
Lanka Voice Adve (Vavuniya, Mannar) : 076 669 7789
Capital Recruitment International (Pvt) Ltd.
No. 130 3/1, 3rd Floor Grand Pass, Colombo 14.
L/L No-2248
(C 16586) (7.6.3)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்
வங்கியியல் கற்கை நெறிகள்
வங்கியில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள
IABF, DABF
கணக்கீட்டு
தொழில்நுட்பவியலாளராவதற்கு
aat
Foundation, Intermediate & Final
பட்டயக் கணக்காளராகுவதற்கு
CA (SriLanka)
Executive Level, Business Level
Further Details:
JAFFNA COLLEGE
UNDERGRADUATE DEPT.
464, Hospital Road, Jaffna.
021 222 3382

### கட்டார் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் அதிஉயர் சம்பளத்துடன் கீழ்க் காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

| Category | QTY | Monthly Salary (QR) AC |
|---|---|---|
| Technician | 05 | 1600 - 1900 + OT |
| Plumber | 04 | 1800 - 2000 + OT |
| Electrical Technician | 03 | 1600 - 1900 + OT |
| Handyman | 03 | 1600 - 1800 + OT |
| HVAC Techician | 06 | 1700 - 2000 + OT |
| Painter | 03 | 1400 - 1600 + OT |
| Grader Operator | 05 | 1500 + 500 + OT |
| Dozer Operator | 05 | 1500 + 500 + OT |
| Punctury | 06 | 1500 + 500 + OT |
| Diesel Operator | 06 | 1500 + 500 + OT |
| Excavator Operator | 05 | 1500 + 500 + OT |
| Auto Electrician | 05 | 1300 + 300 + OT |
| Shuttering Carpenter | 05 | 1100 + 300 + OT |
| Van Sales Man | 05 | 1500 + 300 + OT |
| Garden Helper (Age 30-55) | 10 | 1000 + OT |

தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்.
இடம்: உதயன் விருந்தினர் விடுதி
இல. 20, கன்னாதிட்டி ஒழுங்கை,
காளிகோயில் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: நாளை 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மு.ப. 10.00 – பி.ப. 3.00 மணி வரை
ஆவணங்கள்: பாஸ்போட், சுயவிபரக்கோவை, Photo
முக்கிய குறிப்பு: வங்கிக் கடன் வசதியும் பெற்றுத் தரப்படும்.
உடன் தொடர்பு கொள்ள :
Lanka Voice Adve (Jaffna) : 077 952 7575
Lanka Voice Adve (Mannar Vavuniya - 076 669 7789
Capital Recruitment International (Pvt) Ltd.
No. 130 3/1, 3rd Floor Grand Pass, Colombo 14.
L/L No-2248
(C 16585) (7.6.3)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.